Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර් ஒக்.31-நவ.06,1999 ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 333

## விரிந்து செல்லும் போர் அரங்கு

## வெண் தாமரையும் வீரவிதானவும்



## சாரத்குமாருடன் நடிக்க மறுத்தது ஏன்?

## விஜய்க்கு எதிராகச் சதி?

## கலைஞர் ஆட்சியில் தொடரும் கடத்தல்!

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## பேச்சாளர்களாக மாறலாமா?

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

பலாலியில்
காணிகள் சுவீகரிக்கப்படமாட்டாது
என்று ஜனாதிபதி கூறினாராம்.

தமிழ்க்கட்சிகளுக்கு போட்டியாக
இந்துமத குருமார் பீடமும்
ஜனாதிபதியின் பேச்சாளராக
களம் இறங்கியுள்ளதுபோலும்!

ஏற்கனவே ஐந்து மாகாணசபை
தேர்தல் நேரத்திலும்
ஜனாதிபதி அவ்வாறு கூறியதாக
அனாமதேயச் செய்திகள்
வெளியாகி இருந்தன!

ஆயினும் இன்றுவரை
காணி சுவீகரிப்புக்கான
வர்த்தமானி அறிவித்தல்
இரத்துச் செய்யப்படவில்லை!

அதுமட்டுமன்றி,
காணிகளை சுவீகரிக்கும்
பணிகளும் ஆரம்பமாகியுள்ளன!

பலாலி இராணுவத் தளத்தை
அண்டிய பகுதிகளை
சுவீகரிக்கும் பணிகள்
தொடங்கியும் விட்டன!

இவ்வாறான நிலையில்
பலாலியில் காணிசுவீகரிப்பு
நடக்காது என்று
ஜனாதிபதி கூறியதாக
இந்துமத குருபீடத்தினர்
தெரிவிப்பது வேடிக்கையாகவுள்ளது!

இஸ்லாமிய மதகுருமாரை
அழைத்தும்
ஜனாதிபதி பேசியிருக்கிறார்!

சமாதானம் மலர்விக்க
தம்மிடம் ஆலோசனை கேட்டதாக
இஸ்லாமியக் குருமாரும்
பத்திரிகைகளுக்குக் கூறியிருந்தனர்!

ஐந்தாண்டு காலமாக
இஸ்லாமிய மதகுருமாரிடம்
யோசனை கேட்கத் தோன்றவில்லை!

அதேபோல- கடந்த காலத்தில்
இந்து மத குருமார்
சந்திப்பதற்கு நேரம் கேட்டதற்கு
பல தாமதங்கள் செய்யப்பட்டன.

காத்திருந்து விட்டு
திரும்பிவந்த
சந்தர்ப்பங்களும் உண்டு!

ஆனால் இப்போது
அக்கறையோடு பேச்சு
நடந்ததாகக் கூறப்படுகிறது!

அவர்களும் வந்து நின்று
தமிழ்க்கட்சிகள் பாணியில்
அறிக்கை விடுகிறார்கள்!

ஜனாதிபதித் தேர்தலை
முன்னிட்டுத்தான்
தங்களுக்கு மரியாதை
தரப்பட்டதைக்கூட-
பாவம் அவர்கள் அறியார்கள்!

இந்தியாவில் பாரதிய ஜனதா
பதவிக்கு வந்திருப்பதும்
இன்னொரு காரணம்!

இந்து மதத்தை
இங்கு மதிப்பதாக
காண்பிக்க வேண்டாமா?

சென்ற முறையும்
பாரதிய ஜனதா பதவிக்கு
வந்த நேரத்தில்,
இந்துக் கோயில்களது
புனரமைப்புக்கு என்று
பெரும் நிதி ஒதுக்கப்படுவதாக
ஜனாதிபதி கூறியதும்
நினைவுகூரத்தக்கது!

நம்மவர்களுக்கு
எப்போதுமே மறதி அதிகம்!

அதனால்தான்
கடந்த ஐம்பத்தொரு ஆண்டுகளில்,
ஏமாற்றப்பட்ட அனுபவங்கள்
பல இருந்தும்கூட,
தொடர்ந்து ஏமாறுகிறார்கள்!

அதிகாரத்தில் இருப்போரிடம்
விசுவாசம் காட்டுவதிலும்
நம்மவர்களுக்கு இருக்கும்
திறமையே தனிதான்!

அதனால் அதிகாரத்தில் உள்ளோரை
சந்திப்பது என்றாலே
உச்சி குளிர்ந்து போகிறது.
எனவே, அவர்கள்
சொல்வதெல்லாம் வேதம் போல
இவர்கள் காதில் ஒலிக்கிறது!

வடக்கு-கிழக்கில்
பல இந்து திருத்தலங்கள்
வழிபாட்டுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளன!

எத்தனையோ திருத்தலங்கள்
இடிந்து கிடக்கின்றன;
முகாம்களாக மாறியுள்ளன!

மதகுருமார் பலர்
'பயங்கரவாத' முத்திரையுடன்
கைது செய்யப்பட்டுள்ளனர்!

கொழும்பில் மட்டுமன்றி
நாட்டின் பல பாகங்களில்
கோயில்களுக்குள்
தேடுதல்கள் நடந்துள்ளன!

அதே சமயத்தில்
வடக்கு-கிழக்கில் உள்ள
பௌத்த ஆலயங்களுக்கு
பாதுகாப்பு அதிகமாகியுள்ளது.
அண்மையில்கூட சேருவிலவில்
ஆலயப் பாதுகாப்புக்காக
புதிய முகாம்கள் நிறுவியுள்ளனர்!

இவற்றையிட்டு
இந்து மத குருபீடத்தினர்
ஜனாதிபதியிடம் பெற்றுள்ள
பரிகாரங்கள் என்ன?

பலாலி காணிசுவீகரிப்பு
இல்லையானால்
வலிகாமத்திலுள்ள
இந்து ஆலயங்களை
வழிபாட்டுக்குத் திறக்கலாமே?

அதனைக் கூடவா
கேட்கவில்லை இவர்கள்?!

இனிமேலாவது
நம்மவர்கள்
அதிகாரத்தில் உள்ளோரின்
அதிகாரபூர்வமற்ற பேச்சாளர்களாக
மாறுவதை நிறுத்தட்டும்!

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்*

# ஆன்மீகம்



## திருநீற்றின் மகிமை

'நீறு இல்லா நெற்றி பாழ்' என்பார்கள் சைவசமயத்தவர்கள். ஆகவே திருநீறு அணிவது முழு சைவ சமயத்தினரதும் கட்டாய பண்பாட்டு முறையாகும். அதாவது திருநீறு சைவசமயத்தினரின் அடையாளச் சின்னம் எனலாம்.

எனவே திருநீறு முறைப்படி பூசிக்கொள்வதன் மூலம் உள்ளம் தூய்மை பெறுவதோடு நீறணிந்த மேனியில் ஒருவித புனிதமும் காண முடிகிறது.

இத் திருநீறானது அதனை அணிவோர்க்கு நோய் தீர்க்கும் மருந்து என்பதையும் திருநீற்றுப் பதிகப் பாடல்களே உணர்த்துகின்றன.

ஆகவே சைவசமயத்தவர்கள் அனைவரும் அவர்தம் சமயக் கடமைகளில் ஒன்றாக தினமும் குறைந்தபட்சம் மூன்று வேளைகளிலாகுதல் திருநீறு அணிவதைப் பேணிடவேண்டும்.

மொத்தத்தில் திருநீறானது தூய்மையும் புனிதமும் நிறைந்த அருமருந்தாவதோடு, தெய்வ சிந்தையையும் மட்டுமன்றி இறை வழிபாட்டுடனும் இணைந்ததொன்றாகும்.

தொகுப்பு: ஆறுமுகம் தங்கரத்தினம், காரைநகர்.

## மண்ணறை சிந்தனை

மரணம் மனிதனுக்கு வேதனை தந்தபோதிலும் மரணத்திற்குப் பின் ஏற்படும் வேதனை மேலும் கடுமையாக இருக்கின்றது. மரணத்தால் மனிதனுடைய ஆன்மா உடலை விட்டுப் பிரிகின்றது. ஆனால் (மண்ணறை) வேதனையும் மறுமையின் வேதனைகளும் மரண வேதனையைவிட கடினமாக இருக்கும். (முஹம்மது நபி ஸல்)

மரணம், மண்ணறை, மறுமை இவற்றின் எண்ணங்களே, மனித உள்ளத்தை கனிய வைக்கின்றன. தெளிவடையச் செய்கின்றன. இவற்றின் பயம் இல்லையென்றால் ஒரு மனிதன் உள்ளத்தில் எப்படி கனிவும் தெளிவும் ஏற்பட முடியும்? (இமாம் கஸ்ஸாலி ரஹ்)

மண்ணறை மறுமையின் வாசல். மண்ணறையைக் கண்டு மறுமை வாழ்வினை எண்ணி வாழுங்கள். மண்ணறை பக்கம் சென்றால் விளையாட்டு, சிரிப்பு, உலகப் பேச்சுக்களில் ஈடுபடாதீர்கள்.

(முஹம்மது நபி ஸல்)

உயிருள்ளவர்கள் எப்படி உண்ணவும் பருகவும் தேவையாளராக இருக்கின்றனரோ அது போல் இறப்பெய்தியவர்களும் துஆ பிரார்த்தனைகளை எதிர்பார்த்து தேவையாளராக உள்ளனர்.

(ஹஸ்ரத் ஸுப்யான் ரலி)

(நன்றி- *"மண்ணறை முழக்கம் மனதை துலக்கும்"*)

தொகுப்பு: வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06

# கவிதைப் போட்டி இல. 330

## பரிசுக்குரிய கவிதை

### பொதியை அவிழ்த்தபோது...

தமிழருக்குத் தரவிருந்த
பொதியை மெதுவாக
அவிழ்த்துப் பார்த்தால்...
எல்லாம் எலும்புக் குவியல்!

கு. திருமால்-மட்டக்களப்பு.

### வெளிச்சம்

காணாமல்
போனவர்களில்
பலர் மறுபடியும்
காணாமல் போன
மர்மம் என்ன?

ம. திருவரசுராசா- வவுனியா.

### புரியவில்லை

சாட்சிக்கா?
இல்லை
காட்சிக்கா?

செல்வி ஷெரீன் காலித்-
தில்லையடி, புத்தளம்.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### தமிழ் (கட்சிக)(மக்க)ளுக்கு து(அ)ச்சம்

செம்மணியின் எச்சங்களெல்லாம்
எம் கண்மணிகளின் மிச்சங்களே!
தமிழ்க் கட்சிகளுக்கோ இவை துச்சம்
தமிழ் மக்களுக்கோ தொடர்கிறது அச்சம்!

ரவீந்திரநாத் அரவிந்தன் 'உதயா'-அக்கரைப்பற்று-08.

### புனித மண்...?

புத்தர் போற்றிய
புனித மண்ணில்,
எத்திசைத் தோண்டினும்
எலும்புக் கூடுகள்!

அ. சந்தியாகோ-கண்டி.



### மாற்றம்

நேற்று வரை
நீ மனிதனப்பா
இன்று முதல்
நீ..?

சிவராம்- வவுனியா.

### சான்று

சிந்து வெளியில்
கிடைத்தது மனித
பண்பாட்டு சான்று!
செம்மணியிலோ
கிடைத்தது. மனித
படுகொலைச் சான்று!

மங்களம் மனோரஞ்சன்-கல்முனை-02.

### கனி வளம்

"ஈழக் கனி வளங்கள்
இனிமேலே எங்குமிதே!
வாழை-எலுமிச்சம் யெனில்
வாங்கிப் போய்ப் போடுங்கள்!

செல்வி இ.தமிழரசி-ஈச்சந்தீவு, கிண்ணியா.

### மீதி எங்கே?

நானூறு பேரைக் காணவில்லையாம்
செம்மணியில்
பதினைந்து பேரின் எலும்புகள்;
மீதி எம்மணியில்?

அ. அன்ரன்- வவுனியா.

### பாடம்

மானுடம் மரணித்த மண்ணில்
மண்டையோடுகளும் எலும்புகளும்
எடுத்தியம்பும் பாடம்
எத்தனை எத்தனையோ?!

ஆண்டிமுனை அசோக்-உடப்பு.

### காணிக்கை!

மாணிக்க தீபமென்று
மாட்சிமை பெற்ற நாடு!
மக்களுக்கு-
காணிக்கை யாக்குதின்று
மலையென மண்டையோடு!


ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-2.

### மு(செ)ம்மணி?

மும்மணிகளுக்கு அஞ்சலி
செலுத்தும்
நாட்டில் தானே,
செம்மணிகளும்
உருவாக்கப்பட்டன....?

சோ. ரதன்- ஆரையம்பதி-01.

# கவிதைப் போட்டி இல.333



*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 06.11.1999*

**கவிதைப் போட்டி இல.333
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.**

### சாதனை

ஐந்து வருடத்துள்
ஆயிரம் சாதனை
எலும்புக் கூடும்
இதில் ஒரு சாதனை!

எஸ். கந்தசாமி-
முனைக்காடு.

### தேடுதல்

இத்தனை நாட்கள்
தேடப்பட்டவர்கள்
இன்று
தோண்டப்படுகிறார்கள்!
(செம்மணியில்)

வி. கார்த்திக்-லிந்துல.

### உரு!!

அன்று அன்புருவில் அரவணைத்த
தன் மகனை;
இன்று என்புருவில் கண்டு ஏங்குகிறாள்
தமிழ்த்தாய்!

ஆ. பவணந்தி-
கள்ளியங்காடு, மட்டக்களப்பு.

# வாசக(ர்)சாலை



*அன்பின் முரசே!*

நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் வரவேற்க வேண்டியவைகளே. குமார் பொன்னம்பலத்தினால் தொடக்கப்பட்ட வழக்கைப் பார்த்து இங்குள்ள முழுத் தமிழரும் சந்தோசப்பட்டோம். யாழ் மண்ணுக்குப் போக அனுமதிக்காத எம் நண்பர்கள் வந்து கஷ்டப்பட்டு போக முடியாமல் திரும்பவும் இவ்விடம் வந்து விட்டார்கள். இவ்வளவு காலமும் எங்கள் தமிழ் பாராளுமன்ற எம்பி.மார் மௌனியாக இருந்தார்கள்.

தமிழ் அரசன், குவைத்.




*தித்திக்கும் தேனமுதாய்
திகட்டாத இன்பத்தை
அள்ளித் தரும் முரசே!
நீ சுமந்து வரும் அத்தனை
ஆக்கங்களும் அருமையிலும்
அருமை!
வாழ்க உன் ப(ா)ணி. வளர்க
தமிழ்!*

ஐ. முபீதா, பத்தனை, கலஹா.

முரசு தந்த 'கையில் சிக்கிய மின்னல்' ராஜேஸ்குமாரின் நாவல்களில் மற்றொரு சொக்கத் தங்கம். 'முரசு' வெளியிடுகிறது என்றாலே அதன் தரம் சொல்லித் தெரிவதில்லை. 'சிகப்பு வணக்க'மும் அதற்கு மெருகூட்டட்டும்.

இ. திலகநாயகி, கண்டி.

'தான் பிரீனி'ன் தன்னலமற்ற தியாக உள்ளம் எமக்கு பிரமிப்பை தருகிறது. நமக்குள்ளும் எத்தனை தான் பிரீன்கள் என்ற நினைப்பு பெருமிதத்தையும் தருகிறது.

சி. ரவிச்சந்திரன்,
யாழ்ப்பாணம்.

*அன்பே! முரசே!*

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை. நக்கீரன் அதிரடி அய்யாத்துரை இருவரும் தரும் செய்தித் துணுக்குகள் உண்மைக்கு உரமானவை. தொடர்களைத் தருவதிலும், செய்திகளைத் தருவதிலும் உனக்கு நிகர் நீயே. உன் பணி தொடர உன் அன்பனின் கோடி வாழ்த்துக்கள்.

அன்பன் சொ. திருச்செல்வம், பதுளை.

*அன்பின் முரசே!*

உன்னில் உள்ள செய்திகள் யாவும் சுவாரசியம் வாய்ந்தவை.

ராஜேஸ்குமார் வழங்கிய 'கையில் சிக்கிய மின்னல்' அசத்திவிட்டது. 'இடி அமீனு'ம் சிறப்பு.

எம்.ஜே.எ.்ப். ஜெஸீரா, நீர்கொழும்பு.

## போர் முழக்கம்

போரைவிட்டால் வேறு புகலிடம் இல்லை அம்மையாருக்கு. இது முரசு சொன்ன உண்மை. ஆனால் நான் நினைத்தேன், தேர்தலுக்கு முன்னர் புலிகளைச் சாந்தப்படுத்த அம்மையார் முயல்வார் என்று. போர் நிறுத்தம் செய்துவிட்டு தேர்தலை நடத்துவார் என்று நினைத்தேன். என் நினைப்பு தவறானது என்பதை அம்மையாரின் போர் உறுதியும், 'இந்து' பேட்டியும் உணர்த்திவிட்டன. முன்னறிந்து கூறுவது நல்ல விமர்சகனின் பணி. அதனை முரசு செவ்வனே செய்து வருகிறது.

இ. பற்குணம், கொழும்பு-03.

## பின்வாங்கல்

*முரசே!*

உன் கணிப்பு பொய்க்காது என்பதை 'சமவாய்ப்புச் சட்டம்' உறுதி செய்துவிட்டது. இராஜதந்திரியார் கூறியது யாவும் உண்மை என்பது அரசாங்கம் அடித்த குத்துக்கரணம் மூலம் வெள்ளிடைமலையானது. சமவாய்ப்புச் சட்டத்தை கொண்டுவர நினைத்தது ஏன்? முன்வைக்க பின் நின்றது ஏன்? என்பது பற்றி வேறு யாருமே அம்பலப்படுத்த முன்வரவில்லை. முரசு உரிய நேரத்தில் அம்பலப்படுத்தியது. அரசு முற்றாக பின்வாங்கியது மூலம் இப்போது உண்மை வெளியே வந்துவிட்டது. சபாஷ், இராஜதந்திரியாரே!

மு. இராசரத்தினம், கொழும்பு-11.

*இனிய முரசே!*

உன் நந்தவனத்தில் பூக்கும் மலர்கள் யாவும் அழகோ அழகு. இவைகளை வார்த்தைகள் கொண்டு வார்த்துவிட என்னால் முடியாது. ஆனால் வாழ்த்திடாது என்னால் இருக்கவும் முடியாது. என்றும் உன் பணியின் சேவை எம் நாட்டில் நிலைத்து நிலைபெற்றிட இவனின் ஆசிகள்.

முரசே! 'கையில் சிக்கிய மின்னல்' தொடர் திடு திடுப்பை ஏற்படுத்திவிட்டது. இதுபோன்று என்றும் உன் நந்தவனத்தில் தொடர்களும் உண்மைச் சம்பவங்களும் பூத்துக் குலுங்கட்டும். பணிவுடன்

வே. திவ்வியகிருஷன், களுவாஞ்சிக்குடி.

## பெருமை சேரும்

*உதய முரசே!*

சமவாய்ப்புச் சட்டம் என்று குட்டையைக் குழப்பியது ஏன்? இப்படித்தானே பொதி என்று கூறி முன்பும் குட்டையைக் குழப்பினார்கள்! பேரினவாதப் பூதத்தை தட்டி எழுப்பிய பெருமை அரசாங்கத்தையே சேரும்.

கு. ரங்கநாதன், மன்னார்.

## கைவந்த கலை

*இனிய முரசே!*

உன்மூலமாக நாம் அறிந்த அரசியல் கருத்துக்கள் கெட்டியானவை. சமவாய்ப்புச் சட்டத்தை அலசி ஆராய்ந்து ராஜதந்திரி கூறிய கருத்துக்கள் இன்று நிதர்சனமாகிவிட்டன. 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிப்பது' ஆட்சியில் உள்ளோருக்கு கைவந்த கலையே.

பி. பரமேஸ்வரன், மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# தமிழ்பேசும் வாக்குகள்மீது குறி!

## வாக்குறுதிகளை வாரி வழங்கவும் திட்டம்!

வடக்கு-கிழக்கில் தற்போது தேர்தல் நடத்தும் சூழ்நிலை கிடையாது. அதனால் தான் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தவில்லை என்று சில மாதங்களுக்கு முன்னர் நீதியமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறியிருந்தார்.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் வடக்கு-கிழக்கிலும் நடைபெற உள்ளது. நாட்டின் சகல மாவட்டங்களிலும் தேர்தல் நடத்தக் கூடிய சூழல் இருந்தால்தான் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றை நடத்த முடியும்.

தேர்தல் ஆணையாளருக்கு வடக்கு-கிழக்கில் தேர்தல் நடத்தும் உத்தரவாதத்தை பாதுகாப்பு அமைச்சே வழங்க வேண்டியிருக்கும். பாதுகாப்பு அமைச்சராகவும் உள்ள ஜனாதிபதிதான் தேர்தல் நடத்தும் முடிவை வெளியிட்டுள்ளார்.

'வடக்கு-கிழக்கில் மாகாண சபைக்கு தேர்தல் நடத்தாது இருப்பதற்குக் காரணம் அங்குள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டல்ல; வடக்கு-கிழக்கை ஒரே நிர்வாக அலகாகக் கருதி தேர்தல் நடத்த அரசாங்கம் விரும்பாததுதான் காரணமாகும்' என்று அப்போது முரசு சுட்டிகாட்டியிருந்தமை தெரிந்ததே.

### சந்தேகம்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்கள் வாக்களிக்கக் கூடியதாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட உள்ளன.

அவ்வாறு வைக்கப்பட்டாலும் அரச கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வந்து வாக்களிக்கப்போவதில்லை. ஆனால் அவர்கள் வந்து வாக்களித்ததாக கள்ளவாக்குகள் போடப்பட்டால் என்ன செய்வது? என்று தேர்தல் முறைகேடுகளுக்கு எதிரானவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கள்ளவாக்குகள் பற்றி தற்போது ஐ.தே. கட்சி எச்சரித்து வருகிறது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் கள்ளவாக்குகள் போடுவதில் சளைத்த கட்சியல்ல. படையினரையும், பொலிஸ் அதிகாரிகளையும் பயன்படுத்தி வாக்குப் பெட்டிகளை நிரப்பிய முன்னோடிகள் ஐ.தே.கட்சியினர்தான் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

தமிழ் மக்களது கணிசமான வாக்குகள் தமக்கே கிடைக்க உள்ளதாக பொது ஜன முன்னணியினர் உறுதியாகக் கூறியிருப்பது தொடர்பாகவும் சந்தேகங்கள் தோன்றியுள்ளன.

ஐ.தே.க, பொ.ஜ.முன்னணி இரண்டும் தமிழ் பேசும் வாக்குளை எப்படியாவது கவரத்திட்டமிட்டுள்ளன. அதற்கான வழிவகைகள் குறித்துஆராய்ந்து வருகின்றன. இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக வாக்குறுதிகளை வாரி வழங்கவும் திட்டமிட்டுள்ளனர்.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் தமிழ்க் கட்சிகளான கூட்டணி, ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களை சந்தித்து தம்மை ஆதரிக்குமாறும், ஆதரிக்க முடியாவிட்டால், வேறு யாரையும் ஆதரிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். இனப்பிரச்சனை தீர்வுக்கு தன்னிடம் ஒரு திட்டம் உள்ளதாகவும் ரணில் கூறிவருகிறார்.

அதே சமயம் ஜனாதிபதி சந்திரிக்கா தமிழ்க் கட்சித் தலைவர்களை தனியாக சந்திப்பதில் ஆர்வம் காட்டவில்லை. 'தமிழ்க் கட்சிகள் எம்மை ஆதரிப்பது கடமையாகும்' என்று பொதுஜன முன்னணி அறிக்கை விடுத்துள்ளது.

தமிழ்க் கட்சிகளை அழைத்துப் பேசாது இவ்வாறு அறிக்கை வெளியிட்டமை அதிகாரத் தோரணையாக அமைந்துள்ளது என்று அவதானிகள் கூறுகின்றனர்.

## புலிகள் ஆதரவாம்!

### ஐ.தே.கட்சி கூறுகிறது!

விடுதலைப் புலிகள் தம்மை ஆதரிக்க உள்ளதாக ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் கூறிவருகின்றனர்.

புலிகளது பிரதிநிதிகள் சிலர் கொழும்பு வந்து ரணிலைச் சந்தித்தனர். சில கோரிக்கைகளையும் முன்வைத்தனர். ரணில் அவற்றை ஏற்றுக் கொண்டுள்ளார். அதனையடுத்து புலிகள் ரணிலை ஆதரிக்க முடிவு செய்துள்ளனர். இவ்வாறு தமிழ் பேசும் தரப்பு பிரமுகர்கள் பலரிடம் ஐ.தே.கட்சி பிரமுகர்கள் சிலர் கூறிவருகின்றனர்.

ஆனால் இந்தக் கூற்றுக்களில் உண்மை இல்லை என்றே நம்பகமாகத் தெரியவருகிறது.

## பொதுவான தமிழ் வேட்பாளர்

### பொய்யான தகவல்கள்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க்கட்சிகள் இடையே பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த முயற்சிகள் நடப்பதாக வெளியாகும் செய்திகளில் உண்மை இல்லை என்று தெரிகிறது. ரெலோ மட்டுமே தமிழ் வேட்பாளரை நிறுத்துவதில் உண்மையான ஆர்வம் காட்டியுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் சுரேஸ் பிரேமச்சந்திரன் தான் போட்டியிட விரும்பினார். ஆனால் அக்குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் சந்திரிக்கா பண்டாரநாயக்காவை ஆதரிப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.

ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய அமைப்புக்களும் தற்போதைய ஜனாதிபதியையே ஆதரிக்க உள்ளதாகத் தெரியவருகிறது. இ.தொ.கா.வும் சந்திரிக்காவையே ஆதரிக்க உள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே ஆதரவைத் தெரிவித்துவிட்டது.

கூட்டணியினரும் சந்திரிக்கா பண்டாரநாயக்காவை தாம் எதிர்க்கப்போவதில்லை என்று அவரிடமே நேரடியாக தெரிவித்து விட்டனராம்.

இவ்வாறான நிலைப்பாடுகள் இருக்கும் போது பொதுவான தமிழ் வேட்பாளரை தெரிவு செய்ய தமிழ்க் கட்சிகள் கடுமையாக ஆலோசித்து வருவதாக செய்தி நிறுவனங்களுக்கு தமிழ்க்கட்சி வட்டாரம் ஒன்றினால் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டு வந்தன.

## பழிவாங்கும் தாக்குதலுக்கு முஸ்தீபு!

### கப்பலைத் தகர்க்க வந்த கரும்புலிகள்

கச்சதீவுக் கடற்பரப்பில் கடற்புலிகளது துணைத் தளபதி நிரோசன் உட்பட 15 கடற்புலிகள் பலியானார்கள். இதற்குப் பழிவாங்கும் விதமான தாக்குதலுக்கு கடற்புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

14.10.99 அன்று கடற்படையினர்மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலும், கரும்புலிப் படகுகள் மோதிக் கொண்டதால் திட்டமிட்டபடி நடக்கவில்லை.

இதனையடுத்து பாரிய கடற்படைக் கப்பலைத் தாக்கும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. 23.10.99 அன்று மன்னார் கடலில் வைத்து கடற்படைக் கப்பலைத் தாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை ஆறுமணியளவில் காரைநகர் முகாமில் இருந்து கடற்படைக் கப்பல் ஒன்று புறப்பட்டுள்ளது.

இதனைத் தகர்ப்பதற்காக விடத்தல்தீவுப் பகுதியில் இருந்து வந்த வெடிமருந்து நிரப்பிய கரும்புலிப் படகுகள் இரண்டு பேசாலையில் உள்ள வங்காலைப்பாடு என்னும் இடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

கடற்படைக் கப்பல் தலைமன்னாரை நோக்கி வந்து கொண்டிருக்கும்போது, இரு கடற்புலிப் படகுகள் கப்பலை போக்குக்காட்டி பேசாலைக்கு இழுக்க முற்பட்டன. கடற்படையினருக்கு சந்தேகம் வந்ததால், தலைமன்னாரை நோக்கிச் சென்றபடி விமானப்படையினருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து விரைந்து வந்த கிபீர் விமானம் புலிகளது படகுகள்மீது தாக்குதல் நடத்தியது. எனினும் புலிகளது படகுகள் எதற்கும் சேதம் ஏற்படவில்லை.

இதேநேரம் தள்ளாடி முகாமிலிருந்து ஷெல்கள் ஏவப்பட்டன. இச் சம்பவத்தில் இரு பொது மக்கள் பலியாகினர். இருவரும் பெண்களாவர்.

பேசாலைக் கடலில் கடும் மோதல் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. எனினும் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. விமானப்படை வீசிய குண்டுச் சத்தங்களே கேட்டன.

## நிதி திரட்டப் போட்டி!

### முன்னாள் உறுப்பினர்கள் கடத்தல்

வவுனியாவில் ரெலோ இயக்கத்தினர் வரிவசூலிப்பில் மறுபடி தீவிரம் காட்டி வருகின்றனர்.

அதேபோன்று புளொட் இயக்கத்தினரும் வரி வசூலிப்பிலும், ஆட்கடத்தலிலும் மறுபடி ஈடுபட்டுள்ளனர்.

புளொட், ரெலோ மோதலை அடுத்து வவுனியாவில் ரெலோ வரி வசூலிப்பை சற்றுக் குறைத்திருந்தது. மாணிக்கதாசனின் மறைவின் பின்னர் ரெலோ மறுபடி வவுனியாவில் தீவிர நிதி திரட்டலில் இறங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஒரு பகுதி நிதி தம்மால் கொடுக்கப்படுவதாக ரெலோ உறுப்பினர்கள் கூறிவருகின்றனராம்.

அண்மையில் வெளிநாட்டில் இருந்து வந்த சகோதரர்கள் இருவர் கடத்தப்பட்டு பணம் வசூலிக்கப்பட்டது. இதுபோன்று சீதனம் வாங்குவோரிடமும் ஒரு தொகை வாங்கப்படுகிறதாம். அதேசமயம் சீதனம் கொடுத்தோரிடமும் கேட்கப்படுகிறதாம்.

இது தவிர வர்த்தகர்களிடமும் நிதி திரட்டல் நடந்து வருகிறது.

புளொட் இயக்கமும் வெற்றிலை, மீன் போன்றவை உட்பட பல பொருட்களுக்கு வரி வாங்கி வருகிறது. அதேசமயம் தமது இயக்கத்தில் இருந்து விலகியோரை கடத்துவதிலும் ஈடுபட்டுள்ளனர். நேசன் என்னும் முன்னாள் உறுப்பினர் அண்மையில் புளொட்டினால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

வவுனியாவில் புளொட்டில் இருந்து விலகி ஈ.பி.டி.பியில் இணைந்தவர்கள் இருவர் புளொட்டினால் கடத்திச் செல்லப்பட்டு கடுமையான சித்திரவதைக்கு உள்ளானதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் கூறியுள்ளன.

## சுபநேரம் பார்த்து அறிவிப்பு

### சமாதியிலும் சந்திரிக்கா பிரார்த்தனை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன முன்னணி பாராளுமன்றத் தொகுதிகளில் ஒவ்வொன்றிலும் அளிக்கப்படும் வாக்குகள், ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு மேலதிகமாகக் கிடைக்காமல்போனால், அதே பாராளுமன்றத் தொகுதியில் இன்று எம்.பி. யாகவிருப்பவருக்கு அடுத்த தேர்தலில் பொ.முன்னணி சார்பில் போட்டியிட அனுமதி வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி சகல பொ.முன்னணி மற்றும் சுதந்திரக்கட்சி பா.உக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதித்தேர்தல் நடத்த முடிவு செய்தது பற்றி முக்கியமான பல அமைச்சர்களுக்கே தெரியாதாம். செய்தி ஊடகங்கள் மூலமாகவே அமைச்சர்கள் பலர் தகவல் அறிந்துள்ளனர்.

பாதுகாப்புத்துறை பிரதி அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த, மங்கள சமரவீர, எஸ்.பி.திசநாயக்க மற்றும் மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோருடன் ஜனாதிபதி சந்திரிக்கா சில தினங்கள் அந்தரங்க ஆலோசனைகள் நடத்தியிருந்தார்.

அதன் பின்னரே சுபவேளை கணிக்கப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை (19.10.99) இரவு தேர்தல் நடத்தும் முடிவினைப் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இதற்கு முன் ஜனாதிபதி சந்திரிக்கா தனது தாயாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களிடம் சென்று, அவருடைய ஆசியைப் பெற்றுள்ளார்.

தொடர்ந்து ஹொறகொல்லையிலுள்ள தனது தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் சமாதிக்குச் சென்று பிரார்த் தனையிலீடுபட்டதாகவும் தெரிகிறது.

## கற்குவியலுக்குள் மறைந்திருந்த குண்டு மன்னாரில் தாக்குதல்

மன்னாரிலிருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனத் தொடரணி மீது புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 4 பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் சென்ற 25.10.99 காலை 10.30 மணியளவில் உயிலங்குளம் பகுதியிலுள்ள நொச்சிக்குளம் என்னுமிடத்தில் நடைபெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின் அநுராதபுரத்திற்கு அனுப்பப்பட்டனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:

மன்னார்-தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து தினமும் காலையில் இராணுவத் தொடரணி செல்வது வழக்கமாகும். இதில் வீடுமுறையில் செல்லும் படையினர் அனுப்பிவைக்கப்படுவர்.

பலத்த பாதுகாப்புடனும், கவச வாகனங்கள், பீரங்கிகள் சகிதம் செல்லும் இத் தொடரணிகளுக்கு இடையிடையே கொழும்பு, கற்பிட்டி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பஸ் வண்டிகளும் படையினருக்கு பாதுகாப்பு வழங்குவது வழக்கமாகும்.

சம்பவதினம் நொச்சிகுளம் பகுதியூனூடாக சென்று கொண்டிருந்த தொடரணிமீது கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

வீதியின் அருகில் குவிக்கப்பட்டிருந்த சல்லிக் கற்குவியலுக்குள்ளேயே குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

குண்டு வெடித்ததும் கற்கள் சிதறி இராணுவ பஸ்ஸை துளைத்தன. எனினும் பயணிகளின் பஸ்கள் இதில் பாதிக்கப்படாதவாறு தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இராணுவத் தொடரணிமீது கடந்த 14.05.98 அன்றும் செட்டிகுளத்தில் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது. இதில் 20 படையினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 25.10.99 திங்கள் அன்று அதிகாலை 2.00 மணியளவில் வன்னிப் பகுதிக்கு கடத்த முற்பட்ட கற்பூரம் உட்பட பெருந்தொகையான பொருட்களை பொலிஸார் கைப்பற்றியதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

## திருவிழாவிற்குச் சென்றோர்மீது கெடுபிடி!

### வரிசையில் நிறுத்தி விவரம் சேகரிப்பு

மட்டக்களப்பு-முனைத்தீவு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய உற்சவம் 20.10.99 அன்று வெகுசிறப்பாக நடந்தேறியது. சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் திருவிழா நிகழ்ச்சிகளின்போது கலந்து கொண்டனர்.

கொழும்பு மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் தொழில் புரியும் முனைத்தீவு, போரத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்த பலர் திருவிழாவுக்காக வந்திருந்தனர். ஆயினும் பட்டிருப்புப் பாலத்திலிருந்த எல்லைப் புற இராணுவத்தினர், அவர்களை இலேசில் முனைத்தீவிற்குச் செல்ல அனுமதிக்கவில்லை.

வந்தவர்களை நீண்ட வரிசையில் நிறுத்தி அவர்களின் பெயர், வயது, விலாசம், தொழில் புரியும் இடம் மற்றும் உறவினர்களின் விவரம்,ஆளடையாள அட்டை இலக்கம் என்பனவற்றுடன் பதிந்து கையொப்பம் பெற்ற பின்னரே புலிகளின் நிருவாகப் பகுதியிலுள்ள கோயிலுக்குச் செல்ல அனுமதித்தனர்.

தமது சொந்த ஊரில் மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் நீண்ட வரிசையில் நின்று படையினரின் அனுமதி பெற வேண்டியுள்ளது. என்று கோயில் அறங்காவலர்கள் வேதனை வெளியிட்டனர்.

## உழவு இயந்திரம் கடத்தல்!

மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலையில் வீதித் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்றை அதன் இழுவைப் பெட்டியுடன் புலிகள் கடத்திச் சென்றனர்.

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு முன்பாகக் காத்திருந்த புலிகள் இருவர் மேற்படி உழவு இயந்திரத்தை வழிமறித்து தமது ஆளுகையிலுள்ள பதுளை வீதிப் பகுதிக்குக் கொண்டு சென்றனர். இச்சம்பவம் 23.10.99 அன்று பி.ப.3மணியளவில் இடம்பெற்றது.

## பெற்றோரை இழந்த குழந்தைகள்

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வன்னியில் பல குழந்தைகள் தமது பெற்றோரை இழந்துள்ளனர்.

வன்னியில் பாடசாலைகளில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் மூலம் மேற்படி உண்மைகள் தெரியவந்துள்ளன.

கண்டாவளைப் பகுதியில் மட்டும் முன்னூற்றி ஐம்பது மாணவர்கள் தாயை, அல்லது தந்தையை அல்லது இருவரையும் இழந்தவர்களாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எறிகணை வீச்சில் 7 படையினர் பலி!

மட்டக்களப்பு-ஒட்டமாவடி மாவடிச் சேனையில் புலிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் அகப்பட்டு ஆறு படையினரும், கிண்ணையடியில் ஒரு படைவீரருமாக மொத்தம் ஏழு இராணுவத்தினர் பலியாகினர்.

வாவிக்கு அப்பால் மறுமுனையிலிருந்து இராணுவக் காவலரண்களை நோக்கி ஏககாலத்தில் புலிகள் சரமாரியான எறிகணைத் தாக்குதலை நடத்தினர். இச்சம்பவம் 25.10.99 அன்று மாலை 6 மணியளவில் இடம் பெற்றது.

அந்தப் பகுதிக்குப் பரிச்சயமில்லாத புதிய இராணுவ அணியினரே புலிகளின் எறிகணை வீச்சில் சிக்கியதாகத் தெரியவருகிறது.

புலிகளின் எறிகணைகளில் ஒன்று இலக்குத் தவறி மீராவோடை முஸ்லிம் கிராமத்திற்குள்ளும் வீழ்ந்து வெடித்ததில் 3 பொதுமக்கள் காயமடைந்தார்கள்.

ஒரு படை வீரரும் காயமடைந்தார். காயப்பட்டவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## கறையான் புற்றுக்கள்மீதும் கவனம்

### பற்றைக் காடுகள் அழிப்பு

மட்டக்களப்பில் விடுமுறையிற் செல்லும் இராணுவத்தினரையும், விடுமுறை முடிந்து கடமைக்குத் திரும்பும் இராணுவத்தினரையும் ஏற்றி வரும் வாகனத் தொடரணிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலை வழியே மன்னம்பிட்டிவரை சுமார் 80 கிலோ மீட்டர் வரையான வீதி மருங்குகள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. வீதியின் இரு புறங்களிலும் காணப்படும் காடுகளும் புதர்களும் வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன. கறையான் புற்றுக்களும் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன.

கடைகளின், வீடுகளின் கூரைகள், உயரமான மரங்கள், கட்டடங்கள் என்பனவற்றில் படையினர் ஏறிச் சோதனையிலீடுபட்டு உறுதிப்படுத்திய பின்னரே இராணுவ வாகனத் தொடரணி புறப்பட அனுமதிக்கப்படுகிறது.

இதனிடையே 24.10.99 அன்று காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பில் பாரிய கிளைமோர் குண்டு ஒன்றைப் படையினர் கண்டு பிடித்துச் செயலிழக்கச் செய்தனர்.

முகத்துவார வீதி வேதாரணிய சதுக்கத்தில் இருந்த மரமொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்தக் குண்டு, பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரிலேயே கண்டு பிடிக்கப்பட்டது.

இது ஒரு புறமிருக்க, இராணுவ வாகனத் தொடரணி செல்லும் நாட்களில் பிரதான வீதியில் நடமாடுவதைப் பொதுமக்கள் பெரும்பாலும் தவிர்த்தே வருகின்றனர். குறிப்பிட்ட நாட்களில் மட்டக்களப்பு நகரப் பகுதி இயல்பாகவே வழமையான பரபரப்பின்றிக் காணப்படுகிறது. இராணுவ வாகனத் தொடரணி செல்லும்போது எந்த இடத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சமும் பீதியும் மக்களைக் கிலி கொள்ள வைக்கிறது.

## முஸ்லிம்களை திருப்பி அனுப்பினார்கள்

### அறிவித்தலுக்கு செவிமடுக்கவில்லை

காட்டு மரங்கள் வெட்டி அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதுவாக காட்டுப் பகுதிக்கு வந்து மரம் வெட்டிக் கடத்தும் முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல் மூலம் அறிவுறுத்தல் வழங்குமாறு கூறி, ஒரு கடிதத்தைப் புலிகள் ஒட்டமாவடி பெரிய பள்ளிவாசலுக்கு அனுப்பி வைத்திருந்தனர்

சட்ட விரோதமாக காட்டுமரங்களை அழிப்போர்மீது தாம் நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதால் தமக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் சில வேளை கசப்புணர்வுகளை உருவாக்கலாம். இதைத் தடுப்பதற்கு ஏற்றதாகவே தாம் ஆக்கபூர்வமான நடவடிக்கையாக இந்தக் கடிதத்தை அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

எனினும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இந்தக் கடித அறிவித்தலை பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் அறிவிக்க முடியாத சங்கடத்தில் பள்ளிவாசல் நிருவாகத்தினர் மாட்டிக் கொண்டனர்.

பள்ளிவாசல் ஒலி பெருக்கியில் அந்தக் கடிதம் வாசிக்கப்படாததை அறிந்த புலிகள் அதனை ஆட்சேபித்து 24.10.99 அன்று தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் வயல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுமார் ஆயிரம் முஸ்லிம்களை அங்கிருந்து வெளியேற்றினர்.

இதனையடுத்து ஒட்டமாவடிப்பள்ளிவாசல் நிருவாகத்தினர் தாம் சட்ட விரோதமாக மரம் வெட்டுவோரைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தமது நிலைமையை விளக்கிப் புலிகளுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்தனர். இதன் பின்னர் தற்போது நிலமை சீர்பெற்றுள்ளது.

# இரட்டிப்பு விலைகளுடன்
## 'இலவச' மருத்துவ சேவை!

**நா**ளாந்தம் போர்ச் சூழலின் கெடு பிடியில் அகப்பட்டுத் திண்டாடும் ஏழை மக்களுக்கு அரசாங்கத்தின் இலவச மருத்துவ சேவை என்பது ஒரு கனவாகவே போய்விட்டது போல் தெரிகிறது.

இராணுவக் கண்காணிப்பற்ற பகுதி மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் போதிய மருத்துவ வசதியின்றி பரிதவிக்கின்றனர்.

இது ஒரு புறமிருக்க, படையினரின் கண்காணிப்புள்ள பகுதியிலிருக்கும் அரச மருத்துவமனைகளில் போதிய மருத்துவ வசதிகள் இல்லை. சாதாரண பெனடோல் குளிசைகளைக்கூட கடையில் வாங்குமாறு சிட்டை எழுதித் தருகிறார்கள். அதே வைத்தியர்கள் தனியான வைத்தியசாலைகளை நடத்தி வருகிறார்கள். அங்கே பெறுமதிமிக்க மருந்து வகைகளும் உள்ளன. சிறந்த சிகிச்சைகளும் அளிக்கப் படுகிறது.

இதே போல் மட்டக்களப்பு ஆயுர்வேத மத்திய மருந்தகத்திலும் வறிய மக்கள் இலவச மருத்துவ சேவைகளை நாட முடியாத நிலை தோன்றியுள்ளது. சிகிச்சைக்காக அங்கு வரும் நோயாளிகளிடம் தகுந்த மருந்துகள் தங்களது ஆயுர்வேத மருந்தகத்தில் இல்லை என்று கூறி அந்த நோயாளிகளை வேலை நேரம் தவிர்ந்த வேளைகளில் வைத்தியர் வீட்டில் இருக்கும் மருந்தகத்திற்கு அழைப்பித்து சிறந்த ரக மருத்துகளை இரட்டிப்பு விலைகளில் விற்கப் படுகிறதாம்.

ஆனால் அந்தக் குளிசைகள் அரசு ஆயுர்வேத வைத்திய சாலைக்கு வழங்கப்பட்ட இலவச மருந்துகள் என்பது அவற்றின் குறியீடுகளிலிருந்து அறிய முடிகிறது என்று பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

'இந்நிலை தொடராமல் வறிய மக்களும் அரச இலவச வைத்திய சேவைகளைப் பெற்று நன்மையடைய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று நோயாளிகள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

# கிண்ணத்தை வென்றது

(திருமலை நிருபர்)

**டொ**ன்போல் ஹென்றி பற்றிக் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர் குழுக்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரி வெற்றி பெற்று ஞாபகார்த்தக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

பத்தொன்பது பாடசாலைகள் கலந்து கொண்ட இப்போட்டியில் இறுதி ஆட்டத்தில் கந்தானை டி மெஸனோம் கல்லூரியை 5-0 என்ற வித்தியாசத்தில் தி/புனித சூசையப்பர் கல்லூரி வெற்றிகண்டது.

வெற்றி வாகை சூடிய மாணவர் அணி திருக்கோணமலை புகையிரத நிலையத்திலிருந்து வாத்திய இசை முழங்க ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டது.

பாடசாலை வாயிலில் வைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.கே.கந்தசாமி, கல்வியமைச்சின் விளையாட்டுத்துறை ஆலோசகர் திரு.எதிர்வீரசிங்கம், வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வே.தங்கராஜா ஆகியோரும் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.கைடி பொன்கலனும் விளையாட்டு வீரர்களை வரவேற்றனர்.

விளையாட்டு வீரர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள், தங்கப்பதக்கங்கள் என்பவையும் வழங்கப்பட்டன.

# சிங்களமொழி அமுலாக்கம்!

**ச**மாதானத்திற்காகவும், இன மொழி சமத்துவத்திற்காகவும் பாடுபடுவதாக இலங்கை சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஏ.ரி.ஆரியரத்தின பல்வேறு பிரச்சார இயக்கங்களில் ஈடுபட்டு வருகிறார்.

இது ஒருபுறம் இருக்க, சர்வோதய தலைமைக் காரியாலத்திலிருந்து வடக்கு-கிழக்கு தமிழ்ப் பிரதேச சர்வோதய நிலையங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தனிச் சிங்களத்திலேயே அமைந்திருப்பதாகக் கூறப் படுகிறது.

இதனால் கடிதத்தில் எழுதப்பட்டுள்ள விடயங்கள் தெரியாமல் மாவட்ட நிலையங்கள் திண்டாடுகின்றன. பல கடிதங்களுக்குப் பதிலளிக்க முடியாமல் அவை கிடப்பிலேயே கிடக்கின்றன. மொழி புரியாத காரணத்தினால் ஏராளமான கடிதங்களுக்கு பதில்களே அனுப்ப முடியாதுள்ளது.

# திருமலையில் சித்தியடைந்தோர்

***1999ம்*** ஆண்டுக்குரிய ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் சதானந்தன் தனோசானந்தன் 175 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றார்.

ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி மாணவிகள் இருவரும் நிலாவெளி தமிழ் மகாவித்தியாலய மாணவன் ஒருவரும் 172 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தில் நிற்கின்றனர்.

22 மாணவர்களில் 10 பேர் சித்தியடைந்ததும் மாணவன் ஒருவர் இரண்டாம் இடத்துக்கு வந்ததும் நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்தைப் பொறுத்த வரையில் குறிப்பிடத்தக்க அம்சம் எனக் கருதப்படுகிறது.

ஐந்தாவது இடத்தை 171 புள்ளிகள் பெற்ற விவேகானந்தா கல்லூரி மாணவன் கே.செந்தூரன் பெற்றுள்ளார்.


## விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி



### 6வது ஆண்டு நினைவு மலர்

**கணேசன் கௌஷிகா**

யாழ் புனித கன்னியர் மடம்

அன்புத்தாயின் மடியில்:
03.03.1981

பூமித்தாயின் மடியில்:
28.09.1993

வான் மூலம் வந்த
அவலத்தால்
உனது உயிர் பிரிந்ததம்மா
என்றென்றும்- நாம்
உன்மீது கொண்ட பாசம்
ஒருபோதும் வற்றாதம்மா.
என்றும் உனதான்மா
சாந்தியடைய
இறைவனை வேண்டி என்றும்
உன் பிரிவால்
வாடும் உனதன்பு.
அம்மா, அப்பா (QATAR),
அண்ணா (UK), அக்காமார்,
மைத்துணர்மார், உறவினர்,
நண்பர்கள்.

தகவல்: Mr N.G. THAAS,
J$ S, MAN-S.MARKET,
74, ST REATHAM HILL, LONDON
SW2 4RD

### 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்: 01 ☆ 02 ☆ 1938



ஆண்டவன் அடியில்: 09 ☆ 09 ☆ 1999

**அமரர் திருமதி கமலாதேவி சண்முகநாதன்**

(75, சம்பியன் லேன்- கொக்குவில் கிழக்கு- கொக்குவில்)
அன்புக்குரிய எந்தன் மனைவி
பாசமிகு எங்கள் அம்மா
அம்மம்மா
அப்பம்மா- உங்கள்
நேசத்தால் எங்கள் நெஞ்சம்
வெதும்புகிறது.
வேதனையில் தவிக்கின்றோம்.

சகல வழிகளிலும் எங்களுக்கு அன்பும் ஆதரவும் நல்கி எங்கள் துயரில் பங்குகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

உங்கள் பிரிவால்
துயருறும், அன்புள்ள
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

MR. S. SATHANANTHAN,
MR.S. KANDEEPAN,
05, PRASER ROAD,
MIDDLE SEX, UB 6 7 AH,
LONDON.
T-P- 0181-5669589

உலகப் புகழ்பெற்ற
## எக்ஸ் ஒயில்

TRADE MARK

★வாதத்தால் வரும் வலிகள்
★உணர்ச்சியற்ற பாகங்கள்
★பிரயாணக்களைப்பு
★தலைப்பாரம்
★தலைச்சுற்று
★ஜலதோஷம்
★வயிற்றுவலி
★தலைவலி
★காய்ச்சல்
★பல்வலி
★காதுவலி
★மூக்கடைப்பு
★பூச்சிக்கடிகள்
★தசை வலிகள்
★சுளுக்கு ★இருமல்
★மதுவால் ஏற்படும் பிரச்சினை



Rs. 20.00 Only
(3m.l)

**ஆகியவற்றிக்கு உடனடி நிவாரணி**

ஏக விநியோகிஸ்தர்
**SINGHA HOLDINGS (PVT) LTD.**
14, Ground Floor-Welikada Plaza-Rajagiriya.
Tel: 888214 Fax: 682984



### மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ,பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**

தபால் மூலம் கல்வி நெறிகள்

☆ Nursery Teacher Training Course (NTTC)
பாலர் பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி
☆ Method of Computerised Book Keeping & Accountancy (MCBA)
கணனியின் உதவியுடன் கணக்கு பதிவியலும் கணக்கீடும்
☆ Spoken English & Sinhala - பேச்சு ஆங்கிலம் / சிங்களம்
☆ Business English - வியாபார ஆங்கிலம்.

மேலதிக விபரங்களுக்கு 8.50 முத்திரையொட்டப்பட்ட தபாலுறையுடன் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்துடன் தொடர்பு கொள்க.

APPLICATION FORM
NAME :......................................
ADDRESS :......................................
......................................
விரும்பும் பாடநெறி: ......................................

BRIGHT FUTURE IN YOUR HAND
**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
**S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. COLOMBO - 11.**
**P.O. BOX NO:162, TELEPHONE: 434770.**

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்
தபால் மூலம் தையற் கலை

டிப்ளோமா ஆசிரியரால் தபால் மூலம் தையற் கலை பயிற்றுவிக்கப்படும். பெண்களுக்கு மாத்திரமே பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையுடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

London School of Scientific Tailoring
*Director:*
Sithy Kamila Rafi
7/1, Gongawala Road,
Matale.

### தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்
**P.T.C** 14, Covington Road, Batticaloa.

### சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. 298619, 97546610.

### TINY TOTS' MONTESSORI

USING AMI MONTESSORI METHOD AND PRE SCHOOL METHOD

2000ம் ஆண்டுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

- முதலாவது மொழி ஆங்கிலம். இரண்டாவது மொழி தமிழ்/சிங்களம்.
- குறிக்கப்பட்ட அனுமதிகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- வயதெல்லை 2 1/2 வருடம் முதல் 4 வயது வரை.
- அனுமதிகளை டிசம்பர் 10க்கு முன்பு பெற்றுக்கொள்ளவும்.

**ACA** 55, ST. LUCIA'S ST, KOTAHENA.
TEL : 335287

### தெய்வீக மருத்துவம்

THEIVEEGAM INTERNATIONAL SOCIAL AND SPIRITUAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரிக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலு சோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.


தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

### 1வது பிறந்ததின வாழ்த்து



பி ர வீ ன்

03 . 10 . 1999

பளை புலோப்பளையைச் சேர்ந்த சேகர்-சீதா தமபதிகளின் செல்வப் புதல்வன் பிரவீன் லண்டனில் (Morden) 3.10.99 அன்று ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் (பளை) வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பா குடும்பத்தினர், சித்தி குடும்பத்தினர், வவுனியாவில் வசிக்கும் சின்னம்மா குடும்பத்தினர், அத்தைமார், பெரியத்தை குடும்பத்தினர், சித்தப்பா குடும்பத்தினர், கண்டாவளையில் வசிக்கும் பெரியப்பா குடும்பத்தினர், லண்டனில் வசிக்கும் பெரியமாமா, சின்னமாமா குடும்பத்தினர், ஆசையம்மா குடும்பத்தினர், சுதா அண்ணா, சிவாமாமா, தயா மாமா, ராசன் மாமா, குணம் அத்தான், ஜேர்மனியில் வசிக்கும் தசி அண்ணா, கிளியன் சித்தப்பா, இத்தாலியில் வசிக்கும் செல்லா சித்தப்பா, மற்றும் கொழும்பில் வசிக்கும் சாரதா அன்ரி குடும்பத்தினர், பவா அன்ரி குடும்பத்தினர், மற்றும் அண்ணாமார், அக்காமார், மச்சாள், மச்சான் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பளை அறத்தி அம்மன் அருளால் பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று சிறப்பாக வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

*தகவல்: வீரகத்திப் பிள்ளை (தாத்தா), வவுனியா.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கடத்தலும் – கைதும் – காரணமும்

எரிக் சௌந்தரநாயகம் கைது தொடர்பாக கண்கட்டி வித்தையான செய்திகள் வெளிவந்துள்ளன.

'சண்டே ரைம்ஸில்' இக்பால் அத்தாஸ் வெளியிட்டுள்ள தகவலில், எரிக் நாடு திரும்பிய பின்னர் அரைமணி நேரத்தில் கைதானதாகக் கூறப்பட்டுள்ளது.

பொலிஸ் வட்டாரங்கள் கூறிய தகவலை அத்தாஸ் வெளியிட்டுள்ளார். ஆகவே, எரிக் நாடு கடத்தலை மூடிமறைக்கும் ஏற்பாடுகள் சில செய்யப்பட்டுள்ளன என்பது உறுதியாகி விட்டது.

தமிழ்நாட்டு 'கியூ' பிரிவு பொலிசாரும், இலங்கை புலனாய்வுத்துறையினரும் இணைந்து அருமையான ஒரு நாடு கடத்தலை நடத்தியுள்ளனர்.

சட்டபூர்வமாக நாடு கடத்தினால் தமிழக அரசுமீது கண்டனங்கள் ஏற்படும் என்பதால், எரிக் இலங்கை திரும்பிய பின்னர் கைது செய்ததுபோல காண்பிக்கக்கூடிய ஏற்பாடுகள் நடந்துள்ளன.

சென்னை திருவான்மியூரில் வைத்து கைதான எரிக் சௌந்தரநாயகத்தை, திருச்சி



யில் உள்ள விமான நிலையத்தில் வைத்துத்தான் ஒப்படைத்துள்ளனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து ஒப்படைத்தால், தகவல் கசிந்து தமிழ்நாட்டு பத்திரிகைகளில் வெளிவந்துவிடும் என்பதால், திருச்சிக்குக் கொண்டு சென்று ஒப்படைத்தது தமிழக பொலிசின் 'கியூ' பிரிவு.

திருச்சி விமான நிலையத்தில் எயார் லங்கா விமானத்தில் இலங்கை புலனாய்வுப் பொலிசார் சென்று பதுங்கியிருந்தனராம். விமானத்தைவிட்டே கீழிறங்கவில்லையாம்.

விமான நிலைய அதிகாரிகளுக்குக்கூட உண்மை தெரியாமல்தான் இந்த நடவடிக்கை நடந்ததாகக் கூறப்படுகிறது.

இது எப்படிச் சாத்தியமானது? விமான நிலைய அதிகாரிகள் எப்படி ஏமாந்தனர்?

தமிழ்நாட்டில் சந்தேகத்துக்குரிய இலங்கைத் தமிழர்கள் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வெளியே நடமாட முடியாது.

ஆனால் இலங்கைக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தால் மட்டும் இவர்களை விடுதலை செய்து அனுப்புவார்கள்.

விமான நிலையம்வரை 'கியூ' பிரிவின் அதிகாரி ஒருவர் கூடவே வந்து, விமானத்தில் ஏற்றிவிட்டுத்தான் திரும்பிச் செல்லுவார்.

எரிக் சௌந்தரநாயகத்தையும் விமான நிலையத்தின் ஒருபகுதியில் இருக்கவைத்துவிட்டு, அவரது கடவுச் சீட்டில் முத்திரை குத்துவது உட்பட சகல காரியங்களையும் 'கியூ' பிரிவு அதிகாரிகளே செய்வித்து முடித்தனர். பின்னர் எரிக்கை அழைத்துச் சென்று விமானத்தில் ஏற்றினார்கள்.

சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களையும் 'கியூ' பிரிவு அதிகாரிகள்தான் விமான நிலையத்திற்கு கொண்டுவருவது வழக்கம் என்பதால், 'எரிக்' விவகாரம் விமான நிலைய அதிகாரிகளுக்கு வித்தியாசமான ஒன்றாகத் தோன்றியிருக்காது.

எரிக் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட முன்னரே அவரை இப்படித்தான் கையாள்வது என்று முடிவு செய்யப்பட்டுவிட்டது. எனவே அங்கு கைதானதுக்கான பதிவு ஆவணங்கள் எதுவும் இருக்கப்போவதில்லை.

'எரிக்' தானாக நாடு திரும்பியதுபோல நிரூபிக்கத்தக்கதாக அவரது கடவுச்சீட்டில் திருச்சி விமான நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கான முத்திரை குத்தப்பட்டிருக்கும். அதுபோல கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியதற்கான முத்திரையும் குத்தப்பட்டிருக்கும்.

எனவே, நாடு கடத்தப்பட்டதாக நிரூபிக்க எந்த ஆதாரமும் இல்லாமல் போகலாம் என்பது தமிழ்நாடு மற்றும் இலங்கை புலனாய்வுத் துறையினரின் திட்டம்.

ஆனால் எரிக் கைதானதும், நாடு கடத்தப்பட்டதும் புலனாய்வுப் பிரிவுகளின் திட்டங்களையும்மீறி வெளியே கசிந்தமையால் இப்போது சிக்கல் எழுந்துள்ளது.

'எரிக்'கை விமானத்தில் பாதுகாப்பாக கொண்டுவந்ததை நேரில் கண்ட சாட்சிகள் உள்ளனர். தமிழ்நாட்டிலும் எரிக் கைதானதை உறுதிப்படுத்தக்கூடிய சாட்சிகள் இருக்கிறார்கள்.

மதகுரு ஒருவரும் சாட்சி சொல்லத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் எரிக்மீது எதிர்காலத்தில் வழக்குத் தொடுக்கும்போது சட்டச் சிக்கல்கள் தோன்றுமோ? குறிப்பிட்ட அதிகாரிகள்மீதும் சட்ட பிரச்சனை வருமோ? என்று அரசாங்க சட்ட நிபுணர்கள் யோசித்து வருகின்றனர்.

தமிழ் நாடு அரசாங்கமும் உண்மையை ஒப்புக்கொள்வதா? இல்லையா? என்று தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இதற்கிடையே எரிக் தானாக நாடு திரும்பினார் என்ற சோடிப்பும் மிகப் பலவீனமானது. 'எரிக்' இங்கு தேடப்பட்டது இரகசியமானதல்ல. பத்திரிகைகளிலும் வெளிவந்த செய்தி. அதுமட்டுமன்றி எரிக்கின் நண்பர்கள் சிலரும் கைதாகியுள்ளனர். இவை தெரிந்த பின்பும் எரிக் தானாக நாடு திரும்பினார் என்பது நம்பமுடியாத சோடிப்பாகவே இருக்கும்.

எனவே, வேறு வழியின்றி ஒருவேளை உண்மையை ஒப்புக்கொள்ள இலங்கை அரசாங்கமும் முன்வரவும்கூடும். அப்படிச் செய்யாது, "எரிக் தானாகவே நாடு திரும்பினார், இங்கு வைத்தே கைது செய்தோம்!" என்று சாதித்துக் கொண்டிருந்தால், வழக்கின்போது பல சிக்கல்கள் தோன்றும்.

தமிழ் நாட்டில் உள்ள 'கியூ' பிராஞ்ச் எனப்படும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு முதன் முதலில் நக்சலைட்டுக்கள் என்று அழைக்கப்படும் தமிழக கம்யூனிச புரட்சியாளர்களைப் பற்றி புலனாய்வு செய்வதற்கு உருவாக்கப்பட்டது. பின்னர் அப் பிரிவு தமிழகத்தில் புகலிடம் தேடிய ஈழப்போராளி அமைப்புக்களைப் பற்றி புலனாய்வு செய்வதிலும் ஈடுபடுத்தப்பட்டது.

தமிழக பொலிஸ் பொறுப்பதிகாரியாக மோகனதாஸ் இருந்தபோது, 'கியூ' பிரிவு திரட்டிய ஈழப் போராளிகள் பற்றிய தகவல்கள் இலங்கை புலனாய்வுத் துறைக்கு இரகசியமாகத் தரப்பட்டன.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாகவே இந்த புலனாய்வுத் தகவல்கள் பரிமாறப்பட்டன. இதனால் தமிழ்நாட்டில் கைதாகும் போராளிகளை புகைப்படம் எடுக்குமாறும் மோகனதாஸ் உத்தரவிட்டிருந்தார்.

தமிழ்நாட்டில் இருந்த பயிற்சி முகாம்கள் பற்றிய விபரங்கள் விலாவாரியாக இலங்கை அரசுக்குத் தெரியவந்ததும் இவ்வாறான தொடர்புகள் மூலம்தான்.

தற்போது எரிக் கைதான விடயத்திலும் தமிழக கியூ பிராஞ் அதிகாரிகளுக்கும், இலங்கைப் புலனாய்வு அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்புதான் விளையாடியுள்ளது.

இலங்கை புலனாய்வுத்துறைக்கு இது ஒரு வெற்றிகரமான நடவடிக்கைதான். 'எரிக்' தமிழ்நாட்டில் எங்கு தங்கியுள்ளார் என்ற விவரத்தை துல்லியமாக அறிந்து 'கியூ' பிரிவுக்கு தகவல் கொடுத்து உதவி கோரப்பட்டது.

கொழும்பில் கைதான புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் மூலம்தான் எரிக் பற்றிய விபரம் முதலில் பெறப்பட்டது.

அதன்பின்பே எரிக் இங்கு தேடப்பட்டார். ஆனால் நீலன் பலியான உடனேயே 'எரிக்' தமிழ்நாடு சென்றுவிட்டார். தமிழ்நாட்டில் அவருக்கு ஒரு சகோதரி இருக்கிறார். அவரது திருமணத்தை முன்னிட்டே எரிக் தமிழ்நாடு சென்றிருந்தார். அங்குதான் எரிக் செல்லுவார் என்பதை கொழும்பிலுள்ள எரிக்குக்கு வேண்டப்பட்ட ஒருவர் மூலமே அறிந்து கொண்டனராம்.

தமிழ்நாட்டில் வந்து தன்னைக் கைது செய்ய முடியும் என்று எரிக் கனவிலும் நினைத்திரார். அதனால்தான் சுலபமாக அறியப்படக்கூடிய இடத்தில் வெகு அலட்சியமாக தங்கியிருந்து, வலையில் விழுந்திருக்கிறார்.

'எரிக்' தமிழ்நாட்டுக்கு செல்லும்போது அவர் இங்கு தேடப்படவில்லை. சில நாட்கள் அங்கு தங்கியிருந்துவிட்டு, இங்கு திரும்பி வருவதற்கே சென்றிருந்தார். தேடப்பட்டதால் அங்கேயே தங்கியிருந்தார்.

புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்டுள்ள தகவலின்படி, கொழும்பில் ஏழு இலக்குகள் மீதான தாக்குதலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எரிக் கேட்கப்பட்டிருந்தாராம்.

புலனாய்வுப் பிரிவு கூறும் அந்த ஏழு இலக்குகளும் இவைதான்:

(1) நீலன் திருச்செல்வம் (2) காலி வீதியில் விமானப்படையினர் செல்லும் பஸ் வண்டியை தாக்கி அழிப்பது (3) ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா (4) கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி (5) தகவல் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர. (6) கல்கிசையில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் நிலாப்தீன், அதே பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம்.

எரிக் கைதானது அடுத்து நீலன் கொலை தொடர்பாக பல தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாக புலனாய்வுப்பிரிவு கூறியுள்ளது.

தமது பிடியில் இருந்து நழுவிய ஒருவரை, தமிழ்நாட்டில் எங்கிருக்கிறார் என்று மோப்பம் பிடித்து தமது பிடியில் கொண்டுவந்திருப்பது இலங்கை புலனாய்வுத் துறையினருக்கு மிகப் பெரிய வெற்றிதான்.

***

# ஜனாதிபதித் தேர்தலில் புலிகளின் நிலை என்ன?

நாரதர்

வன்னியில் மழைக்காலத் தாக்குதல்களுக்கு புலிகள் தயாராவதைத் தடுக்க மற்றொரு படை நகர்வுக்கு முயற்சிகள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

'வோட்டர்ஷெட்' நடவடிக்கை பின்னடைவைச் சந்தித்தபோதும், ஜெனரல் ரத்வத்தை கனகராயன் குளத்துக்குச் சென்று படையினரை உற்சாகப்படுத்தினார்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்போவதாக சந்திரிக்கா அம்மையார் அறிவித்தவுடன், ஜெனரல் ரத்வத்தை வன்னிக்குச் சென்று படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

மழைக்காலம் முடிவடைவதற்கு ஜனவரி வரை காத்திருக்காது, மழைக்காலத்திலேயே வரையறுக்கப்பட்ட நகர்வுகளை மேற்கொள்வதே ஜெனரல் ரத்வத்தையின் விருப்பம் என்று தெரிகிறது.

வவுனியா-யாழ் சாலையின் கிழக்கே ஒட்டுசுட்டானில் இருந்து, மேற்கே வவுனிக்குளம் வரை குறுக்காக 40 கிலோ மீட்டர் நீளத்துக்கு படையினரின் முன்னரங்க அரண்கள் உள்ளன. இவற்றைக் கண்காணிக்க புலிகளும் அதே நீளத்துக்கு காவலரண்கள் அமைத்துள்ளனர்.

இது தவிர ரணகோஷ படையினரின் முன்னரங்க நிலைகள் சிராட்டிக் குளத்தில் இருந்து பள்ளமடுவரை உள்ளன.

இவ்வாறாக போர் அரங்கு நீண்டு விரிவடைந்துள்ளதால் இரு தரப்புக்கும் ஆள் பற்றாக்குறை இருக்கிறது.

போர் அரங்கை நீட்டி விரிவாக்கினால் புலிகளது ஒன்று குவிந்த செறிவை தளர்த்தி, பலவீனமான பகுதிகள் ஊடாக படைகளை நகர்த்தலாம் என்பதே படைத்தரப்பின் கணிப்பு.

ஆனால் புலிகளது தாக்குதல் காரணமாக படைத்தரப்புக்கும் இழப்புக்கள் பெருமளவில் ஏற்பட்டு வருகின்றன. இழப்புக்கு ஏற்ப மறுபடி நிரவல் செய்ய படைத்தரப்புக்கும் ஆட்பலம் போதாது. புதிதாகச் சேர்க்கும் முயற்சியும் கைகூடவில்லை.

மறுபுறத்தில் புலிகளுக்கும் ஆட்பல இழப்புக்கள் ஏற்பட்டபோதிலும், புதியவர்களை உள்வாங்குவதில் படையினரைவிட புலிகள் முன்னணியில் இருக்கின்றனர்.

அது மட்டுமன்றி பீரங்கிப் படையணியின் வளர்ச்சி, குறைந்த வளத்தோடு பெரும் தாக்குதல்களை நடத்தும் போர் உத்தி போன்றவற்றால் விரிந்த போர் அரங்கின் சகல முனைகளிலும் புலிகள் படையினரின் முன்னேற்றத்தை எதிர்கொள்கின்றனர்.

தற்காப்புக்கான முறியடிப்புச் சமரில் ஈடுபடுவதோடு, தாக்குதல் யுத்த முறையிலான அதிரடித் தாக்குதல்களிலும் புலிகள் ஈடுபடுவதால் விரிந்த போர் அரங்கின் பாதுகாப்பை பலப்படுத்தும் தேவை படைத்தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

புதிதாக படைக்கு ஆள் திரட்ட முடியாததால், ஏனைய பிராந்தியங்களில் உள்ள படையினரைத்தான் வன்னிக்குப் பகிர்ந்து அனுப்ப வேண்டியுள்ளது.



ஆனால் நாட்டின் பலபாகங்களிலும் புலிகளது நடவடிக்கைகள் விரிவடைந்து வருவதால் படையினரை ஏனைய பகுதிகளில் இருந்து வன்னிக்கு அனுப்பும் வேகம் தடைப்பட்டுவிட்டது.

எனவே, விரிந்த போர் அரங்கு மூலம் புலிகளைப் பலவீனமாக்க மேற்கொண்ட முயற்சி, படைத்தரப்புக்கும் பலவீனமாக முடிந்துள்ளது.

தற்போதைய மழைக்காலத்தில் கெரில்லாத் தாக்குதல்களுக்கே போதிய வாய்ப்பு இருப்பதால், அதனை எதிர்கொள்வதற்கு உரிய உத்திகளை வகுப்பதுதான் படைத்தரப்புக்கு பெரும் பிரச்சனை.

கடந்த ஆண்டு மழைக்காலத்தில் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தவில்லை. ஆனால் இம்முறை அவ்வாறு இருக்கப்போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தலும் நடக்க உள்ளதால், அதற்கு தாக்கமான போர் உபாயங்களை பிரபாகரன் வகுத்துவருவதாகவே வன்னித் தகவல்கள் கூறுகின்றன.

'நாட்டின் எப்பகுதியிலும் பாதுகாப்பு உத்தரவாதமில்லை. இந்த அரசாங்கம் போரில் வென்றது என்பது ஒரு மாயை. நாம் நினைத்தால் எங்கு வேண்டுமானாலும் எதுவும் செய்வோம். நாம் இப்போதும் பலமாக இருக்கிறோம்' என்ற செய்தியை சிங்கள மக்களுக்கு உணர்த்தக்கூடியவிதமாக புலிகளது தாக்குதல்கள் நடக்கலாம்.

ஐ.தே.கட்சியும் புலிகளது அத்தகைய தாக்குதல்களை உள்ளூர பெரிதும் எதிர் பார்க்கிறது.

அதுமட்டுமன்றி புலிகள் தமக்கு உதவுவார்கள் என்றுகூட ஐ.தே.கட்சி பிரமுகர்கள் சிலர் தமிழ் நண்பர்களிடம் கூறியும் இருக்கிறார்கள். புலிகளோடு தமக்கு பகையில்லை என்று தமிழ் மக்கள் நம்பினால் நல்லது என்பதே ஐ.தே.கட்சியின் விருப்பம்.

ஆனால் புலிகளைப் பொறுத்தவரை இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளுமே ஒன்றுதான். ஆனால் அம்மையார் ஆட்சியில்தான தமிழ் மக்கள் முன்னெப்போதும் சந்திக்காதளவுக்கு துயர்களையும், அழிவுகளையும் சந்தித்துள்ளனர் என்பது புலிகளது குற்றச்சாட்டு.

எனவே அம்மையாரின் வாக்குக் குவிப்புக்கு எதிரான புலிகளின் நடவடிக்கைகளை ஐ.தே.கட்சி தனக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளும். ஆனால் புலிகள் ஐ.தே.கட்சியை ஆதரிக்கப்போவதில்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக புலிகள் பகிரங்கமாக கருத்து எதையும் தெரிவிக்கவும் போவதில்லை. ஆனால் புலிகள் என்ன கூறப் போகிறார்கள்? என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடையே இருக்கிறது.

இது சிறீலங்கா நாட்டின் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல். இதில் தமிழ் ஈழ மக்கள் பங்கு கொள்ளத் தேவையில்லை. அதேசமயம் சிறீலங்காவில் கணிசமான பெரும்பான்மையுடன் உறுதியான அரசாங்கம், அரசாங்கத் தலைமை ஏற்படுவதை தடுக்க தமது இராணுவ பலத்தை பயன்படுத்துவது என்பதே புலிகளது நிலைப்பாடாக இருக்கும்.

தேர்தலில் வடக்கு-கிழக்கில் வாக்குப் பெட்டிகள் நிரப்பப்படலாம், கள்ள வாக்குகள் போடப்படலாம். அதன்மூலம் தமிழ் மக்கள் வாக்களித்ததாகக் காண்பிக்கப்படலாம் என்று கருதியே புலிகள் தேர்தல்கள் தொடர்பாக தமது நிலைப்பாடுகளை பகிரங்கமாகக் கூறாது தவிர்த்து வருகின்றனர்.

தாம் ஒரு நிலைப்பாட்டைக்கூற, தமது எதிரிகள் பெட்டிகளை நிரப்பிவிட்டு, 'புலிகளது நிலைப்பாட்டை தமிழ் மக்கள் ஏற்கவில்லை' என்று கூற முற்படலாம் என்று புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது.


ஜனாதிபதித் தேர்தலில் பொதுவான தமிழ் வேட்பாளராக போட்டியிட குமார் பொன்னம்பலம் முன்வந்திருந்தார்.

இது தொடர்பாக புலிகளுக்கு பலமாதங்களுக்கு முன்பே தெரிவிக்கப்பட்டுவிட்டது. குமார் போட்டியிட்டால் புலிகளது ஆதரவுடன் போட்டியிடுவதாக யாவருக்கும் தெரியும்.

குமாரைத் தோற்கடிக்க பல சக்திகள் சதிவேலைகள் செய்யும். எதிராக கள்ளவாக்குகளும் போடப்படலாம். அவ்வாறு செய்துவிட்டு குமாரின் தோல்வியை புலிகளது ஆதரவாளரது தோல்வியாக காண்பிக்க முயலலாம். இதனைக் கருதியே குமாருக்கு புலிகளின் தரப்பில் இருந்து பச்சைக் கொடி காண்பிக்கப்படவில்லை என்று தகவல்.

தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி சில கோரிக்கைகளை முன்வைத்தால், அந்த வேட்பாளர் கணிசமான வாக்குகளைப் பெற்றாக வேண்டும். ஆனால் தற்போது வடக்கு-கிழக்கில் உள்ள சூழ்நிலையில் தேர்தல்கள் சுதந்திரமாக நடக்கும் அறிகுறியே கிடையாது. மக்களது உண்மையான வாக்குகளும் முடிவுகளைத் தீர்மானிக்க முடியாது. எனவே எதிர்த்தரப்பு தான் நினைத்தபடி கையாளக்கூடிய சூழ்நிலையில் தமிழ் வேட்பாளர் போட்டியிடுவது புத்திசாலித்தனமானதல்ல என்று புலிகள் கருதுவதாகத் தெரிகிறது.

# அதிரடி அய்யாத்துரை



***பச்சை அணித் தலைவர்*** தமிழ்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கேட்டிருக்கிறார். என்றோ ஒருநாள் அண்ணரும் பதவிக்கு வருவார்தானே என்ற நினைப்பில் தமிழ்க்கட்சித் தலைவர்களும் பவ்வியமாக ஏதேதோ கூறி நழுவிவிட்டனர். ஆனால் கூட்டான கட்சியின் வெகுஜனப் பிரதிநிதிகள் ஒருபடி மேலே போய், "ஆதரித்தால் உங்களைத்தான் ஆதரிப்போம். இல்லையென்றால் சும்மா இருப்போம்!" என்று போட்டினமாம் ஒரு போடு. இதைத்தான் அம்மாவுக்கும் செல்லியிருக்கினமாம். இரண்டு அணியும் ஒன்றுபட்டால் இந்த விஷயம் கசிந்தால் என்னாகும்? சேர்ந்து நின்றல்லோ உதைப்பினம்!

***வவுனியாவில் மின்மாற்றிகளைப்*** பாதுகாக்கப்போவதாக தமிழ்க் கட்சிகள் கூறியது தெரியும்தானே? அதில் ஒரு கட்சியின் குடாநாட்டிலுள்ள நகரசபை உபதலைவர் தொலைபேசி கம்பிகளை சுருட்டிப் போட்டார். பொலிசார் லபக்கென்று பிடித்திருக்கினம். அங்கே களவு, இங்கே பாதுகாப்பு! அது ஒருபுறமிருக்க, ஆயுதக் கலாசாரம் ஒழிக என்று கூறும் முன்னாள் மாகாணசபைக் கட்சியும் மின்மாற்றிகளை பாதுகாப்பதாகக் கூறியிருக்குது. ஆயுதம் இல்லாமல் எப்படி பாதுகாப்பினம்? இப்ப உண்மை வெளிவந்து போச்சல்லோ!

***நீலமானவர் அதிகாரத்தரப்புக்காக*** பிரசாரம் செய்தது பொய்யாம். பத்திரிகைகள் சூட்டிய கதையாம். சங்கதியார் சலாப்பியுள்ளார்! அது வெளிநாட்டு விவகாரத்துக்குப் பொறுப்பானவர் பகிரங்கமாகக் கூறிய விஷயமல்லோ. அப்படியானால் சங்கதியார் அப்போதே மறுத்திருக்கலாமல்லோ! பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லுக!

***குமாரரை ஜனாதிபதி*** வேட்பாளராக கேட்குமாறு தமிழ்க்கட்சித் தலைவர் ஒருவர் கூறினாராம். ஆனால் அதே தலைவர் சக்தியானவருக்காகப் பாடுபடத் தயார் என்றும் 'சிக்னல்' கொடுத்துள்ளாராம். அதனை முன்கூட்டியே அறிந்த குமாரர் கொழும்புக்குள் சிரித்துக் கொண்டே, 'ரெண்டு எழுத்தார் அனுமதி தந்தால்தான் நான் போட்டியிடுவேன்!' என்று திட்டவட்டமாக கூறினாராம். ஒரே கலகம்தான்!

***தமிழ்க்கட்சிகள்*** தங்களைத்தான் ஆதரிக்கும் என்று உறுதியில் இருக்கிறதாம் அதிகாரத் தரப்பு. பச்சை அணி தமிழ்க்கட்சித் தலைவர்களைச் சந்திப்பதில் காண்பித்த அக்கறையை அதிகாரத்தரப்பு காண்பிக்கவில்லையாம். 'எப்படியும் தங்களை ஆதரித்துத்தானே நிற்கவேணும்' என்று அகங்காரமாக நினைச்சினமாக்கும்.

***வடக்கு-கிழக்கு*** முன்னாள் முதல்வர் சக்தியானவரை ஆதரிப்பதால், அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தே தீருவது என்று ஒற்றைக் காலில் நிற்கிறார் அக் கட்சியின் செயலாளர். முன்னாள் முதல்வர் ஒருவேளை பச்சை அணியை ஆதரித்திருந்தால் செயலாளர் சக்தியானவரை ஆதரித்திருப்பாராம்.

***வடக்கு-கிழக்கில்*** பெட்டிகளை நிரம்பும் நம்பிக்கையோடுதான் விரைவாக தேர்தல் நடத்தும் முடிவு செய்யப்பட்டதாக பச்சை அணி உறுதியாகக் கூறிவருகிறது. இதனை எப்படித் தடுக்கலாம் என்றும் ஆராய்ந்து வருகிறார்களாம். வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ் வேட்பாளர் ஒருவரைப் போட்டியிட வைத்தால் நிரப்பலைத் தடுக்கலாம் என்றும் யோசிக்கப்பட்டதாம். பச்சைக் கட்சியின் டாக்டர் முன்னாள் மாகாண சபைக் கட்சிச் செயலாளரை இரகசியமாகச் சந்தித்து இதுபற்றி பேசியுள்ளாராம். தேவையான பண உதவி செய்வதாகவும் உத்தரவாதம் கொடுக்கப்பட்டதாம். இதனையடுத்தே ஏனைய தமிழ்க்கட்சிகளை சந்தித்து ஆதரவு திரட்ட ஆரம்பித்தாராம் செயலாளர். சும்மா ஆடுமோ சோழியன் குடுமி?!

***வவுனியாவில்*** தமக்குப் போட்டியாக ஜனநாயகக் கட்சியினர் வளரக்கூடாது என்பதில் கழகம் கண்ணும் கருத்துமாக உள்ளதாம். இரு கட்சித் தலைவர்களும் நண்பர்களாக இருந்தும், ஜனநாயக் கட்சியினர் இருவர் வவுனியாவில் கடத்தப்பட்டது அதனால்தானாம். 'அண்ணன் தம்பி என்றாலும் வாயும் வயிறு வேறு வேறு' என்பது தற்கால தமிழ்க் கட்சிகளது அரசியலுக்கும் பொருந்துமாக்கும்.

***இவ்வாரப் பொன்மொழி:***

"நீ தப்பித் தவறி
கீழே விழுந்தால்
எழுமுன் தரையிலிருந்து
எதையாவது எடுக்க முடியுமா
என்று முயற்சி செய்!"




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# மாற்றங்கள் ஏற்படுத்திய புலிகளது மகளிர் அணி

1992 மார்ச் மாதம் 6ம் திகதி முதல் 8ம் திகதி வரை மூன்று நாட்கள் 'தமிழீழப் பெண்கள் மாநாடு' நடைபெற்றது.

சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டே இம் மாநாடு விடுதலைப்புலிகள் மகளிர் அணியினரால் நடத்தப்பட்டது.

இலங்கையில் தமிழ்ப்பெண்கள் நீண்டகாலமாக போராட்டங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். தமிழரசுக்கட்சியும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் நடத்திய போராட்டங்களில் பெண்கள் பங்குகொண்டிருந்தனர்.

எனினும் அப் பெண்கள் மத்தியில் பெண் விடுதலைக் கருத்துக்கள் எந்தளவுக்கு வேரூன்றியிருந்தன என்பது கேள்விக்குறியே.

அதன் பின்னர் ஆயுதப்போராட்ட அமைப்புக்கள் வளர்ச்சி பெற்றபின்னர் பெண்களை திரட்டுவதில் ஈடுபட்டன.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப் அமைப்புத்தான் பெண்களை அதிகம் திரட்டியது. ஈழப் பெண்



கள் விடுதலை முன்னணி என்னும் பெயரில் பெண்கள் சேர்க்கப்பட்டனர்.

அதன் பின்பு ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படை, உளவுப்பிரிவான மக்கள் ஆய்வுப்பிரிவு என்பவற்றிலும் பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

எனினும் பெண்கள் சமர்களில் ஈடுபடுத்தப்படவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். சார்பாக பெண்கள் பலர் லெபனானுக்கு இராணுவப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். ஆயினும் அவர்கள் திரும்பிவந்தபோது தமது அனுபவத்தைப் பயன்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை.

அதேபோல புளொட்டிலும், ரெலோவிலும் பெண்கள் சேர்க்கப்பட்டனர். அவர்களும் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்பட்டனரே தவிர சமர்களிலோ, அவர்கள் சுயமாக தம் ஆளுமையை வெளிப்படுத்தும் களங்களிலோ ஈடுபடுத்தப்படவில்லை.

## ஆர்வமில்லை

விடுதலைப் புலிகள் அமைப்பினர் அக் கட்டத்தில் பெண்களை இணைத்துக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. சுதந்திரப் பறவைகள் என்னும் அமைப்பை உருவாக்கிய போதும், அந்த அமைப்பு பலம்மிக்கதாக இருக்கவில்லை.

பெண்கள் தொடர்பான பிற்போக்கான கருத்தோட்டங்களே அப்போது புலிகளது பிரமுகர்களிடமும் காணப்பட்டது.

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்தால் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று ஒரு பிரசுரம் யாழ்ப்பாணத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

அப்பிரசுரத்தை வெளியிட்டதில் புலிகளது யாழ் மாவட்ட முக்கியஸ்தர்களுக்கு பங்கிருந்தது. குறிப்பாக திலீபனுக்குத் தொடர்பிருந்தது.

அப் பிரசுரம் பழைய பிற்போக்கான கருத்தோட்டங்களை உள்ளடக்கியிருந்தது.

அக் காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். பெண் விடுதலைக்கான சஞ்சிகைகளை வெளியிட்டது. ஆயினும் அதன் ஆக்கங்கள் ஆரம்பத்தில் ஆண் உறுப்பினர்களால்தான் எழுதப்பட்டன. ரமேஷ், சமகண்ணன் இருவரும்தான் 'செந்தணல்' என்னும் பெண்களுக்கான சஞ்சிகைக்கான ஆக்கங்களை தயாரித்திருந்தனர்.

'அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள் எரிப்பதற்காக எழுந்து வருகிறோம்' என்ற கோஷத்தோடு செந்தணல் வெளிவந்தது.

ஆனால் எழுத்தோடு சரி, கொடுமைகளை எரிப்பதற்கான எந்த வாய்ப்பையும் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். தனது பெண் உறுப்பினர்களுக்குத் தரவில்லை.

ரெலோவும் 'செந்தணல்' வெளியானதை பார்த்துவிட்டு தாமும் ஒரு பெண்கள் சஞ்சிகை வெளியிட்டனர். செந்தணலின் ஆக்கங்களைத் தழுவியே அது காணப்பட்டது. புளொட்டும் பெண்களுக்கான சஞ்சிகை ஒன்று வெளியிட்டதாக ஞாபகம்.

ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப், புளொட், ரெலோ, ஈரோஸ் போன்ற இயக்கங்கள் பெண் விடுதலை பற்றிபேசியதோடு சரி. எம்மோடும் பெண்கள் இருக்கின்றனர் என்று காண்பித்ததோடு நிறுத்திக் கொண்டனர்.

பெண்கள் தொடர்பான நிலைப்பாட்டை மாற்றிக்கொண்ட புலிகள், பெண்களை தமது இயக்கத்தில் பெருமளவாக இணைத்துக் கொள்ள ஆரம்பித்த பின்னரே பல்வேறு மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. ஏனைய அமைப்புக்கள் எவ்வித திட்டமும் இல்லாமல் பெண்களை உள்வாங்கின.

விடுதலைப்புலிகள் பெண்களை பெருமளவில் இணைத்துக் கொண்டபோது, அவர்களுக்கான வேலைத்திட்டமும் இருந்தது.

## ஆயுதப்பயிற்சி

ஆண் உறுப்பினர்களையும் சரி, பெண் உறுப்பினர்களையும் சரி இயக்கத்தின் தாங்கு திறனுக்கு ஏற்பவே புலிகள் அக்காலகட்டத்தில் உள்வாங்கினார்கள்.

அதன் காரணமாகவே ஆட்களை சேர்த்து வைத்துக் கொண்டு, அவர்களைப் பராமரிக்க முடியாமலும், ஆயுதம் வழங்க முடியாமலும், கட்டுப்பாடாக வைத்திருக்க முடியாமலும் தளம்பும் நிலை புலிகளுக்கு ஏற்படவில்லை.

பெண்கள் பெருமளவாக சேர்க்கப்பட்டதும் முறையான ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இராணுவ நடவடிக்கை, அரசியல் நடவடிக்கை இரண்டுக்கும் தயாராகவே அவர்கள் வளர்க்கப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியான கட்டங்களில் ஒன்றாகத்தான் தமிழீழப் பெண்கள் மாநாடு நடைபெற்றது.

அரசியல், இராணுவ நடவடிக்கைகளில் மட்டுமன்றி சமூகப் பிரச்சனைகளிலும் புலிகளது பெண்கள் அணி கவனம் செலுத்த ஆரம்பித்தது.

புலிகள் பெண்களைப் போருக்காக மட்டுமே பயன்படுத்துவதாக ஒரு கருத்து தம்மை பெண் நிலைவாதிகளாகக் கூறும் சிலரிடம் உள்ளது.

ஆனால் புலிகளது பெண்கள் அமைப்பினர் சீதன ஒழிப்பு முதற்கொண்டு பெண்கள் மீதான பல்வேறு அடக்குமுறைகள் தொடர்பாக சுயமாக முடிவுகள் எடுத்துச் செயற்பட்டனர்.

சீதன ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கும் புலிகளது பெண்கள் அமைப்பே முன்னின்றது.

அச் சட்டத்தின் பிரகாரம் 'தமிழீழத்தில் சீதனம் வாங்குவதும், கொடுப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது.

தங்கள் மனைவியரை துன்புறுத்தும் கணவர்மார்களையும் பெண்புலிகள் தலையிட்டுத் திருத்தினார்கள்.

பெண்கள் தொடர்பாக நிலவிய தாழ்வான கண்ணோட்டங்கள் பெண் புலிகளது செயற்பாடுகளால் பலவீனமாகின.

சைக்கிள் ஓடும் பெண்களைக்கூட கேலி செய்த தமிழ்ச் சமூகத்தினர், புல்டோசர், ட்ரக் வண்டிகள், ஜீப்புக்கள் போன்ற கனரக வாகனங்களை இலாவகமாக செலுத்திச் செல்லும் தமது பெண் பிள்ளைகளைக் கண்டு முதலில் வியந்தனர். பின்னர் அதுவே சர்வ சாதாரணமானது.

கணவனையும், கணவன் இறந்து போனால் தன் ஆண் பிள்ளையையும் போர்க் களத்திற்கு அனுப்பி வைப்பதே தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்ட வீரப் பெண்ணின் இலக்கணம்.

தன் கணவரதும், பிள்ளைகளதும் சம்மதத்தோடு புலிகளோடு இணைந்து கொண்ட பெண்களும் இருக்கின்றனர்.

கணவரும், பிள்ளைகளும் புலிகளது பாசறைக்கு சென்று சந்தித்துவிட்டு திரும்பினார்கள்.

1992 மார்ச் மாதம் சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டும், தமிழீழப் பெண்கள் மாநாட்டை முன்னிட்டும் புலிகளது தலைவர் வே.பிரபாகரன் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

அந்த அறிக்கையின் பிரதான பகுதிகள் பின்வருமாறு:

"எமது தேசிய சுதந்திர இயக்கம் பெண் விடுதலையைத் தனது அடிப்படை அரசியல் குறிக்கோள்களில் ஒன்றாக வரித்துக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

பெண் விடுதலை என்னும்போது அரச அடக்குமுறையில் இருந்தும், சமூக ஒடுக்குமுறையில் இருந்தும், பொருளாதார சுரண்டல் முறையில் இருந்தும், பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம். எனவே எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலைப் போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதாரவிடுதலை என்ற குறிக்கோள்களைக் கொண்ட மும்முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

இந்த மும்முனைப் போராட்டத்தில் தேசிய விடுதலை, அதாவது எமது மண்ணின் விடுதலை முக்கியமானது. எமது மண்ணின் விடுதலை பெண்ணின் விடுதலைக்கு மட்டுமன்றி எமது இனத்தின் விடுதலைக்கும் அத்திவாரமானது.

இந்த மண்மீட்புப் போர்க்களத்தில் தமிழ் இளம் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கிறார்கள். முழு உலகமே வியக்கும் வகையில் அபாரமான அர்ப்பணிப்புக்களை செய்து வருகிறார்கள். விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவின் தோற்றமும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று என்பதை நான் பெருமிதத்துடன் கூறமுடியும்.

எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் அழுத்தங்களில் இருந்து பெண்ணினம் விடுதலை வேண்டி நிற்கிறது.

நீண்ட நெடுங்காலமாக எமது சமூகத்தில் வேரூன்றி நிற்கும் மூட நம்பிக்கைகளும், இந்த மூட நம்பிக்கைகளில் இருந்து தோற்றம் கொண்ட சமூக வழக்குகளும், சம்பிரதாயங்களும் எமது பெண்களின் வாழ்க்கையை சீரழித்து வருகிறது.

ஆணாதிக்க அடக்குமுறையாலும், வன்முறையாலும், சாதியம், சீதனம் என்ற கொடுமைகளாலும் தமிழீழப் பெண் இனம் விபரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வருகிறது.

இந்த ஒடுக்குமுறைச் சிறையில் இருந்து விடுதலை பெறுவதானால், பெண்ணினம் முதலில் தனக்கு எதிராக



ஓவியம்

ஏவப்பட்டுவரும் ஒடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தனது சீரழிந்த வாழ்க்கை நிலையை சீரமைத்துக் கொள்வதானால், பெண்ணினம் தனது இழிநிலைபற்றி விழிப்புக் கொள்ள வேண்டும்.

தலைவிதி என்றும், கர்மவினை என்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும், பழமை, பண்பாட்டுக் கோலம் என்றும் காலம் காலமாக மனவுலக இருளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது, ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்" இவ்வாறு பிரபாகரன் தனது செய்தியில் தெரிவித்திருந்தார்.

மாநாட்டில் ஓவியங்கள் பல இடம்பெற்றிருந்தன. கொக்குவில் இந்துக் கல்லூரியில் புலிகளின் மகளிர் முன்னணியினரால் ஓவியக் கண்காட்சியும் நடத்தப்பட்டது.

விடுதலைப் போராட்டத்தை சித்தரிக்கும் ஓவியங்கள் மட்டுமன்றி, பெண்கள் மீதான ஒடுக்குமுறையைச் சித்தரிக்கும் ஓவியங்களும் இடம் பெற்றிருந்தன.

கல்யாணச் சந்தையில் ஆண்மகன் வீட்டுக்கும், காருக்கும், மற்றும் வெளிநாட்டுப் பயணத்துக்கும் விலை கூறப்படும் நிகழ்வைச் சித்தரிக்கும் ஓவியமும் வைக்கப்பட்டிருந்தது.

1) சமூக அரசியல் பொருளாதார வாழ்வில் தமிழீழ பெண்ணினம்மீது பிரயோகிக்கப்படும் சகல ஒடுக்குமுறை, சுரண்டல் முறைகளுக்கும் எதிராகப் போராடுவது.

2) பெண்ணின் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் இழிவுபடுத்தி பெண்ணை விலைப் பொருளாக்கும் சீதனக் கொடுமைக்கு எதிராகப் போராடுவது.

3) நிர்வாகத்திறன், கூட்டுழைப்பு, தலைமைத்துவம் போன்ற ஆளுமைப் பண்புகளை மகளிர் மத்தியில் வளர்த்துவிட உழைப்பது.

4) உலகெங்கும் உள்ள முற்போக்கான பெண்கள் அமைப்புக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி நட்புறவை வளர்ப்பது. போன்றவை தமிழீழப் பெண்கள் மாநாட்டின் குறிக்கோள்களாக அறிவிக்கப்பட்டன.

மாநாட்டை முன்னிட்டு பெண்களின் ஊர்வலமும் நடைபெற்றது.

## மீண்டும் தாக்குதல்

1992 மே மாத ஆரம்பத்தில் ஆனையிறவு இராணுவத் தளம் மீது புலிகளது அணிகள் திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டன.

இருள் படரத் துவங்கிய நேரத்தில் முன்னணிக் காவலரண்கள்மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

ஆனையிறவுப் பகுதியில் பலத்த கண்காணிப்பு இருந்தும், முன்னணிக் காவலரண்களைப் புலிகள் பதுங்கிச் சென்று- நெருங்கி நின்று தாக்குதல் தொடுத்தனர்.

தமது கண்காணிப்பை மீறி புலிகள் வரமுடியாது என்று நினைத்திருந்த படையினருக்கு புலிகளது திடீர் தாக்குதல் அதிர்ச்சியைக் கொடுத்தது.

அதனால் காவலரண்கள் சில புலிகளது கட்டுப்பாட்டில் வந்தன. அங்குள்ள படையினர் ஆயுதங்களைக் கைவிட்டு பின்வாங்கினர்.

எனினும் தாக்குதல் ஆரம்பமாகிய பின்னர் ஆனையிறவுத் தளத்தில் இருந்து உதவிக்குப் படையினர் வந்தனர்.

அவர்கள் வருவதற்கு இடையிலேயே காவலரண்களில் கைப்பற்றிய ஆயுதங்களோடு புலிகள் திரும்பிவிட்டனர். இத் தாக்குதலில் 30 இராணுவத்தினர் பலியானதாக படையினர் கூறினார்கள்.

புலிகள் சென்ற பின்னர் ஆனையிறவு பகுதிகளில் ஹெலிகளும், குண்டு வீச்சு விமானங்களும் பலத்த தாக்குதல் நடத்தின. அதற்கு முன்னரே புலிகள் இழப்புக்கள் இன்றி தளம் திரும்பிவிட்டனர்.

(தொடர்ந்து வரும்)

# மறுபிறவி

**ரா**ஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன்முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.

அலுவலகத்தில் நான், சின்னரவி, டிரைவர் கண்ணன், ராமச்சந்திரன் ஆகியோர் இருந்தோம்.

இரவு 9 மணி... திடீரென பூட்ஸ் சத்தம்... டெல்லி சி.பி.ஐ. அதிகாரியான டி.எஸ்.பி.நாராயணன் உள்ளே வந்தார். ஸ்டுடியோவை சோதனையிடுவதற்கு அனுமதி பெற்று வந்திருப்பதாகத் தெரிவித்தார். அவரது கடமைக்கு நான் இடையூறாக இருக்க விரும்பவில்லை. சோதனைகள் தொடங்கின.

நான் வாசலுக்கு வந்து பார்த்தேன். தெரு நிறைய போலிஸ் படை குவிக்கப்பட்டிருந்தது. 5 அடிக்கு ஒரு சி.ஆர்.பி.எ.ஃப். பொலிஸை நிறுத்தியிருந்தனர்.

சோதனை என்ற பெயரில் இரவு 10 மணிக்கு எனது அலுவலகத்தை புரட்டி எடுக்கத் தொடங்கியவர்கள் விடிகாலை 3 மணி வரை சளைக்காமல் சலித்து எடுத்தனர்.

எனது அலுவலகம் 25 வருடகால அனுபவங்களின் பொக்கிஷம். தேசிய கட்சிகள், திராவிட இயக்கங்கள், தமிழ் அமைப்புகள் என எல்லாத் தரப்பிலும் எனக்கு தொழில் ரீதியான தொடர்பு இருந்ததால் அவை தொடர்பான புகைப்படங்கள், பிரசுரங்கள் அலுவலகத்தில் நிறைந்திருந்தன.

பஞ்சாபில் சி.ஆர்.பி.எ.ஃப். முகாமை நான் புகைப்படம் எடுத்ததற்கு டி.ஐ.ஜி. எழுதியிருந்த பாராட்டுக் கடிதமும் அந்த பொக்கிஷங்களில் ஒன்று. ஆனால் சோதனையிட வந்தவர்களோ, என்னை சிக்க வைப்பதற்கு எவை எவை ஏதுவாக இருக்கும் என்ற கண்ணோட்டத்திலேயே தேடி அவற்றை மட்டும் எடுத்து தனியே வைத்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பான புகைப்படங்கள், பிரசுரங்கள் ஆகியவற்றை மட்டுமே தனியாக எடுத்து வைத்தனர். அரசு தரப்பு சான்று ஆவணமாக (Search List 1354)51 பொருட்களை எடுத்து 6ந் திகதி அதிகாலையில் என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு, சிறப்பு புலனாய்வுக் குழுவின் அலுவலகமான மல்லிகைக்கு என்னைக் கொண்டு போனார்கள்.


அங்கே தனுவைப் போலவே ஒரு பெண் அமர்ந்திருந்தார். என்னால் நம்பமுடியவில்லை.

தலை தனியாக, உடல் தனியாக சிதறிப் போன தனு எப்படி இங்கே உயிருடன்? என்று குழப்பமாக இருந்தது.

அப்போது என்னிடம் வந்த அதிகாரி ஒருவர், "உங்களுக்கு தனுவை நன்றாகத் தெரியுமா?" என்றார். எந்த சந்தர்ப்பத்திலாவது என்னை சிக்கவைக்க வேண்டும் என்பது தான் எஸ்.ஐ.டியின் நோக்கம். அவர்களின் குதர்க்கமான நோக்கத்தைப் புரிந்து கொண்ட நான், "உங்களைப் போலவே நானும் போட்டோவில்தான் தனுவை பார்த்திருக்கிறேன்." என்றதும் அந்த அதிகாரி அமைதியாகிவிட்டார்.

தனுவாக தெரிந்த அந்த பெண் தனு அல்ல. தூத்துக்குடியைச் சேர்ந்த அந்த பெண், அச்சு அசலாக தனுவைப் போலவே இருந்ததால், எஸ்.ஐ.டியினர் விசாரணைக்காக பிடித்து வந்துவிட்டார்கள். விசாரணையில், அவர் தனு அல்ல (?!) என்று தெரிந்ததும் அனுப்பி வைத்துவிட்டார்கள். தனு மட்டுமல்ல, சிவராசன்கூட மல்லிகைக்கு வந்திருக்கிறான்.

கப்பற்படையை சேர்ந்த அதிகாரி ஒருவர் ஹனிமூனுக்காக சென்னைக்கு வர, அவர் சிவராசனைப் போலவே தோற்றத்தில் இருந்




ததால் எஸ்.ஐ.டியினர் அவரை மல்லிகைக்குப் பிடித்து வந்துவிட்டார்கள். தான் யார் என்பதை அடையாளம் காட்டிய அந்த கப்பற்படை அதிகாரி எஸ்.ஐ.டி.யிடமிருந்து ஒரு கடிதமும் வாங்கிக்கொண்டு புறப்பட்டார். விழுப்புரம் அருகே மீண்டும் அவரைச் சந்தேகத்துடன் பொலிஸார் கைது செய்தபோது, எஸ்.ஐ.டி. கொடுத்த கடிதத்தைக் காட்டியிருக்கிறார். விழுப்புரம் பொலிஸார் மல்லிகைக்கு தொடர்பு கொண்டு விசாரித்துவிட்டு கடற்படை அதிகாரியை விடுவித்தனர்.

காமாலைக்காரனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்பது போல் கண்ணாடி போட்டவர்களெல்லாம் சிவராசனாகவும், சுடிதார் போட்டவர்களெல்லாம் சுபாவாகவும் எஸ்.ஐ.டி.யினருக்குத் தெரிந்தனர்.

சிவராசன், சுபா பற்றிய தகவல் பெறுவதற்காக மல்லிகையில் தனியாக ஃபோன் லைன்கள் இருந்தன.

எங்கிருந்து தகவல் வந்தாலும் எஸ்.ஐ.டி.யினர் செலவுக்கு பணம் வாங்கிக்கொண்டு தனியார் காரில் சர்...சர்ரென கிளம்பிவிடுவார்கள். விசாரணைக்காக மல்லிகைக்கு சென்று வரும்போது இவற்றையெல்லாம் நான் பார்க்க முடிந்தது.

## சுபா சுந்தரம்

2.7.91 அன்று ராயப்பேட்டையில் உள்ள எனது சுபா நியூஸ் போட்டோ சர்வீஸ் அலுவலகத்தில் இருந்தேன். எஸ்.ஐ.டி. அதிகாரி மனோகரன் ஃபோன் செய்து ரகோத்தமன் அழைப்பதாகவும், உடனடியாக மல்லிகைக்கு வரும்படியும் தெரிவித்தார்.

நான் புறப்பட்டுச் சென்றேன். மல்லிகையில் டி.எஸ்.பி. ராமகிருஷ்ணன் என்னை ஒரு அறைக்கு அழைத்துச் சென்று மேஜையருகே உட்காரவைத்தார்.

ஒரு பேப்பரில் எனது சட்டை நிறம், பேண்ட் நிறம் ஆகியவற்றையும் குறித்துக் கொண்டார். என்னுடைய கைக்கடிகாரம், சட்டைப்பையில் இருந்த பணம் ஆகியவற்றையும் வாங்கி வைத்துக்கொண்டார்.

இதற்கு முன் விசாரணைக்காக வந்த போது இப்படிப்பட்ட நடவடிக்கைகள் இல்லையே என்று நான் அதிர்ச்சியாக இருந்த போது, என்னருகில் நின்ற காவலர் மெல்ல என் காதருகே வந்து "உங்களை அரெஸ்ட் செய்திருக்கிறார்கள்!" என்றார் எவ்வித சலனமுமின்றி. என்னையும் அறியாமல் நான் ஆடிப்போனேன்.

மல்லிகை வாசலில் பெரிய வேன் வந்து நின்றது. அதில் என்னை ஏற்றி கோர்ட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

கோர்ட் வாசலில் பத்திரிகையாளர்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர். கோர்ட்டுக்கு வந்த எத்தனையோ பேர்மீது எனது கேமிரா... ஃப்ளாஷ் லைட் அடித்திருக்கிறது. ஆனால் அன்றைய தினம் எல்லா கேமிராக்களும் என் மீது ஃப்ளாஷ் வீசின.

சக புகைப்படக்காரர்கள் பலர், என்னை அந்த நிலையில் புகைப்படமெடுக்கத் தயங்கி, தடுமாறியதையும் கண்டேன். இருந்தாலும் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டியிருந்தது.

நீதிபதி முன் நிறுத்தப்பட்டேன். சாட்சிக் கூண்டில் நின்ற பொலிஸ் அதிகாரி ரகோத்தமன் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். என்னை இருள் சூழ்ந்து கொண்டிருப்பது நன்றாகவே தெரிந்தது. ஒருமாத காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

(தொடர்ந்து வரும்)

# வெண்தாமரையும் வீரவிதானவும்

அலசுவது - இராஜதந்திரி

சமவாய்ப்புச் சட்டத்தை ஆட்சியாளர்கள் வாபஸ் பெற்று குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டனர். இதன் பின்னணியில் பல உண்மைகள் புதைந்து கிடக்கின்றன.

அக்டோபர் 07ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாகக் கூறப்பட்ட சமவாய்ப்புச் சட்டத்தின் நகலை யாருமே படித்துப் பார்க்கவில்லை. படித்துப் பார்த்திருந்தால் பத்திரிகைகளில் அதுபற்றி பெரிதாக வெளிவந்திருக்காது.

உருப்படியான எந்தவொரு அம்சமும் அந்த சட்ட நகலில் இருக்கவில்லை. பெயர்தான் பிரமாதமாக அமைந்திருந்ததேதவிர உள்ளே எதுவுமே இருக்கவில்லை.

முழுக்க முழுக்க உலகை ஏமாற்றுவதற்காக தயாரான ஒரு ஏற்பாடுதான் சமவாய்ப்புச் சட்டமாகும்.

தீர்வுப் பொதியைக் கூறி இனிமேலும் உலகை ஏமாற்ற முடியாது என்ற கட்டத்தில், கொண்டுவரப்பட்ட புதிய தந்திரத் திட்டமாகவே சமவாய்ப்புச் சட்டம் அமைந்திருந்தது.

இன்னொரு முக்கிய உண்மையை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். சமவாய்ப்புச் சட்டம் என்னும் இந்த தந்திரமான திட்டத்தின் மூலவர்களில் ஒருவர் கலாநிதி நீலன் திருச்செல்வம்.

அவர் பலியாவதற்கு முன்பாக பேராசிரியர் பீரிஸ் அவர்களுடன் இணைந்து உருவாக்கிய திட்டமே இதுவாகும். இந்த உண்மை அண்மையில் அரச தரப்புக்குள் இருந்தே வெளியாகியுள்ளது.

அரசாங்கத்துக்கு ஆதரவான சர்வதேசப் பிரசாரங்களில் ஈடுபட்டுவந்த நீலனுக்கும் பொதி இழுத்தடிப்பு தர்ம சங்கடங்களை உருவாக்கியிருந்தது. பொதியை இனிமேல் அரசாங்கம் முன்வைக்கப்போவதில்லை என்பது நன்கு தெரிந்த பின்னரே, சமவாய்ப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து பொதியின் தோல்வியை மூடிமறைக்க நீலன் விரும்பியிருக்கிறார்.

இதனை பேராசிரியர் பீரிசும், அரசாங்கமும் ஏற்றுக் கொண்டதால்தான் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாக அறிவிக்கப்பட்டது.

எனினும் இந்த உண்மைகளை ஆட்சியாளர்கள் பகிரங்கமாக ஒப்புவிக்க முடியாது. இது உலகை ஏமாற்றும் சட்ட திட்டம்தான், பொதியின் தோல்வியை மூடிமறைக்கும் அற்புதமான ஏற்பாடுதான் என்று வெளிப்படையாக அறிவிக்க இயலாது.

எனவேதான் சமவாய்ப்புச் சட்டம் என்ற பெயரைக் கேட்டுவிட்டு, ஏதோ பெரிதாக தமிழருக்கு கொடுக்கப்படப் போவதாகப் பொங்கியெழும் சிங்கள அமைப்புக்களுக்கும் உண்மையைக் கூறமுடியாது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

அதன் காரணமாகவே சமவாய்ப்புச் சட்டத்தை எதிர்க்க சிங்கள பௌத்த அமைப்புக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துவிட்டு, அவர்களது விருப்பப்படி சட்டத்தை மீள் ஆய்வு செய்வதாகக் கூறி திருப்திப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

அரச தரப்புக்குள் வீரவிதானவின் கூட்டாளிகளாக உள்ளோர்தான் முதலில் அதனைத் தூண்டி விட்டனர். பின்னர் ஐ.தே.கட்சியும் முதுகில் தட்டிக் கொடுத்து ஊக்குவித்திருந்தது.

பேரினவாத பூதத்தை வளர்த்த கடந்தகால ஆட்சியாளர்கள் பின்னர் அந்தப் பூதத்தின் முன்னால் கைகட்டி நின்றுள்ளனர்.

தற்போது சந்திரிக்கா அரசாங்கத்திற்கும் அதேநிலைதான் ஏற்பட்டுள்ளது. தீர்வுப் பொதிமீதான நாடு தழுவிய விவாதம் என்ற பெயரில் சந்திரிக்கா அரசாங்கம் ஆரம்பித்துவைத்த இழுத்தடிப்பு நாடகமே பேரினவாத சக்திகளை மறுபடித் தட்டி எழுப்பியிருந்தது.

விவாதங்கள் என்ற பெயரில் அரச தொலைக்காட்சிகள், தனியார் தொலைக்காட்சிகள், சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் போன்றவற்றில் பேரினவாத சக்திகள் மறுபடி களம் அமைத்துக் கொண்டனர்.

தற்போது சிங்களக் கமிஷன், வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் உட்பட பல்வேறு அமைப்புக்கள் ஊதிப்பெருத்து நிற்கின்றன. இவற்றின் பின்னணியில் ஆளும் தரப்பினரும் உள்ளனர்; ஐ.தே.கட்சி பிரமுகர்களும் உள்ளனர்.

பொதுஜன முன்னணி மறுபடி ஊக்குவித்துள்ள பேரினவாதப் பூதத்தை, பொதுஜன முன்னணிக்கு எதிராகவே திருப்பிவிட்டு அரசியல் இலாபம் சம்பாதிக்க முனைந்துள்ளது ஐ.தே.கட்சி.

அதன் காரணமாகவே பேரினவாத அமைப்புக்களுக்குள் தனது பிரமுகர்களையும் ஐ.தே.கட்சி உள்நுழைத்துள்ளது. சமவாய்ப்புச் சட்ட நாடகத்தில் ஆட்சியாளர்களின் திட்டம் பலிக்காமல் போனதற்கு ஐ.தே.கட்சியின் பிரமுகர்களே காரணமாவர்.

சிங்கள பௌத்த அமைப்புக்களது எதிர்ப்புக்கு இடம் கொடுத்துவிட்டு, அவற்றின் கோரிக்கைகளுக்கு ஏற்ப திருத்தங்கள் செய்வதாக உடன்பட்டுச் சமவாய்ப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதுதான் ஆட்சியாளரது நோக்கம்.

இதன்மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த ஆட்சியாளர் திட்டமிட்டிருந்தனர். ஒன்று: பொதியின் தோல்வியை மறைத்து, உலகின் கண்களில் சமவாய்ப்புச் சட்டத்தைக் காண்பித்து தமது சமாதான தோற்றப்பாட்டை தக்கவைப்பதுடன், இராணுவத் தீர்வைத் தொடர்வது.

இரண்டாவது: சமவாய்ப்புச் சட்டம் என்று பெயர் சூட்டியுள்ளதால், தமிழ் பேசும் மக்களிடையே ஓரளவு ஆதரவு ஏற்படும், அதனை ஜனாதிபதித் தேர்தலில் அறுவடை செய்து கொள்வது.

இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற முடியாதவாறு, பௌத்த சிங்கள அமைப்புக்களை தூண்டிவிட்டதோடு, வழக்குகள் தாக்கல் செய்வதற்கான ஆலோசனைகளையும் ஐ.தே.கட்சியே வழங்கியிருக்கிறது. நிதி உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே, நிலமை தாம் எதிர்பார்த்ததைவிட தீவிரமாக இருந்தமையால் சமவாய்ப்புச் சட்டத்தையே கைவிடவேண்டிய நிலை ஆட்சியாளருக்கு ஏற்பட்டுவிட்டது.

பௌத்த சிங்கள அமைப்புக்களை தமது நலன்களுக்காகப் பயன்படுத்தும் சடுகுடு ஆட்டத்தில் ஆளும் தரப்பும், எதிர்க்கட்சியும் இறங்கியுள்ளன. சமவாய்ப்புச் சட்ட நாடகத்தில் ஆளும் தரப்பை வெற்றிகொண்டுள்ளது எதிர்க்கட்சி.

எனவே, தாம் உசுப்பிவிட்ட பேரினவாதப் பூதத்தை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆற்றலை ஆட்சியாளர்கள் இழந்து விட்டனர் என்பது தெளிவாகியுள்ளது.

வீரவிதான இயக்கத்தின் முக்கிய பங்காளிகளாக ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் இருந்தும்கூட, சமவாய்ப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து தாம் நினைத்தபடி அபாரமான தந்திர நாடகத்தை அரங்கேற்ற முடியாமல் போயுள்ளது.

இப்போது பேரினவாதத்தின் முன்னால் மண்டியிடும் நிலைக்கே ஆட்சியாளர் வந்துள்ளனர். இனிமேல் பேரினவாத சக்திகளது கட்டளைப்படியே செயற்படவேண்டியிருக்கும்.

ஆளும் கட்சியும், ஐ.தே.கட்சியும் கையாண்டுவரும் பிரதான தந்திரம் பேரினவாத சக்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவே அமைந்துள்ளன.

இந்த இரண்டு தரப்புகளுமே இனப்பிரச்சனை விடயத்தில் 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும்' தந்திரத்தையே கடைப்பிடித்து வருகின்றன.

வெண்தாமரை இயக்கம் என்னும் ஒரு அமைப்பை ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் சிலர் உருவாக்கினார்கள். அரசாங்கமே இதற்கு நிதியுதவி கொடுத்து வந்தது. அமைச்சர் மங்கள சமரவீர இதில் முக்கிய பாத்திரம் வகித்திருந்தார்.

சமாதானம் பற்றி உரத்த முழக்கங்களுடன் இந்த வெண்தாமரை இயக்கம் உருவானது. தமிழ மக்களது துயர்கள் தொடர்பாகவோ, தமிழ மக்கள் குண்டுவீச்சுக்கள், ஷெல்லடிகளால் பலியான மாபெரும் படுகொலைகள் தொடர்பாகவோ வெண்தாமரை இயக்கம் அனுதாபம் தெரிவித்ததைக் காணமுடியாதுள்ளது.

அரசாங்கத்தின் சமாதான தோற்றப்பாட்டை பாதுகாப்பதுடன், ஜனாதிபதி சந்திரிக்காவை சமாதான தேவதையாக சித்தரிப்பதுதான் வெண்தாமரை இயக்கத்தின் முக்கிய வேலைத்திட்டமாகும்.

வீதிநாடகங்கள், ஊர்வலங்கள் போன்றவை நடாத்தி சமாதானத்துக்காகப் பாடுபடுவது போன்ற தோற்றப்பாடுகளும் காண்பிக்கப்பட்டன.

இவையெல்லாம் சமாதானம்மீது நாட்டமுள்ள சிங்கள மக்களில் ஒரு சாராரையும், தமிழ் மக்களையும் திருப்திப்படுத்தும் முயற்சிகளாக விளங்கியிருந்தன.

மறுபுறத்தில் கொடிய இனவாதத்தை கொண்ட சிங்களக் கமிஷன், வீரவிதான போன்றவற்றோடும் ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

வெண்தாமரை இயக்கத்தை ஆளும்தரப்பு உருவாக்கியது போன்றே, வீரவிதானாவையும் ஆளும் தரப்பின் முக்கியஸ்தர் ஒருவரே உருவாக்கியிருந்தார்.



இதற்கிடையே பொதிக்கு எதிரான சிங்களக் கமிஷன் அறிக்கையை பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜெயரத்னாவை அனுப்பி அரசாங்கம் பெற்றுக்கொண்டது.

அதேசமயம் சிங்களக் கமிஷனை எதிர்த்து அமைச்சர் மங்கள சமரவீர கருத்துத் தெரிவித்ததோடு, அக் கமிஷனின் அறிக்கை குப்பைத் தொட்டியில் போடப்பட வேண்டியது என்றும் தெரிவித்திருந்தார்.

பொதுஜன முன்னணியின் தலைவியான சந்திரிக்கா அம்மையார் மேற்படி இருவரில் ஒருவரைக் கண்டித்திருக்கலாம். கட்டுப்படுத்தியிருக்கலாம்; ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

எனவே அமைச்சர் ஜெயரத்னா செய்ததை ஆதரிக்கிறாரா? அல்லது மங்கள கூறியதை ஆமோதிக்கிறாரா? என்பது யாருக்கும் தெரியவில்லை.

உண்மையில் இது அருமையான அரசியல் தந்திரமாகும். சிங்கள பௌத்த பேரினவாதிகளைத் திருப்திப்படுத்த ஜெயரத்னாவையும், இனவாதமற்ற சமாதான விரும்பிகள் என்ற தோற்றப்பாட்டைக் காண்பிக்க மங்களாவையும் பயன்படுத்தியதாகவே கருதக்கூடியதாகவுள்ளது.

அதேபோன்று வீரவிதான இயக்கத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது தெரியாததல்ல. அவ்வாறு இந்தும் ஆளும்தரப்பில் சிலர் வீரவிதானவைக் கண்டித்துப் பேசவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீரவிதானா அமைப்பு பேரினவாத அமைப்பாக உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் அம்பலமாகியுள்ளதால், தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என்று காண்பிக்கும் தேவையும் ஆளும்தரப்புக்கு இருக்கிறது. அதன் காரணமாகவே அதனைக் கண்டிப்பது போலப் பேசவும் சிலருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

அதேசமயம் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், காணி அமைச்சர் ஜெயரத்ன போன்ற பிரதான அமைச்சர்கள் வீரவிதானவை கண்டித்து கருத்துக் கூறியதில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

அதேபோன்றே ஆளும் தரப்புக்குள் ஒரு சாரார் இன ஒற்றுமை பற்றித் தேனொழுகப் பேசிவருவதை கேட்கக்கூடியதாகவுள்ளது. ஆனால் இன்னொரு சாரார் சிங்கள மக்களது உரிமைகளைக் காப்பது பற்றி ஆவேசம் பொங்கப் பேசிவருகின்றனர்.

காணி அமைச்சர் ஜெயரத்ன அண்மையில் ஒரு கூட்டத்தில் உரையாற்றும்போது, 'நாட்டில் தற்போதுள்ள நிலை தொடருமானால் சிங்கள மக்களை தொல்பொருள் காட்சியகத்தில்தான் தேடவேண்டியிருக்கும்!" என்று கூறியிருந்தார்.

இன்னொன்றையும் கவனிக்கவேண்டும். வலிகாமம் காணி சுவீகரிப்பை கைவிடுமாறு எத்தனையோ தமிழ் அமைப்புக்கள் கோரியிருந்தன. இடதுசாரி முன்னணியினர் கொழும்பில் ஆர்ப்பாட்டமும் நடத்தியிருந்தனர்.

இவற்றை ஒரு பொருட்டாகவே ஆட்சியாளர்கள் எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனால் சமவாய்ப்புச் சட்டத்தை கைவிடுமாறு வீரவிதான ஆர்ப்பாட்டம் நடத்திய உடனேயே அதனை மீள் ஆய்வு செய்யப்போவதாக அறிவித்தல் வந்திருந்தது.

யாழ் குடாநாட்டுக்கு போக்குவரத்து செய்ய பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை என்று குமார் பொன்னம்பலம் வழக்குத் தொடுத்திருந்தார். நீதிமன்றமும் அது சட்டரீதியான வழிமுறையல்ல என்று கூறியிருந்தது. அவ்வாறிருந்தும் தொடர்ந்து அதே நடைமுறையே அமுலில் இருந்து வருகிறது. சமவாய்ப்புச் சட்டம் தேவையில்லை என்று சிங்கள பௌத்த அமைப்புக்களது பிரமுகர்கள் சிலர் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அவ் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட முன்னரே, 'சமவாய்ப்புச் சட்டத்தை கைவிடுவ'தாக அரசாங்கம் உத்தரவாத மளித்துள்ளது.

## ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த மதகுரு! வாக்குகளை உடைக்க பேரினவாத வேட்பாளர்?

எனவே, பேரினவாதிகளது குரலுக்கே, அக் குரல்களுக்கு உரியவர்கள் சிறியதொகையினராக இருந்தாலும்கூட செவிமடுக்கவும், கருத்தில் எடுக்கவும் ஆட்சியாளர் தயாராக உள்ளனர் என்பது துலக்கமாகியுள்ளது.

பத்தாயிரம்பேர் திரண்டு வந்து ஆதரித்தால்கூட, நூறு பேரினவாதிகள் வந்து கண்டித்தால் அவர்களது குரலுக்கே ஆட்சியாளர்கள் செவிசாய்த்து வருகின்றனர்.

சிங்கள மக்களது நலனுக்கு எதிரானவர்களாக தாம் கருதப்பட்டுவிடக்கூடாதே என்னும் அச்சமுமே இத்தகைய பணிவான போக்குக்குக் காரணமாகும்.

தீர்வுப் பொதி அரை குறைப் பொதியாக இருந்தும்கூட, அதனை சிங்கள மக்களது அனுமதிக்காக விவாதத்திற்கு கொடுத்தமைக்கும் அதுவே காரணமாகும்.

முன்னர் பிரேமதாசா சர்வகட்சி மாநாடு நடத்தி, சகல சிங்கள கட்சிகளும் ஏற்கக்கூடிய தீர்வை தேடியதற்கும் அதுவேதான் காரணமாகும்.

பேரினவாத முகாமோடு கைகுலுக்கியுள்ள இன்றைய ஆட்சியாளரும் தம்மை சிங்கள இனத்தின் வீரத்தை நிலைநாட்டும் தலைமையாக இனம்காட்டவே முன்னிற்கின்றனர்.

அதேசமயம் எதிர்க்கட்சியும் தமிழ் பேசும் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்காக தமது அணிக்குள் சிலரை தமிழ் பேசும் தரப்புக்கு ஆதரவாக பேசுவதற்கு அனுமதித்துள்ளது.

சமீபத்தில் மறைந்த முன்னாள் அமைச்சர் ஹமீட்டை இனப்பிரச்சனை தீர்வு பற்றிய பேச்சுக்களுக்கு ஐ.தே.கட்சி பயன்படுத்தி வந்தது. ஆனால் இனப்பிரச்சனை தொடர்பான அவரது கருத்துக்கள் ஐ.தே.கட்சியின் கருத்துக்களாக இருக்கவில்லை.

ஹமீட் போன்றோர் இனப்பிரச்சனை பற்றி நியாயமான கருத்துக்களை கூறிக்கொண்டிருக்கையில், மறுபுறம் ஐ.தே.கட்சியின் முக்கிய தலைவர்களான சுசில் முனசிங்க போன்றோர் பேரினவாதக் கருத்துக்களைப் பேசிவந்தனர்.

சிங்கள இனவாத அமைப்பான 'ஹெல உறுமய'வின் முன்னாள் உறுப்பினர்கள் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஐ.தே.கட்சியில் வீற்றிருக்கின்றனர். இவர்கள் வாய்திறந்தாலே பேரினவாதம்தான் கொட்டுகிறது.

இதனையிட்டு ரணில் கண்டிப்பதோ, கட்டுப்படுத்துவதோ கிடையாது. மௌனமாக வேடிக்கை பார்த்து வருகிறார்.

தம்மை ஒரு பேரினவாதக் கட்சியல்ல என்று உலகுக்கும், தமிழ் பேசும் தரப்புக்கும் சித்தரிக்க ஒரு சிலரையும், தாமும் சிங்கள மக்களது நலன்பொருட்டு பாடுபடுபவர்களே என்று காண்பிக்க இன்னொரு சாராரையும் ரணிலும் பயன்படுத்தி வருகிறார்.

எனினும் ரணிலுக்கும், அவரது கட்சியினருக்கும் பேரினவாத நலன்மீதே உண்மையான அக்கறை இருக்கிறது. வடக்கு-கிழக்கு பிரிப்பு உட்பட, தமிழ் பேசும் தரப்பின் பலத்தை தகர்க்கும் விதமான நிலைப்பாடுகளில் ஆளும் தரப்பும், எதிர்க்கட்சியும் ஒரேவிதமான கொள்கையையே கொண்டுள்ளன. அக்கொள்கைகள் பேரினவாதத்தின் இறுதி இலக்கான இலங்கை முழுவதையும் பௌத்த-சிங்கள நாடாக்கும் திட்டத்துக்கு ஏற்றவையாகவும் அமைந்துள்ளன.

இரு தரப்புமே பேரினவாதச் சக்திகளைத் தமது நலனுக்குப் பயன்படுத்துவதில் போட்டி போடுகின்றன.

முன்பு தேர்தல்களை தள்ளிவைப்பதற்கு பௌத்த பீடங்களது ஆதரவைப் பெற்றதுமூலம் தமது அரசியல் நலனுக்கு அவற்றைப் பயன்படுத்துவதில் வெற்றிகண்டனர் ஆட்சியாளர்கள்.

சமவாய்ப்புச் சட்ட நாடகத்தில் பேரினவாத சக்திகளை ஆட்சியாளரது திட்டத்துக்கு எதிராகப் பயன்படுத்துவதில் எதிர்க்கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இப்போது ஆளும் தரப்பு மற்றொரு வியூகம் வகுத்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த சிங்கள அமைப்புக்களது சார்பாக ஒருவரை வேட்பாளராக நிறுத்த ஆளும் தரப்பில் சிலர் அக்கறை காட்டி வருகின்றனர்.

தற்போதைய நிலையில் வெளிப்படையாக பேரினவாத பேச்சுக்களை ஆட்சியில் உள்ளோர் பேச முடியாது.

எனவே, பேரினவாத உரைகள்மூலம் தீவிர பேரினவாதிகளது வாக்குகளைக் கவர்ந்து, ஐ.தே.கட்சிக்கு இழப்பை ஏற்படுத்தவே இந்த வியூகம் வகுக்கப்பட்டு வருகிறது.

வீரவிதானவில் முன்னணியில் நிற்பவரும், ஆளும் தரப்பு முக்கியஸ்தர் ஒருவரது நம்பிக்கைக்குரியவருமான பௌத்த மதகுரு ஒருவரையே வேட்பாளராக நிறுத்துவது பற்றி ஆராயப்பட்டுள்ளதாக தெரிகிறது.

ஆக, பேரினவாத பூதத்தின் அனுசரணையை நம்பியே ஆளும் கட்சியும், ஐ.தே.கட்சியும் தமது அரசியலை நடத்தி வருகின்றன.

எனவே வெண் தாமரைகளைவிட வீரவிதானாபோன்ற அமைப்புக்களுக்கே ஆட்சியாளரும், ஐ.தே.கட்சியும் உண்மையான மரியாதை செலுத்தி நிற்கின்றனர்.

இந்நிலையில் இந்த இருதரப்பையிட்டும் தமிழ்பேசும் தரப்பு மிக விழிப்பாக இருப்பது முக்கியமானதாகும். இந்த இருதரப்பும் இனப்பிரச்சனையில் நியாயமாக நடந்துகொள்ளும் என்று நம்புவதும் மாபெரும் முடத்தனமேயாகும்.

# சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

'எரிக் சௌந்தரநாயகம்' நாடுகடத்தப்பட்ட விடயத்தில் கலைஞர் கருணாநிதி அரசுமீது களங்கம் ஏற்பட்டுள்ளதாக பி.பி.சியில் விவரித்த னர்.

இந்திய மத்திய அரசுக்கு நாடு கடத்தப்பட்ட பின்னர்தான் தெரிந்தது. தமிழக மாநில அரசுக்கு தெரிந்துதான் நடந்திருக்கிறது. தமிழக பொலிஸ் தமிழக அரசுக்குத் தெரியாமல் எப்படி நாடு கடத்தத் துணியும்?

இலங்கைத் தமிழர்களை பிடித்து இலங்கை அரசிடம் ஒப்படைக்கும் நிகழ்வுகள் கருணாநிதி ஆட்சிக்காலத்தில் நடப்பது புதுமையல்ல.

1970களில் குட்டிமணியை பிடித்து இலங்கை அரசிடம் ஒப்படைத்ததும் கருணாநிதிதான். எம்.ஜி.ஆர். பதவிக்கு வந்தபின்னர் இந்த விவகாரம் கிளறப்பட்டது.

'தமிழினத்தின் தலைவர் என்று தன்னை அழைத்துக் கொள்கிற கருணாநிதி ஆட்சியில் தான் போராளி குட்டிமணி நாடு கடத்தப்பட்டார் என்று அ.தி.மு.க. குற்றம் சாட்டியது.

அப்போது ரெலோ இயக்கமும், அதன் தலைவர் அமரர் சிறிசபாரத்னமும் கருணாநிதி யோடு நெருக்கமாக இருந்தனர்.

ரெலோ மூலமாக ஒரு அறிக்கை விட வைத்தார் கருணாநிதி. 'குட்டிமணி ஒரு போராளி என்று தெரியாமல்தான் கைது செய்யப்பட்டார். இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்' என்று ரெலோ அறிக்கைவிட்டு கலைஞருக்கு வக்காலத்து வாங்கி யிருந்தது.

குட்டிமணி தன்னைக் கைதுசெய்த தமிழ் நாட்டு பொலிசாரிடம், தான் ஒரு போராளி என்பதையும், இலங்கையில் தேடப்படுவதையும் கூறாமல் இருந்திருக்கமாட்டார்.

இலங்கையில் போராளி அமைப்புக்கள் வளர்ந்து, தமிழக மக்களிடமும் அனுதாபம் திரண்ட பின்னர்தான் கருணாநிதி இயக்கங்களை ஆதரிக்க முன்வந்தார். தனது அரசியலுக்கும் பயன்படுத்திக் கொண்டார். புலிகளுக்கு தமிழகத்தில் ஆதரவு என்று தெரிந்தபோது ரெலோவை கைவிட்டு புலிகளை ஆதரித்ததும் கருணாநிதிதான்.

தன்னுடைய அரசியல் இலாப- நஷ்டங்களுக்கு ஏற்பவே எதனையும் செய்வது கருணாநிதியின் பாணி. அதற்கு இலங்கைத் தமிழர் பிரச்சனையும், போராளிகளும் விதிவிலக்கல்ல.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் புலிகள் தவிர ஏனைய இயக்கங்கள்மீது கடும் போக்குக் காட்டப்பட்டது. ரெலோ உறுப்பினர்கள் பலரைக் கைது செய்து சிறையில் வைத்திருந்தார். நாடு கடத்தும் எண்ணம் இருந்ததில்லை.

ஜெயலலிதா ஆட்சியில் புலிகளைக் கடுமை யாகச் சாடியபோதும், கைது செய்து அங்கேயே வைத்தார்களே தவிர, நாடு கடத்தவில்லை.

ஆனால் 'உலகத் தமிழினத் தலைவ'ரின் ஆட்சியில்தான் நாடு கடத்தல்கள் நடந்திருக்கின் றன. அன்று குட்டிமணி. இன்று 'எரிக்' சௌந்தர நாயகம்.

இந்த நாடுகடத்தலுக்கு தமிழக மக்களி டமே ஆதரவு இருக்காது என்பதால்தான், இந்த விஷயமும் அம்பலமான பின்னரும் உடனடியாகக் கருத்துக் கூறாது தமிழக அரசு மௌனம்சாதித்தது.

'எரிக்' கைதானதும், நாடு கடத்த தமிழக அரசு இணங்கியதும் இலங்கைப் புலனாய்வுத் துறைக்கு வெற்றிதான்.

நீலன் கொலை தொடர்பான சில புதிர்களை அவிழ்க்க 'எரிக்' கைது உதவலாம்.

ஆனால் கொழும்பில் புலிகளது வலைப்பின் னலை 'எரிக்'கூட அறிவாரா? என்பது சந்தேகமே.

ஏனெனில் கொழும்பில் புலிகள் கைது. குண்டுகள் மீட்பு என்ற செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கையில்தான், குண்டுகள் புறக் கோட்டை பஸ் நிலையத்திலும் வெடித்துள்ளன.

***

## உதவியும் பதில் உதவியும்

வவுனியாவில் புளொட் சித்தார்த்தன் அணி யினர் தமது செல்வாக்கை நிலைப்படுத்த, தாசன் அணியை விலக்கி உதவும் உத்தரவு அம்மையாரிடம் இருந்தே படைத்தரப்புக்குச் சென்றுள்ளது.

தொடர்ந்தும் தாசன் அணியினரைப் பயன் படுத்தத்தான் வவுனியா படைத்தரப்பு நினைத் திருந்தது. அவர்கள்தான் புலிவேட்டைக்கு சளைக் காதவர்கள் என்பது படைத்தரப்பின் கணிப்பு.

ஆனால் சித்தார்த்தன் புளொட்டின் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்தால்தான், அரசியல் ரீதியாக தமக்கு இலாபம் என்று நினைத்த அம் மையார் சித்தார்த்தனுக்கு உதவுமாறு வவுனியா சீருடைத் தலைமைக்கு தகவல் அனுப்பினாராம்.

அதன் பின்னர்தான் எந்தக் குற்றச் சாட்டுமே இல்லாமல் ஹரிபாபுவை கைது செய்தனர். இது வரை ஹரிபாபுமீது எக் குற்றமும் கூறப்படவும் இல்லை.

தமக்கு ஜனாதிபதி உதவவில்லை, தாம் உதவி கேட்கவில்லை என்று புளொட் கூறுகிறது. அப்படி யானால் காரணமே இல்லாமல் ஹரிபாபுவை கைது செய்ய யாது காரணம்?

இந்த உதவிகளுக்கு பிரதியுபகாரமாக ஜனாதி பதித் தேர்தலில் அம்மையாரை ஆதரிப்பதாக அப் போதே உறுதி கொடுக்கப்பட்டுவிட்டது. 'வவுனியா வில் வாக்குப் பெட்டிகள் உங்களுக்கான வாக்குக ளால் நிரம்பும், அதனையிட்டு யோசிக்கவே வேண்டாம்' என்று உறுதியளிக்கப்பட்டுவிட்டதாம்.

அது எப்படி பெட்டிகள் நிரம்பப்போகின்றன? யாமறியோம் பராபரமே!

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 85

### இடி அமீன்

**கடந்தவாரம்**

**அமீனது காதலியான கௌதா இரட்டைக் குழந்தைகள் பெறுகிறாள். அதனை அமீன் பெருமையாக அறிவிக்கிறான். கௌதா அமீனின் காமவெறி கட்டுக்கடங்காமல் போவது கண்டு அவனைவிட்டு விலகுகிறாள். அமீன் பாலியல் தாகம் அடங்காதவன் என்று அவள் கூறித்திரிய அதனை அமீன் தனக்கு பெருமையாக எண்ணி மகிழ்கிறான்.**

**இனி...**

கௌதாவின் பேட்டியை வெளியிடப் பயந்த உகண்டா பத்திரிகையாளர்களுக்கு, அரச வானொலியும் தொலைக்காட்சியும் அப் பேட்டியை வெளியிட்டமை பெரும் பிரமிப்பாக இருந்தது.

தவறுதலாக நடந்துவிட்டதோ என்று அரச தகவல் தொடர்பு சாதன அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விசாரித்தனர்.

"அந்தப் பேட்டியை வெளியிடச் சொன்னதே அதிபர்தான்!" என்று அதிகாரிகள் கூறியதும் பிரமிப்பு பன்மடங்காகியது.

அதுபோதாது என்று மறுநாள் அதிர்ச்சி காத்திருந்தது.

அரச தொலைக்காட்சியில் கௌதா தோன்றிப் பேட்டியளித்தாள்.

நள்ளிரவில் தொலைக்காட்சி நிலைய பொறுப்பதிகாரி வீட்டு தொலைபேசி அலறியது.

அமீன்தான் அழைத்தான். கௌதாவை தேடிப்பிடித்து பேட்டி எடுத்து வெளியிடுமாறு கூறியதோடு, என்னென்ன கேள்விகள் கேட்கவேண்டும் என்பதையும் அமீனே குறித்துக் கொடுத்திருந்தான்.

அமீனின் உத்தரவு விசித்திரமாக இருந்தாலும், அதனை அடுத்த ஐந்து மணிநேரங்களுக்குள் நிறைவேற்றி முடித்தார் தொலைக்காட்சி நிலையப் பொறுப்பதிகாரி.

கௌதாவின் பேட்டியின் ஒளிப்பதிவு அமீனுக்குப் போட்டுக் காண்பிக்கப்பட்டது.

தனக்கு பாதகமான பகுதிகளை சுட்டிக்காட்டிய அமீன், அவற்றை வெட்டி எறிந்துவிட்டு, ஏனைய பகுதிகளை ஒளிபரப்புமாறு கூறினான்.

அமீனது பாலியல் தாகத்தைப் பற்றிய கௌதாவின் விவரிப்புக்கள் மட்டுமே பேட்டியில் விட்டுவைக்கப்பட்டிருந்தன.

இப் பேட்டியைப் பார்க்கும் பெண்களுக்கு தன்



மேல் அதிகளவு ஆசை ஏற்படும் என்று அமீன் நம்பினான்.

கட்டுக்கடங்காத பெண் ஆசைதான் அமீனை அவ்வாறெல்லாம் பைத்தியக்காரத்தனமாக யோசிக்க வைத்தது.

அதிகார பலமும், வசதிகளும் அதிகமாகிக் கொண்டிருக்க, அமீனது பெண் வேட்டையும் பெரியளவில் விரிவடைந்தது.

நிர்வாகப் பணிகளோ அல்லது பதவிக்குரிய பொறுப்புக்களோ அதிகம் இல்லாததால் அமீனுக்கு போதிய நேரம் இருந்தது.

அவன் உண்ணும் உணவு வகைகளும் காம உணர்ச்சிகளைத் தூண்டத்தக்கவையாகவே இருந்தன.

பொழுது போக்கவும், உணர்ச்சிகளுக்கு வடிகால் தேடவும் தனது தினசரி நாட்களில் பெரும்பகுதியை அமீன் செலவிட ஆரம்பித்தான். அமீனது வீழ்ச்சிக்கும் இந்த அளவுமீறிய பெண் சபலமும் முக்கிய காரணமாக இருந்தது.

தனக்குத் தேவையான பெண்ணை அடைவதற்கு யார் தடையாக இருந்தாலும் குரூரமான முடிவைக் கொடுப்பதற்கு அமீன் தயங்கியதே இல்லை.

பொலிஸாருக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி ஒன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு அமீன் விருதுகளை அணிவித்தான். அந்த நிகழ்ச்சிக்கு பொலிஸ் அதிகாரிகள் தங்கள் மனைவிமாருடன் வந்திருந்தனர்.

அமீனின் கழுகுக் கண்களில் பட்டுவிட்டாள் உயரதிகாரி ஒருவரது மனைவி. அவள் இளமையாகவும், அழகாகவும் இருந்தாள். அமீன் அன்று கறுத்த குளிர் கண்ணாடியை அணிந்திருந்தான்.

அதனால் அவனது கழுகுக் கண்கள் எங்கெங்கு அலைகின்றன என்பது எவருக்கும் தெரிய வாய்ப்பிருக்கவில்லை. தன்மீது அமீனின் காமக்கண்கள் கணை தொடுப்பதை அதிகாரியின் மனைவியும் அறியவில்லை.

அன்றிலிருந்து சரியாக இருபதாவது நாள் அந்த உயர் பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டார்.

'உகண்டாவின் பாதுகாப்பு இரகசியங்களை எதிரி நாடு ஒன்றுக்கு கூறிவந்துள்ளார். அதிபர் அமீனுக்கு எதிராக சதி செய்துள்ளார்' என்று குற்றச்சாட்டுக்கள் அள்ளிவீசப்பட்டன.

அவர் கைதான நான்காவது நாள் அவரது மனைவியை தன்னை வந்து சந்திக்குமாறு கூறினான் அமீன்.

தனது கணவரை விடுவிக்க ஏதாவது ஒரு வழி இருக்கும் என்ற நம்பிக்கையில் அமீனைச் சந்திக்க ஆவலோடு வந்தாள் அந்த இளம் மனைவி.

அமீன் எவ்வித சுற்றிவளைப்பும் இல்லாமல், நேரடியாகவே அவளிடம் தன் ஆசையைக் கூறினான்.

**"உன் கணவரைக் காப்பாற்ற நீ விரும்புகிறாயா?"**

"ஆம்!"

**"அவன் கைதாகக் காரணம் யார் என்று தெரியுமா?"**

இக் கேள்விக்கு அவள் குழப்பமாக அமீனை ஏறிட்டுப் பார்த்தாள். அமீன் விஷமச் சிரிப்போடும், கண்களில் நிறைந்த காமத்தோடும் அவளைக் கூர்ந்து நோக்கியபடி கூறினான்: **"நீ, ஆம், நீதான்!"**

அந்த இளம் மனைவி விக்கித்து நின்றாள். இதயத்தின் மையத்தில் கத்தியால் குத்தப்பட்டது போல துடித்துப்போனாள்.

அமீனிடம் இரக்கம் சுரக்கவில்லை. **"உன்மேல் எனக்கு ஆசை வந்துவிட்டது. ஆசை வைத்த பெண்ணை அடையாமல் விட்டதாக சரித்திரமே கிடையாது. நீயாக இணங்கினால் கஷ்டம் இல்லை. இணங்காவிட்டால் உனக்குத்தான் நஷ்டம். என்ன இஷ்டமா? நஷ்டமா?"** என்று சிரித்தான்.

"என்னை விட்டுவிடுங்கள். என் கணவர் குற்றம் செய்யாதவர். அவரையும் விட்டுவிடுங்கள்!" என்று அவள் கெஞ்சினாள்.

**"அழகான உன்னை மனைவியாக அடைந்தது தான் அவர் செய்த குற்றம். இப்போது என்னை சந்தோஷப்படுத்தினால், குற்றம் சுத்தமாகிவிடும். வா, ஒரு முத்தம் தா!"** என்று எலியை நெருங்கும் பூனையைப்போல அடி எடுத்து வைத்தான் அமீன்.

அவள் பயத்தோடும், பதட்டத்தோடும் நான்கு புறமும் பார்த்தாள். தப்புவதற்கு தருணமே இல்லை. ஆற்றாமையால் மடங்கி முழந்தாளிட்டு அழுதாள்.

அவள் அழுவதோ, அவள் சோகமோ அமீனுக்குள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அப்போதும் அவளது திண்ணென்ற மார்புகளும், வளவளப்பான தேகமும்தான் அவன் கண்களுக்குள் கனல் வார்த்தன.

அழுது கொண்டிருந்தவளை தோளில் கைகளை வைத்து உசுப்பித் தூக்கினான். அவள் பிடிவாதமாக உதறித் துவண்டாள். சட்டென்று குனிந்து தன் கைகளால் அவளை அமுக்கித் தூக்கிக்கொண்டான்.

எதிர்த்துப் போராட அவளுக்குப் பலம் இல்லை. அவள் கத்திய சத்தமும் அந்த அறைக்கு வெளியே கேட்பதற்கு வழியில்லை.

**"நீ அழுதுகொண்டே இரு, நான் உன்னை ஆண்டுகொண்டே இருப்பேன்!"** என்று வன்மமாகக் கூறியபடி அவளைக் கட்டிலில் வீசினான்.

அவள் தன் பலம் கொண்டமட்டும் தன்மேல் அமீன் ஆக்கிரமிப்பதை எதிர்த்துப் போராடிப் பார்த்தாள்.

இறுதியில் தோற்றுப்போனாள். அவளை அமீன் வெற்றிகொண்டான். தன் வக்கிரம் முழுவதையும் அவள்மீது பிரயோகித்தான்.

அவள் பாதியிலேயே மூர்ச்சையாகிப் போனாள். பின்னர் மூர்ச்சை தெளிந்தபோது அமீனைப் பார்த்து, துணிவோடு கூறினாள்: "நீ ஆண்மகன்தானா, என் கணவன் முன்பு நீ கால்தூசிகூட வரமாட்டாய்!"

### தருவது ரசிகன்

அந்த வார்த்தைக்கு அமீன் இடி இடியென்று சிரித்தான். உள்ளூரக் கோபத்தால் தகித்தான்.

தனது கணவனுடன் தன்னை ஒப்பிட்டு, தன்னை இளக்காரமாக அவள் கூறிய வார்த்தைகள் அமீனைப் பதம் பார்த்துவிட்டன.

அதன் விளைவு மறுநாள் தெரிந்தது. அவளது கணவனான உயர் பொலிஸ் அதிகாரி சிறையில் இருந்து தப்பிக்க முயற்சித்தபோது சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

அது பொய், கடைந்தெடுத்த பொய் என்பது அந்த இளம் மனைவிக்குத் தெரியும்.

அவர் ஏன் கொல்லப்பட்டார் என்பதும் தெரியும். ஆனால் அவள் வாய் சாத்தப்பட்டது.

அவளுக்கும், பொலிஸ் அதிகாரிக்கும் பிறந்த குழந்தையின் உயிர் காக்கும் பொருட்டு அவள் மவுனியானாள்.

அமீன் தன்னை வதைத்ததை, தசைப்பசி தீர்த்ததை அவள் வெளியே சொல்லப் பயந்தாள்.

இதேபோன்ற கொடுமைகள் பல நடந்தன. சிலவே வெளியே தெரிந்தன. அவை கூட அமீன் வீழ்ச்சிபெற்ற பின்பே வெளியே வந்தன.

உகண்டாவின் பிரபலமான ஹொட்டல்களில் ஒன்று ரொறோறோ, அதன் நிர்வாகியின் பெயர் ஷெக்கனபோ.

ஷெக்கனபோவின் அழகான- நவநாகரிகமான மனைவியையும் அமீனின் கழுகுக் கண்கள் கொத்திவிட்டன.

அந்த ஹோட்டலில் வெளிநாட்டு தூதர்கள் சிலருக்கு அமீன் விருந்தளித்தான்.

அந்த விருந்தை மேற்பார்வையிடும் பொறுப்பை ஷெக்கனபோவின் மனைவி ஏற்றிருந்தாள்.

அவள் அமீனின் முன்பாக வராது விட்டாலும், தூரத்தில் இருந்தே அவளை அமீனின் கண்கள் களவாக அளவெடுத்துவிட்டன.

அவளைத் தன் வலையில் வீழ்த்த அமீன் கையாண்ட முறை வித்தியாசமானது.

ஷெக்கனபோ ஒருநாள் அவரது காரில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுட்டுக் கொன்றது வேறு யாருமல்ல. அமீனது நம்பகமான மெய்காப்பாளர்களில் ஒருவன்தான் அமீனின் கட்டளைப்படி சுட்டுக் கொன்றான்.

'ஷெக்கனபோவுடன் வியாபாரரீதியாக விரோதம் கொண்டவர்கள்தான் அவரைத் தீர்த்துக்கட்டியிருக்கலாம்' என்று பொலிஸ் கூறியது.

பொலிஸ் கூறியது என்பதைவிட, ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அவ்வாறு கூறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

சில உத்தரவுகள் அமீனால் நேரடியாகக் கூறப்படுவதில்லை. அமீனது செயலாளரோ அல்லது பாதுகாப்பமைச்சு அதிகாரிகளோ தான் பேசுவார்கள்.

ஷெக்கனபோ விவகாரத்திலும் அமீனின் செயலாளர்தான் பொலிஸ் உயரதிகாரியுடன் தொடர்பு கொண்டார்.

"ஷெக்கனபோ கொலை தொடர்பாக மாண்பு மிகு அதிபர் அக்கறையாக இருக்கிறார்."

"அப்படியா, நான் என்ன செய்ய வேண்டும் என்று நமது அதிபர் எண்ணுகிறார்?"

"வியாபாரப் போட்டி காரணமாக ஷெக்கனபோ கொலை செய்யப்பட்டிருக்கலாம், என்று அவர் நினைக்கிறார். அதன்படியே பொலிஸாரும் கூறினால் நன்றாக இருக்கும்."

இந்த சூசகமான அறிவிப்பை குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி புரிந்து கொள்ளுவார். அதன்படி விசாரணை அறிக்கை வெளியாகும்.

ஷெக்கனபோ பெரும் தொகைக்கு காப்புறுதி செய்திருந்தார். இதனையும் அறிந்து வைத்திருந்த அமீன் அவரது காப்புறுதியை மனைவிக்கு வழங்காது இழுத்தடிக்குமாறு காப்புறுதி நிறுவனத்துக்கு கூறியிருந்தான்.

இழுத்தடிப்பால் நொந்துபோன ஷெக்கனபோவின் மனைவி அமீனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். தனக்கு உதவியளித்து, காப்புறுதிப் பணம் கிடைக்க ஆவன செய்யுமாறு பணிவாகக் கேட்டிருந்தாள்.

தான் எதிர்பார்த்தபடியே பழம் நழுவி மடியில் விழுவதை நினைத்து அமீனுக்கு அபாரமான சந்தோசம்.

உடனடியாக அவள் கணவரது பெயரிலான காப்புறுதிப் பணத்தை மனைவிக்குக் கொடுக்குமாறு அமீன் எழுத்து மூலமாக உத்தரவு பிறப்பித்தான்.

காப்புறுதி நிறுவனத் தலைவருக்கு கிலி பிடித்துவிட்டது.

அமீனுக்கு வேண்டப்பட்ட ஒருவருக்கு காப்புறுதிப் பணம் கொடுக்காது தாமதித்துவிட்டோமே என்ற பயத்தில், அமீனைச் சந்தித்து தன்னிலை விளக்கம் கொடுத்தார்.

தாமதம் செய்யுமாறு அமீனது செயலாளர் தான் கூறியதாக பவ்வியமாகத் தெரிவித்தார்.

**"அவரா கூறினார்? விசாரிக்கிறேன். ஒரு அபலைப் பெண்ணுக்கு அநீதி இழைப்பது முறையல்ல!"** என்று தனக்கு எதுவும் தெரியாததுபோல பேசினான் அமீன்.

ஷெக்கனபோவின் மனைவிக்கு காப்புறுதிப் பணம் கிடைத்தது.

நன்றி சொல்வதற்காக அமீனை சந்திக்க விரும்பினாள்.

ஜனாதிபதி மாளிகையின் கதவுகள் அவளுக்காக அனுதாபப்பட்டுக்கொண்டு திறந்தன.

**(இடி தொடரும்)**

## பணக்கார ஜோடி

டென்னிஸ் விளையாட்டில் பலகோடி இரசிகர்களை கொக்கிபோட்டு இழுத்த கவர்ச்சிக் காந்தம் ஸ்டெபி கிராப்.

அதேபோல பெண் இரசிகைகளை பித்துப் பிடிக்க வைத்த மொட்டைத் தலையர் டென்னிஸ் வீரர் அகாசி.

நடிகை புரூக் ஷீல்டை திருமணம் செய்தார் அகாசி. இரண்டு ஆண்டுகளுக்குள் விவாகரத்தில் முடிந்தது. அகாசிக்கு தன்னை கவனிக்கவே நேரம் இல்லை என்பது புரூக் ஷீல்டின் குற்றச்சாட்டு.

ஸ்டெபி கிராப்பும் கார்ப்பந்தய வீரரான மைக்கேல் பார்ட்டெல்லை கடந்த ஏழு ஆண்டுகளாக காதலித்து வந்தார். மைக்கேல் வேறு பெண் நண்பிகளோடும் லீலைகள் புரிந்ததால் ஸ்டெபி அவரது காதலை கத்தரித்தார்.

அதன் பின்னரே அகாசி, ஸ்டெபி காதல் கருவாகி, உருவாகியது.

இருவருமே டென்னிஸ் உலகில் முதலிடத்தில் இருந்தவர்கள். இருவரிடமும் பலநூறு கோடி ரூபாய் சொத்துக்கள்



இருக்கின்றன.

அகாசிக்கு அமெரிக்காவில் லாஸ்வேஜாஸ் நகரில் 24 அறைகள் கொண்ட மாளிகை இருக்கிறது. அந்த மாளிகையில் ஸ்டெபி குடியேறிவிட்டார். இருவரும் ஜோடிப் பறவைகளாகிவிட்டனர். பணம் பணத்தோடு சேர்ந்துள்ளது.

## ஆடி முடிந்ததும் 30 இலட்சம்

இந்தியாவில் தற்போது அதிக சம்பளம் வாங்கும் நடிகர், நடிகை யார்? நடிகர்- ஷாருக்கான். அவரது சம்பளம் இந்திய பண மதிப்பில் இரண்டரைக் கோடி. அதிக சம்பளம் கறக்கும் நடிகை- கஜோல். சம்பளம் இந்திய மதிப்பில் 85 இலட்சம்.



அமிதாப்பச்சன் சூப்பர் ஸ்டாராக இருந்த போது மூன்றரைக் கோடி வாங்கினார். இப்போது அவரது சம்பளம் 60 இலட்சம்.

ஷாருக்கான் ஒரு பங்களா வாங்கியுள்ளார். அதன் மதிப்பு இந்திய பணமதிப்பில் 12 கோடி ரூபாய்.

'எனக்கு ஒரு தயாரிப்பாளர் ஐந்தரை கோடி ரூபாய் சம்பளம் தருகிறேன் என்று கூறினார்' என ஷாருக்கானே பேட்டியளித்துள்ளார்.

பிரபல கோடீஸ்வரர் வீட்டு திருமணம் ஒன்றில் கரிஷ்மா கபூர் நடனம் ஆடினார். ஆடி முடித்து வீடு திரும்பும்போது 30 இலட்சம் ரூபாய் கைமாறியது.

இதனைவிட இந்தி நடிகைகளில் முன்னணியில் உள்ளோர் 'அந்த மாதிரியான' சமாச்சாரங்களுக்காகப் பல இலட்சங்கள் வாங்குகிறார்கள். முன்னணி நடிகைளுக்கு கொட்டிக் கொடுத்தாவது சந்தோசம் பார்க்க பெரும் தனவந்தர்கள் பணத்தோடு அலைகிறார்கள்.

கிரிக்கெட் போட்டி நடுவே ஒளிபரப்பாகும் விளம்பரப் படம் ஒன்றில் சில நிமிடங்கள் மட்டுமே நடிப்பதற்கு ஷாருக்கான் ஒன்றரை கோடி வாங்கிக்கொண்டார். கஜோல் ஒன்றே முக்கால் கோடியும், ராணி முகர்ஜி 50 இலட்சமும் பெற்றுக் கொண்டார்கள்.

நடிகைகளில் கஜோலுக்கு அடுத்து- கரிஷ்மா கபூர்-70 இலட்சம், ஊர்மிளா 65 இலட்சம், மனிஷா கொய்ராலா 55 இலட்சம், ராணி முகர்ஜி 50 இலட்சம், மாதுரி டிக்ஷித் 40 இலட்சம் என்று சம்பளம் வாங்குகிறார்கள்.

நடிகர்களில் சல்மான்கான் ஒன்றரைக் கோடி, அமீர்கான் ஒன்றரைக் கோடி, அஜய் தேவ்கான் ஒன்றேகால் கோடி, சன்னிதியோல் ஒன்றே கால் கோடி, கோவிந்தா ஒரு கோடி அனில் கபூர், பொபிதியோல் ஆகியோரும் ஒரு கோடி என்று சம்பளம் பெறுகிறார்கள்.

## கொலை டாக்டர்



இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் இருப்பது பிரெஸ்டன் நகரம். அங்கு டாக்டராக இருப்பவர் ஹெரால்ட் ஷிப்பேன். 53 வயது.

கைராச்சிக்கார டாக்டராகவே முதலில் இருந்தார். பின்னர்தான் மெல்ல மெல்ல அவருக்குள் சாத்தான் புகுந்து கொண்டான்.

1995ம் ஆண்டு மார்ச் மாதம் முதல், கடந்த ஆண்டு ஜூன் மாதம்வரை தன்னிடம் சிகிச்சைபெற வந்த பதினைந்து பெண் நோயாளர்களைக் கொன்றுள்ளார் அந்த டாக்டர்.

இந்த அதிர்ச்சிகரமான காரியத்தைச் செய்துவிட்டு, எதுவும் நடக்காதவர்போல ஹாயாக இருந்துள்ளார்.

அனைவருக்குமே விஷ ஊசி போட்டுத்தான் கொலை செய்திருக்கிறார். கொலையான பெண்கள் அனைவரும் 49 முதல் 81 வயது வரையானவர்கள். எப்படியோ இவரது கொலைவெறி தெரிந்து கைதாகியுள்ளார். இக் கொலைகளை ஏன் செய்தார் என்று அவர் கூறும் காரணம் என்ன தெரியுமா?

"வாழவைப்பதும் சாகடிப்பதும் என் கையில் உள்ளது என்று நிரூபிக்க விரும்பினேன்!" என்கிறார். கிராதகன்.

## கிளின்ரன் திண்டாட்டம்



அமெரிக்க அதிபர் கிளின்ரன் ஒரே ஒரு செல்ல மகள் செல்சியா. இவர் கல்லூரியில் ஒரு மாணவனைக் காதலித்தார். பின்னர் அக்காதல் முறிந்து போனது.

தற்போது செல்சியா காதல் கொண்டிருப்பது படத்தயாரிப்பாளர் ஒருவருடன்.

கிலாரியின் தோழியின் மகனான ஆண்ட்ரூ நிக்கோலஸ் என்பவருடன்தான் செல்சியா காதல் வசப்பட்டுள்ளார்.

கிலாரி இந்தக் காதலுக்கு பச்சைக்கொடி காட்டியிருக்கிறார். ஆனால் கிளின்ரன் சிகப்புக் கொடியைத் தூக்கிப் பிடித்திருக்கிறார்.

செல்சிக்கு இப்போது 19 வயது. தன் மகளுக்கு காதலிக்கும் பக்குவம் இன்னமும் வரவில்லை. அவள் ஏமாற்றப்படலாம் என்று பயந்துதான் கிளின்ரன் சிகப்புக் கொடி காண்பிக்கிறாராம்.

இரகசியப் பொலிஸ் மூலம் தனது மகளது நடமாட்டங்களை கிளின்ரன் கண்காணிப்பதாகவும் கூறப்படுகிறது.

## படுகுழி வாழ்க்கை



சீனாவைச் சேர்ந்தவர் லூ. இவர் 1987ம் ஆண்டு க்சின்யுவான் என்ற பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து ஒரு சிறிய தொகையைத் திருடிச் சென்று விட்டாராம்.

பிறகு அவர் பொலிசாரின் கண்களில் படாமல் தலைமறைவாகி விட்டார். எனினும் பொலிசார் முயற்சியைக் கைவிடாமல் அவரைத் தேடி வந்தனர். 12 ஆண்டுகள் கழித்து அவரை தற்போது பொலிசார் கண்டு பிடித்துக் கைது செய்துள்ளனர்.

இத்தனை காலமாக அவர் தனது வீட்டில் 1 மீட்டர் ஆழத்திற்குத் தோண்டப்பட்ட ஒரு படுகுழியில் பதுங்கியிருந்தாராம். அந்த வீட்டில் பொலிசார் வேறு ஒரு சோதனை நடத்தியபோது அவர் பிடிபட்டார் என்று கூறப்படுகிறது.

## உயர்ந்த மனிதர்




எல்லோருமே இவரை அண்ணாந்துதான் பார்க்கவேண்டும். காரணம் இவரது உயரம் 7 அடி 9 அங்குலம்.

துனிஷியா நாட்டைச் சேர்ந்த இவரது பெயர் நாடோவ்னே செர்பிப்.

சுரப்பி கோளாறால் மளமள வென்று வளர்ந்து இந்த கட்டத்தோடு வளர்ச்சி நின்றதால் வானத்தை உரசும் வாய்ப்புப் போய்விட்டது.

இவரது உயரத்தால் பலத்த வருமானம். இவரோடு நின்று புகைப்படம் எடுக்க பலத்த போட்டி. படம் எடுத்துக் கொள்வோரிடம் பணம் வசூலித்து சம்பாதிக்கிறார்.

சேர்ந்து படம் எடுக்க வந்த பெண்களில் ஒருவருக்கு மனதில் இடம் கொடுத்து தீவிரமாக காதலித்துக் கொண்டும் இருக்கிறார்.




## வீட்டில் மது

'பெரும் குடி' மக்களுக்கு 'கிக்'கான செய்தி. வீட்டிலேயே 'வைன்' தயாரிக்கலாம்.

இந்த இயந்திரத்தில் திராட்சைக் கலவைகளைப் போட்டு நீர் ஊற்றினால் சூப்பர் வைன் தயார்.

நோர்வே நாட்டவர் ஒருவர் இதனைத் தயாரித்து குடிமக்களுக்கு வைன் வீட்டிலேயே தயாரிக்க வழி காட்டியிருக்கிறார்.



## படச்சுருள் தேவையில்லை

விதம் விதமான கமராக்கள் படுவேகமாக சந்தையில் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன.

இம்மாதம் ஜப்பானில் சந்தைக்கு வந்துள்ள 'மெக்ஸியா' டிஜிட்டல் கமராவின் தோற்றத்தையே இங்கு பார்க்கிறீர்கள். அதி நவீன சாதனங்களைக் கொண்ட இக்கமராவுக்குள் படம் பிடிக்கப் பயன்படும் படச்சுருள் (பிலிம் ரோல்) இருக்காது.

இத்துடன் தொடுக்கப்பட்டுள்ள கம்பிமூலம் ஒரு கணனியில் படம் பதிவாகும்.


ஒரே தடவையில் 15 படங்களைப் பிடிக்கலாம். ரொமி என்ற ஜப்பானியப் பொம்மை தயாரிக்கும் நிறுவனம் இக்கமராவை வடிவமைத்துள்ளது. இதன் விலை 60 அமெரிக்க டொலர். இக்கமராவின் நிறை 113.5 கிராம்.

(பட உதவி ஏ.எம்.ரஃபையுதீன், டோஹா- கட்டார்)

## சின்னம் சிறிசு

குளிர்சாதனப்பெட்டியை நீங்கள் இனிமேல் பூதக்கண்ணாடி போட்டுக் கொண்டு தேடவேண்டியிருக்கலாம்.

அந்தளவுக்கு மிகச்சிறிய அளவில் தயாரிக்கப் போகிறார்கள். அதற்கான மாதிரி வடிவமே (மொடல்) இங்கு உள்ளது.



## கட்டழகர்



உருண்டு திரண்ட உடலமைப்பைக் கொண்ட இவர் அமெரிக்க தென் கரோலினா மாநிலத்தைச் சேர்ந்த லீஹானே என்ற ஆணழகர்.

வருடா வருடம் நடைபெறும் 'மிஸ்டர் ஒலிம்பியா' ஆணழகர் விருதினை 1984ம் ஆண்டு முதல் 1991ம் ஆண்டுவரை எட்டுத் தடவைகள் தொடர்ச்சியாக வென்று உலக சாதனை படைத்தவர்.

ஃபுளோரிடா மாநிலத்தில் ஓர்லாண்டோவில் 1991ம் ஆண்டு நடைபெற்ற போட்டியின் போது எட்டாவது தடவையாக விருதினைப் பெற்றதும் ஓய்வுபெற்றார்.

இவர் 28 வருடங்களாக உடற்பயிற்சி மேற்கொண்டு தனது தசைநார்களை மெருகேற்றினார். ஓய்வு பெற்றாலும், 'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த நோக்கில், பல இடங்களுக்கும் சென்று உடலையும் உள வளத்தையும் பேணுவதற்கான பயிற்சிகளை இளம் சமுதாயத்தினருக்கு வழங்கி வருகிறார். கருத்தரங்குகளையும், செயல்முறைகளை விளக்கும் அரங்குகளையும் நடத்தி வருகிறார்.

எட்டுத் தடவைகள் தொடர்ச்சியாக 'மிஸ்டர் ஒலிம்பியா' பட்டம் பெற்ற இவரது உலக சாதனை இந்த ஆண்டும் தொடர்கிறது. முறியடிக்க இனிமேல்தான் யாராவது பிறந்து வரவேண்டுமாக்கும்.

## மடிப்பு சைக்கிள்


எல்லாமே கையடக்கமாக வந்து கொண்டிருக்கும் காலம் இது. சைக்கிளும் கையடக்கமாக வந்துவிட்டது. இதற்கு முன்பும் மடித்துச் செல்லக்கூடிய சைக்கிள் பற்றிய தகவலை வெளியிட்டிருந்தோம்.

இப்போது மற்றொரு மடிப்பு சைக்கிள். வெளியூர்களுக்கு ரயில், கார், பஸ், விமானம் எதில் சென்றாலும் இதை மடித்து கையோடு கொண்டு போகலாம். இறங்கிய பின்னர் இதனை விரித்து ஏறி ஹாயாக சவாரி செய்யலாம். நம்நாட்டுக்கு எப்போது வருமோ?!



## தகவல்பெட்டி

## விலையோ விலை



சொன்னால் நம்பமாட்டீர்கள். இந்த தங்க நெக்லஸின் மதிப்பு நம்நாட்டு மதிப்பில் ஒரு கோடியே 40 இலட்சம்.

சிவப்புக்கல்லும் 32 காரட் வைரக்கற்களும் இழைத்து ஃபிரான்ஸ் நாட்டு நகைக்கலைஞர் புரூனோ கில்லான் என்பவர் இதனைச் செய்திருக்கிறார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் இதனை காட்சிக்கு வைத்து, பலத்த பாதுகாப்பு போட்டிருக்கிறார்கள்.

திரையுலக மறுபக்கம் 126

அமெரிக்காவிலிருந்து பாபு

# பிறந்தநாளுக்கு வந்த சிம்ரான் கும்ளேக்கு வீசும் வலை

இந்தை பெரியாரின் பெயரில் ஒரு பாதியை தன் பெயரோடு இணைத்து வைத்துள்ளார் அந்த குணசித்திர நடிகர். நடிகைகளோடு கிளு கிளுப்பாகத் தான் பேசுவார்.

துணை நடிகைகளுடன் அதிகம் வம்பு பண்ணுகிறார். கிளுகிளுப்பது பேசுவதிலேயே இன்பம் காணும் ஆட்கள் இருக்கிறார்கள். இந்த நடிகரும் அவ்வாறான ரகம்தான். பேச்சோடு சரி. வேறு விவகாரம் எல்லாம் கிடையாது.

இவரைக் கண்டாலே சில நடிகைகள் ஒதுங்கி ஒளிந்துக் கொள்கிறார்கள். இவரது பேச்சை ரசிக்கும் நடிகைகளும் இல்லாமல் இல்லை.

-*-

நடிகை சிம்ராலும், பிரபுதேவாவின் சகோதரரான நடன இயக்குநர் ராஜுசுந்தரமும் ஒட்டி உறவாடுவது பரகசியமான சமாச்சாரம். ஆனால் இருவருமே இதனை மறுத்துப் பேசுவதும் வாடிக்கை.

சமீபத்தில் ராஜுசுந்தரத்தின் பிறந்தநாள். பிரபுதேவா மட்டும் அவரது குடும்பத்தில் இருந்து வந்திருந்தார்.

குறித்த நேரத்திற்கு குஜாலாக வந்து சேர்ந்தார் சிம்ரான். ராஜுசுந்தரத்துக்கு சிம்ரான் கேக் ஊட்டிவிட, சிம்ரானுக்கு ராஜு கேக் ஊட்டிவிட்டதும் கண்கொள்ளாத காட்சியாக இருந்தது.

இக் காட்சியை ஜெயா டிவிக்காரர்கள் படமாக்கிவிட்டனர். ஜெயா டிவியில் இதனை ஒளிபரப்பாது நிறுத்துமாறு ராஜுசுந்தரத்திடம் சிம்ரான் கூறியிருக்கிறார்.

## வாடிய மலர்

இரண்டெழுத்து 'பூ'வின் பெயர் கொண்ட நடிகை வழக்குப் பிரச்சனைகளால் நொந்து நூலாகியிருக்கிறார்.

தனது இச்சைக்கு பணிய மறுத்ததால் அந்த பிரபல தயாரிப்பாளர் 'பூ' நடிகையை வாடவைக்க சபதம் செய்துள்ள தகவலை பல மாதங்களுக்கு முன்னதாக இதே பகுதியில் தெரிவித்திருந்தோம்.

நடிகை கொடுத்த காசோலையில் பணம் இருக்கவில்லை என்று தயாரிப்பாளர் தொடுத்த வழக்கில் நடிகைக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அப்பீல் செய்தார்.

சமீபத்தில் மறுபடியும் நடிகைக்கு எதிராக வழக்கை துரிதப்படுத்தியுள்ளார் அந்த தயாரிப்பாளர்.

இதைவிட அவரது ஆசைக்கு இணங்கியிருந்தால் கடன் தொகையை செலுத்த வேண்டியிருந்திருக்காது. நீதிமன்றத்துக்கும் அலைய வேண்டியிருக்காது என்று நடிகையை உணரவைப்பது தான் தயாரிப்பாளரது எண்ணமாம்.

'பூ'வின் பெயர் கொண்ட நடிகைக்கு உதவ மூன்று நடிகர்கள் முன்வந்துள்ளனர். ஒருவர் 'க' நடிகர்.

இன்னொருவர் 'கா' நடிகர். மூன்றாமவர் அரசியல் பலம் கொண்ட ஆறெழுத்து நடிகர். இவர்களில் 'கா' நடிகர் 'பூ' நடிகையோடு இனியில்லை என்றளவுக்கு நெருக்கமாக இருக்கிறார். பண உதவியும் செய்திருக்கிறார்.

உதடுகளால் போதை ஏற்படுத்தும் இந்த 'பூ' நடிகைமீது 'பகலவன்' பெயர் கொண்ட படத்தில் நடித்தபோது ஆறெழுத்து நடிகருக்கு ஒரு கண். அப்போது நடிகை படியக்கூடிய நிலையில் இருக்கவில்லை. மணியான இயக்குநர்மீது மாபெரும் காதலில் ஆழ்ந்திருந்தார்.

தற்போது காதலரோடு நடிகைக்கு கசப்பு உள்ளது. ஊடல் கொண்டுள்ளார். இந்த நேரம் பார்த்து கூடலுக்கு அழைப்பு விட்டுள்ளார் ஆறெழுத்து நடிகர். நடிகையும் தனது கடன்தொல்லைகளில் இருந்து மீள்வதற்கு நடிகரின் நட்புக்கு இம்முறை கைதிட்டியுள்ளார்.

அதுமட்டுமன்றி படங்களில் கதாநாயகியாக மட்டுமல்லாது ஒரே ஒரு பாடல் காட்சியில் தோன்றி நடிக்கவும் அழைத்தால் உடன் சம்மதிக்கிறார். பணத் தேவை அப்படி நிர்ப்பந்தம் செய்கிறது.

படப்பிடிப்புத் தளத்தில் முன்பெல்லாம் கலகலப்பாக இருப்பவர், இப்போது யாரோடும் கதைக்காது சோகமாகவே அமர்ந்திருக்கிறார். என்று தீரும் இந்த மலரின் வாட்டம்?

○▲●

இது மும்பாய் பத்திரிகை ஒன்றின் செய்தி.

இந்திய தேசிய விருது பெற்ற நடிகை தபு. ஓய்வு நேரங்களில் வானொலியில் பண்பலைதான் (எஃப்எம்) கேட்பார்.

அதே சமயத்தில் கம்பியூட்டரிலும் தபு படுசெடுபாடு. ரசிகர்களுக்கு ஈமெயில் மூலம் பதில் அனுப்புகிறார். தற்போது அனில் கும்ளேயை வளைத்துப்போடும் முயற்சியில் இறங்கியுள்ளார் தபு.

ஏற்கனவே அனில் கும்ளே நடிகை ஷோபனாவுடன் கிசுகிசுக்கப்பட்டவர். தற்போது புது மனைவியுடன் தேன்நிலவு கொண்டாடவும் நேரம் இல்லாமல் விளையாடிக் கொண்டிருக்கிறார். இந்த நேரத்தில் தபுவும் வலை வீசியிருக்கிறார். தபுவின் இந்த நடவடிக்கையைக் கண்டு நடிகர் நாகார்ஜுனா ஆடிப்போயிருக்கிறார். தபு தன் பிடியில் இருந்து நழுவிவிடுவாரோ என்று யோசனை.


கார்த்திக்-ரம்பா
படம்: உனக்காக எல்லாம் உனக்காக

சினிமா விமர்சனம் — நமது விமர்சனக் குழு — 43/100

## கதையைத் தேடவேண்டாம்

**படம்** : 'உனக்காக எல்லாம் உனக்காக'
**நடிப்பு**: கார்த்திக், ரம்பா, கவுண்டமணி, விவேக், ஜெய்கணேஷ், விஜுசக்கரவர்த்தி
**இயக்கம்**: சுந்தர்.சி.
**இசை** : யுவன் ஷங்கர்ராஜா

'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி' போன்ற படங்களில் கார்த்திக்கை நகைச்சுவை அரசனாக மாற்றியவர் சுந்தர்.சி. இப்படத்திலும் முழுக்க முழுக்க சிரிப்பை நம்பியே காட்சிகளை செதுக்கியுள்ளார். ரசிக மகாஜனங்கள் சிரிப்பில் மூழ்கிவிடுவதால் கதையைத் தேடமாட்டார்கள் என்ற பயங்கரத் துணிச்சலில் வெளியாகியுள்ள படம்.

கவுண்டமணி பறந்து பறந்து ரம்பாவை மிரட்டுவது போன்ற நம்பமுடியாத சிரிப்புக் காட்சிகளிலும் நம்மை சிரிக்க வைப்பது தான் இப்படத்தின் பலம்.

கடைசிக் காட்சிகளில் ஜாலியான குழப்பத்தை வைத்தே படத்தை தூக்கி நிறுத்தியுள்ளார் இயக்குநர்.

சுவிற்சர்லாந்தில் பாடல் காட்சிகள் அருமை. அதற்கு ரம்பாவின் ஒத்துழைப்பு அருமையிலும் அருமை. எதற்கும் தயார் என்று உடைத்திவாகம் செய்திருக்கிறார் ரம்பா.

ரம்பாவை எப்படி வெளிப்படுத்தினால் அசத்தலாம் என்பதை சுந்தர் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்.

விவேக்கின் நகைச்சுவையும் சிரிக்க வைக்கிறது. கத்திக் கத்தி கவுண்டமணி காதை அடைக்க வைக்கிறார். கத்தாமலேயே விவேக் சிரிப்புக் குண்டுகளை வெடிக்க வைக்கிறார்.

பொழுதுபோக்குக்காக, சிரிப்பதற்காக மட்டும் படம் பார்ப்பவரா நீங்கள்? தாராளமாக இப் படத்தை வீடியோ பிரதி எடுத்துப் பாருங்கள்.

தமிழ் நாட்டில் 35 நாட்களாக ஓடிக்கொண்டிருக்கிறது. சென்னையில் மட்டும் நான்கு திரையரங்குகளில் கலகலப்பாக போய்க் கொண்டிருக்கிறது.

முகப்பில் ஸ்வலட் கமி சரத்குமார் விஜய்


சிம்ரான்

# விஜய் படத்திற்கு எதிர்ப்பு மனம் உடைந்தார் விஜய்

'மின்சாரக் கண்ணா' படத்தை இயக்குநர் பாலசந்தரின் மருமகனது நிறுவனம் திருட்டு வீடியோ எடுத்ததாக விஜய்யின் தந்தையான எஸ்.ஏ. சந்திரசேகரன் புகார் செய்தார்.

இந்தச் சர்ச்சையை அடுத்து விஜய் படங்களுக்கு ஒத்துழைப்பதில்லை என்று தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சங்கம் (பெப்சி) அறிவித்தது.

பாலசந்தரிடம் சந்திரசேகரன் மன்னிப்புக் கேட்கும்வரை விஜய் படங்களுக்கு ஒத்துழைக்க மாட்டோம் என்று பெப்சி அறிவித்தது.

இந்த தீர்மானத்தை கைவிடுமாறும், விஜய் படங்களுக்கு ஒத்துழைக்குமாறும் அஜித்குமார் அறிக்கைவிட்டார்.

தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் ஆகியோரும் பெப்சியின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டனர். இதன் பின்னர் விஜய் படங்களுக்கு ஒத்துழைப்பதில்லை என்ற தீர்மானத்தை பெப்சி கைவிட்டது.

சன் தொலைக்காட்சிக்கும் பாலசந்தரின் நிறுவனத்துக்கும் இடையே பிரச்சனை இருப்பது தெரிந்தகதை. சந்திரசேகரனை பாலசந்தருக்கு எதிராகத் தூண்டிவிட்டுப் பிரச்சனையைப் பெரிதாக்கியது அவர்கள்தானாம்.

இப்பிரச்சனையால் விஜய் மனம் உடைந்துள்ளார். பாசில் இயக்கத்தில் தற்போது நடித்துவரும் படம் முடிந்ததும் மனைவியோடு வெளிநாடு செல்கிறார். அங்கு இரண்டு வாரம் தங்கியிருப்பார்கள்.

# பொட்டு அம்மன்

'அம்மன்' என்னும் படம் கம்பியூட்டர் கிராபிக்ஸ் வித்தைகளோடு வெளியாகி சக்கை போடு போட்டது. அதன் பின்னர் அம்மன் படங்கள் பல வந்துவிட்டன. தற்போது ரோஜா அம்மனாக நடிக்கும் படம் ஒன்று தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் தயாராகிறது.

படத்திற்கு வைக்கப்பட்டுள்ள பெயர்: 'பொட்டு அம்மன்'. இப்படத்தில் உதய், பிரேமா, ஆனந்தராஜ், சாருஹாசன், வையாபுரி, கே.ஆர்.விஜயா, கோவைசரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

திரைப்படக் கல்லூரி மாணவரான ராஜரத்னம் இப்படத்தை இயக்குகிறார். இசை: சாந்தகுமார் இவரும் புதுவரவு.




## காதோடு சொ…

தாஜ்மஹால் கட்… மாணவரின் பெயர் கொ… தமிழ்ப்பட உலகில் பர… பரபரப்புக்குக் காரண… நடிகையின் காதலரா… 'ரம்ப' நடிகையோடு … தெரிந்ததுதான். இப்… நடிகையோடும் 'டி… டிஸ்கஷனின் முடிவில் … படத்தில் ஒரு வாய்ப்பு …

சமீபத்தில் வெளி… நடிகரின் 'ஷாக்' அடி… அது. அப்படத்தின் இ… மான மூன்றெழுத்து … நெருக்கம் ஏற்பட்டு … தனது பாத்திரத்தைச் … நடிகையும் புலம்புகிற…

பிரகாசமான வி… 'செண்பக' நடிகைக்கு … விட்டாராம். 'இந்த வி… வேண்டாம். உன் புது… பதிலடி கொடுத்துவிட்…

'மந்திர' நடிகை … தார். இப்போது காத… ஏற்பட…



பார்த்திபன்-மீனா
...உன்னருகில் நானிருந்தால்

# விஜய்க்கு எதிராக சதி! யார் எதிரிகள்?

'விஜய்யின் முன்னேற்றத்தை சகிக்காத சிலர் தொடர்ந்து சதிசெய்து வருகிறார்கள். கல்யாணமாகி தேன் நிலவு சென்ற போதுகூட மனிதாபிமானமே இல்லாமல் வதந்தி பரப்பினார்கள். விஜய் தற்கொலை செய்து கொண்டதாக நாக்கூசாது கூறினார்கள்.

இப்போது பாலசந்தரின் ஆதரவாளர்களோடு பிரச்சனையை ஏற்படுத்தி உள்ளார்கள். விஜய் இதனால் மிகவும் மனம் வருந்துகிறான்.' இவ்வாறு விஜய்யின் பெற்றோர் கூறுகின்றனர்.

'விஜய்யை சினிமா உலகில் இருந்து அழித்துக்கட்ட சதி நடக்கிறது. ஒரு இளம் கதாநாயகன்தான் இதன் பின்னணியில் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.' என்று விஜய் ரசிகர் மன்றத்தினர் குமுறுகின்றனர்.

"சதியும் இல்லை எதுவுமில்லை. 'மின்சாரக் கண்ணா' படத்திற்கு விளம்பரம் தேடுவதற்காக சிறிய பிரச்சனையை பெரிதுபடுத்தியவர் விஜய்யின் அப்பா சந்திரசேகரன்தான். பாலசந்தர் வீதி திருட்டு வீடியோ எடுப்பதாக குற்றம் சாட்டியது லேசான காரியமா? சந்திரசேகரனால்தான் விஜய்க்கும் விலங்கள்' என்று இன்னொரு சாரார் கூறுகின்றனர்.

எது எப்படியோ இந்தப் பிரச்சனைகளால் விஜய்யும், மனைவியும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## அரை டஜன்

'மலபார் பொலிஸ்' நன்றாக ஓடியதால் சத்யராஜ் மார்க்கெட் மறுபடி உயர்ந்துவிட்டது. அரை டஜன் படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன. சொந்தமாக படம் தயாரித்து இயக்கவும் திட்டம் வைத்துள்ளார்.

பிரபுவின் நிலைதான் பரிதாபம். அவர் நடித்த 'மனம் விரும்புதே உன்னை' வெளியாகாமல் கிடந்தது. அதனை வெளியிட பிரபுவே பண உதவி செய்திருக்கிறார்.

## மினி சினி

- 'மறுமலர்ச்சி', 'கள்ளழகர்' போன்ற படங்களை இயக்கிய பாரதி அடுத்து 'தம்பி உடையான்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதில் பிரபு, நெப்போலியன், விக்னேஷ் ஆகியோர் நடிக்கின்றனர்.
- பிரசாந்த்-சௌந்தர்யா ஜோடியாக நடிக்க கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படம் 'வீட்டிலே சில விசேஷங்கள்' என்ற மலையாளப் படத்தின் தமிழ்ப்பதிப்பு ஆகும்.
- தேவயானி சொந்தமாகத் தயாரிக்கும் படத்தில் அவரே கதாநாயகியாக நடிக்கவுள்ளார். கதாநாயகனாக பார்த்திபன் நடிக்க, மு.களஞ்சியம் இப்படத்தை இயக்கவுள்ளார்.
- 'அவ்வை சண்முகி' படத்தில் சமையல் பெண் வேடத்தில் நடிக்க வைத்தவர் கே.எஸ்.ரவிக்குமார். இவர் இப்போது இயக்கி வரும் 'பாட்டாளி' படத்தில் வடிவேலுவைப் பெண் வேடத்தில் நடிக்க வைக்கிறார்.
- பிரபல இந்தித் திரைப்பட நடன இயக்குநர் முகமட்கான், 'முதல்வன்' படத்திற்காக இரண்டு நடனக் காட்சிகளை அமைத்துள்ளார். இதில் ஒரு பாடலுக்கு சஷ்மிதா சென் நடனமாடியுள்ளார்.
- அஜித்-ஜோதிகா ஜோடியாக நடித்துவரும் 'முகவரி' படத்தை இயக்குபவர் புதிய இயக்குநர் துரை. இவர் ஆர். சுந்தர்ராஜனிடம் பல படங்களுக்கு உதவியாளராகப் பணியாற்றியவர்.
- கின்னஸ் சாதனைக்காக எடுக்கப்பட்ட 'சுயம்வரம்' படம் 'பெல்லண்டே இடேரா' என்ற பெயரில் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளது.
- 'பாரதி கண்ணம்மா' வெற்றிப்பட ஜோடியான பார்த்திபன்-மீனா ஜோடி தற்போது 'உன்னருகே நானிருந்தால்', 'வெற்றிக்கொடி கட்டு', 'ஜேம்ஸ் பாண்டு' ஆகிய மூன்று படங்களில் இணைந்துள்ளது.
- வெங்கடேஸ்வராலயம் என்னும் பட நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் ஒன்றிற்கு 'தமிழ்' என்று பெயர் சூட்டியிருக்கிறது.
- தெலுங்கில் தயாராகி வரும் 'விராலுக்கேத்த விக்கம்' படத்தில் ஊர்வசி வேடத்தில் ரம்யா கிருஷ்ணன் நடிப்பது பழைய செய்தி. நாசர் தமிழில் நடித்த வேடத்தில் கே. பாக்யராஜ் நடிக்கவிருப்பது புதிய செய்தி.

## ...டுத்த ரஜினி படம்

'படையப்பா' படத்தின் வெள்ளி விழா (175 நாள்) அக்டோபர் 28இல் பிரமாதமாக கொண்டாடப்படுகிறது. ரஜினி தன் கரங்களால் படத்தில் நடித்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு பரிசுகள் ...கிறார். ரஜினியின் அடுத்த படத்தை சுரேஷ் கிருஷ்ணா இயக்கப்போவதாக தமிழகப் பத்திரிகைகள் ...றில் வெளியாகி இருந்தன.

...னால் ஷங்கர்தான் அடுத்த ரஜினி படத்தை இயக்கக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ...ாயகி ஐஸ்வர்யா ராய் என்பது பெரும்பாலும் உறுதி. இப்படம் தமிழ், இந்தி ...யில் அமிதாப்பச்சன், ரஜினி கூட்டுத்தயாரிப்பாக எடுக்கப்படுமாம். ...ாப்பின் நண்பரான ராமநாதன் இதற்கான முயற்சிகளில் ...கியுள்ளார்.

...முதல்வன்' படம் முடிந்ததும் ஷங்கர் இயக்கப்போகும் ... ரஜினி படம்தான் என்று அடித்துச் சொல் ... ஷங்கர் வட்டாரம்.



சத்யராஜ்-வி.சி.எம்.ஹனிபா-சார்லி
படம்: திருநாள்

## ...லுகிறோம்

...தற்கு காரண... நடிகை. அவர் ... பேசப்படுகிறார். ...து தாராளம். ப... ...ரான இயக்குநர்... ...ன் நடத்தும் கதை... ...தாஜ்மஹால் 'மு... ...நடத்திவிருக்கிறார். ...கிய சுந்தரர் தனது... ...கியிருக்கிறார்.

...முன்றெழுத்து இளம்... ...பெயர் கொண்ட படம்... ...க்கும். படத்தில் அறிமுக... ...நாயகிக்கும் இடையே... ... இந்த நெருக்கத்தால்... ... சுருக்கிவிட்டதாக 'பூ'...

...டிகரின் பராமரிப்பில் உள்ள... ...நடிகரின் மனைவி மிரட்டல்... ...வேலையெல்லாம் என்னிடம்... ...பூட்டி வைச்சக்கோ" என்று... ...'செண்பக' நடிகை.

...ர தம்பி பெற்றோரைப் பிரிந்... ... ஏதோ பிணக்கு. பிழைப்பில்... ...னால் இப்போது தம்பியாரின்... ... தனியாக இருக்கிறாராம். தனி... ...ப்பதால் இயக்குநர்கள் சிலருக்கு... ...ஜுக்கு' தயார் என்று பச்சைக் காட்டியிருக்கிறாராம்.

## வையாபுரி

...ழ்ப்பட உலகில் அதிக ஆரவாரம் ...ல் முன்னேறிக் கொண்டிருக்கும் ...நகைச்சுவை நடிகர் வையாபுரி. கத்திப் ..., இயல்பாகப் பேசியே சிரிக்க வைக்கக் ...ர். பல படங்கள் கைவசம் உள்ளன. ...நகைச்சுவையாக மட்டுமன்றி வில்லனாக, ...த்திர நடிகனாக என்று பல பரிமாணங் ...கொண்ட ஆவலாக இருக்கிறார்.

...வையாபுரியின் முன்னேற்றத்தை வடிவேலு ...க்கவில்லை. இடையூறு செய்கிறார் என்றும் பேச்சு இருக்கிறது.



வையாபுரி

## ☆ பார்த்தேன் ரசித்தேன்

'அமர்க்களம்' படத்தை அமர்க்களமாக இயக்கி அஜித்குமாரிடம் 'கார்' பரிசு வாங்கியவர் இயக்குநர் சரண்.

'அமர்க்களம்' அமோகமாக ஓடியிருக்கிறது. இப்போது பிரசாந்த்தை வைத்து சரண் ஒரு படம் இயக்கப் போகிறார். இப்படத்திற்கு 'பார்த்தேன் ரசித்தேன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

பிரசாந்துக்கு ஜோடிகளாக இரு முன்னணி நடிகைகளைப் போடப்போகிறார்கள். ரகுவரன், சார்லி, தாமு, வையாபுரி உட்பட பலர் நடிக்கின்றனர்.

இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து நகைச்சுவை கலந்து கதை பண்ணப் போகிறார்களாம்.

## குஷ்பு–சிம்ரான்

தமிழ்ப்பட உலகில் ஒரு காலத்தில் கொடி கட்டிப்பறந்த மும்பாய் வரவு குஷ்பு. இப்போது கொடி கட்டிப் பறப்பவர் சிம்ரான். இவரும் மும்பாய் இறக்குமதி.

இந்த இருவரும் இணைந்து நடிக்கும் படம் ஒன்று தயாராகிறது. படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர் 'அன்புள்ள மான்விழியே!'

ரஞ்சித், கோபி கிருஷ்ணா இருவரும் இணைந்து நடிக்கிறார்கள். பிரகாஷ்ராஜ், வையாபுரி, சாப்ளின் பாலு உட்பட பலர் நடிகின்றனர்.

மலையாளத்தில் பிரபல இயக்குநரான ஹரிதாஸ் பி. இப்படத்தின் மூலம் தமிழ்ப்பட உலகில் காலடி வைக்கிறார். இசை: சவுந்தர்யன்.

## 25 கோடி

தமிழ்ப்பட உலகில் அதிக விலைக்கு விற்பனையான படம் படையப்பா. இந்திய மதிப்பில் 20 கோடிக்கு விற்பனையானது.

அதனை முறியடித்துவிட்டது ஷங்கர் இயக்கியுள்ள 'முதல்வன்', சுமார் 25 கோடி ரூபாவுக்கு விற்பனையாகியுள்ளதாம்.

அர்ஜுன், மனிஷா கொய்ராலா நடித்துள்ள 'முதல்வன்' ஷங்கரின் சொந்தத் தயாரிப்பு.

## சுவலட்சுமியின் மறுப்பு

சரத்குமாருடன் புதிய படம் ஒன்றில் நடிப்பதற்கு சுவலட்சுமியைக் கேட்டார்கள். "சரத்குமாருடனா, அவருடன் நடிக்கும் நடிகைகளை தன் பலத்தை காட்டியே பணியவைத்து விடுவாராமே" என்று மிரட்சியோடு கேட்டாராம் சுவலட்சுமி.

கேட்டதோடு நிற்கவில்லை. "நம்மால் முடியாதப்பா" என்று கூறிவிட்டாராம். ஹீரா, நக்மா தேவயானி போன்றோருடன் சரத்குமாரின் அணுகுமுறை பற்றி அறிந்து கொண்டதால்தான் சுவலட்சுமி பயந்து ஒதுங்கினார்.

இந்த விடயம் சரத்குமாரின் காதுக்கு எட்டியிருக்கிறது. தொலைபேசியில் தொடர்புகொண்டு விசாரித்திருக்கிறார்.

தான் கூறிய அனைத்தையும் சரத்குமாரிடம் பற்ற வைத்துள்ளார்கள் என்பதை அறிந்த சுவலட்சுமி பதறிப்போனார்.

"நான் எங்கே அப்படிக் கூறினேன். இப்போது தேதி கிடையாது; தெலுங்கில் பிஸி என்று தான் கூறினேன்," என்று சமாளித்திருக்கிறார்.

சரத்குமார் விடுவதாக இல்லை. அதனை நேரில் வந்து தன்னிடம் கூறுமாறும், ஹோட்டல் அறையில் தான் தனியாக இருப்பதாகவும் கூறினாராம்.

சுவலட்சுமிக்கு விஷயம் விளங்கிவிட்டது. ஆனாலும் போகாதுவிட்டால் பகையைத் தேடிக்கொள்ள வேண்டுமே. பெரிய நடிகரை எதிர்த்து சினிமாவில் நிலைக்க முடியாதே.

அதனால் தனியாகச் சென்று சரத்குமாரை சந்தித்தாராம். அதன்பின்னரே சரத் சமாதானமானாராம்.



# இருநாடு இரு மக்கள்

ஒரே நாடு, ஒரே மக்கள் என்பதெல்லாம் உதட்டோடு சரி. இங்கே முள்வேலிகள் பின்னால் காத்திருப்போர் எந்நாட்டு மக்கள்? இவர்கள் தமிழர்கள். பாஸ் பெறுவதற்காக படையினரின் அனுமதிக்காக, கொளுத்தும் வெய்யிலில் முள் வேலித் தடைகளுக்கு அப்பால் காத்திருக்கிறார்கள்.

இப்படி பாஸ் முறைகள் இருப்பதும், போக்கு வரத்தில் ஈடுபடும் சுதந்திரம் மறுக் கப்படுவதும் ஒரே நாடு என்பதை பொய்ப்பித்துவிட்டன. இரு நாடு, இரு வேறு மக்களினம், இருவேறு அணுகு முறை, இருவேறு விதி முறைகள் என்பதே இம் மக்கள் கூறும் அனுபவம்.

தேன் கிண்ணம்

## மேகம் நிழலிட, தாரகை திசை தர...

நான் போகிறேன்–இனி
உன்னைக் காணுகின்ற
எந்த நிகழ்வையும்
எதிர்பாராமலே–எனது
பயணத்தைத் தொடருகிறேன்!
–0–
பிரிதலின் வலிமிகுந்த வேளையில்
உனது முகத்தைக்
காணுகின்ற கணம் தோறும்
எனது உள்ளம்
மெதுவாக அழுகிறது!
–0–
வாழ்வின் ஸ்ரீதனமாக
வாய்த்திருந்த
எனது நாட்கள்
வாடி உதிர்கின்றன;
சருகுகளைச்
சப்தித்தவாறு
எனது பாதங்கள்
நகர்கின்றன!
–0–
உன் மீது நான் கொண்ட
அன்பில்–
போலியில்லை வேடமில்லை,
எல்லை மீறிய உணர்வுகள்
ஏதுமில்லை!
வரைவிலக்கணங்களுக்குள்
வசப்படாத நேயத்துடனே
உனை நேசித்தேன்!
–0–
உன்னை இங்கு
கண்டதும் பிரிவதும்–ஓர்
அதிசயக் கனவு போல
ஆச்சரியமாக உள்ளது!
–0–
எதையுமே திணிக்காத
உனதன்பு
நான் எதிர்கொண்ட
எல்லாச் சங்கடங்களையும்
தாங்கி வாழ்ந்திடத்
தைரியம் தந்தது!
–0–
இன்றுடன்
உனது பந்தம் தந்திருந்த
அழகிய சிறகுகளை
ஒடுக்கிக் கொள்கிறேன்–நான்
சிறகசைத்த வானத்திற்கு
எனது வாழ்த்துக்களையும்
இறுதி வந்தனங்களையும்
கூறி விடைபெறுகிறேன்!
–0–
நாளைய நாட்களில்
அண்ணனின் பாதையில் இடரத்
தங்கையுமில்லை!
தங்கையோடு சண்டைபோட
அண்ணனுமில்லை!
–0–
நான் போகிறேன்
எனது பயணத்தில்–இனி
ஏதேனுமொரு மேகம்
நிழல் தந்து விலகலாம்!
எங்காவதொரு நட்சத்திரம்
திசை காட்டி மறையலாம்!
–0–
பஹீமா ஜஹான்,
தெமடகொல்ல, மெல்சிரிபுர.

## மனித உறவுகள்

உள்ளத்தில்
ஒன்றை நினை
உதட்டில்
ஒன்றைப் பேசு
நன்றாக நடி
நடிப்பவர்க்குத்தான்
இந்த உலகம்!
**
உள்ளுக்குள்ளே
அழு!
நன்றாக அழ
வேண்டுமானால்
வெளியே
சிரித்துக்கொள்!
**
மனதை
ஒளித்து வை
வார்த்தைக்கு
சாயம் பூசு
உன்னை
நேசிப்பவர்களை
புறக்கணித்துப்பார்
தேறிவிடுவாய்.
**
சங்கடத்தில்
ஆழத்தாதவரை
உறவுகளை
வளர்த்துக்கொள்!
நட்பை பேணு
கையை கடிக்கும்போது
விட்டுவிடு
ஏனெனில்
மனித உறவுகள்
வெங்காயம் போன்றது.
இணுவையூர் உத்திரன்.

## பஸ் பயண சில் மிஷங்கள்

பக்கத்தினிலே பல மனிதர்
பயணம் செய்வதை நோக்காமல்
வெட்கம் இன்றித் தழுவிடுவர்;
வேலியைத் தாண்டிக் கைவிடுவர்!
☺☹
எல்லையை மீறும் சரசங்கள்!
எழுதப் போனால் விரசங்கள்!
தொல்லை தருகிற விதமாக
தொட்டுத் தொடரும் உரசல்கள்!
☺☹
பள்ளிப் படிப்பு படித்தோரே
பண்பை இவ்விதம் மீறுகிறார்!
பள்ளி யறையாய்ப் பேருந்தை
பாவிப்ப தனால் நாறுகிறார்!
☺☹
தட்டிக் கேட்க ஆளில்லை;
தம்பி சண்டப் பிரசண்டம்!
குட்டி அவளும் கூத்தாடி;
குமுறுது நல்லவரின் அண்டம்!
☺☹
அறையின் கூத்தைப் பலரறிய
அம்பல மாக்கும் அவலங்கள்!
முறையை மீறும் சில் மிஷங்கள்;
முட்டா ளாக்கும் சபலங்கள்!
மாத்தளை கமால்.

## யார் இவர்?





தமிழ்ப்பட உலகின் சமீபகால நடிகைகளில் சேலை கட்டி நடிப்பதில் பெயர் பெற்ற நடிகைதான் இங்கு சிறுமியாக காட்சி தருகிறார். சட்டம் படித்துள்ள நடிகை இவர் என்பது மேலதிகத் தகவல். கண்டுபிடித்தவர்கள், பிடிக்காதவர்கள் யாவரும் 18ம் பக்கம் நகரவும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

31.10.99 முதல் 06.11.99வரை

### மேடம்:

மந்த கதியில் மாற்றமும் பண நிலைச்சிக்கலும் தொடர்ந்து செல்லும். உறவினர்களது வருகையால் பதற்றநிலை தோன்றும். நோய் துன்பங்கள் வந்துபோகும். எதிர்பார்த்த விடயங்கள் தாமதமடையும் பரணிப் பெண்களுக்கு சிக்கலான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 2,4.

### இடபம்:

கிரக நிலையில் வக்கிரகம் கொள்வதால் பலமாற்றங்கள் நிகழ உள்ளன. பயண வசதிகள் ஏற்படும். பண, தொழில் நிலைகள் வலுப் பெறும். மனச் சந்தோஷமும் சுபசெய்திகளுடன், போசன சயன சௌக்கியமும் கிட்டும். ரோகிணி நட்சத்திரக்காரருக்கு சுகபலன் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 3,6.

### மிதுனம்:

ஏழில் செவ்வாய் உள்ளதால் சுபவிடயங்கள் பற்றிய பேச்சுக்கள் எழும். வருமானம் ஓரளவு இருக்கும். பயணவிடயம் தள்ளிப் போகும். சகோதரர்களின் தொடர்பு கிடைக்கும். ஒரே குழப்பமான நிலையாக காணப்படும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: மண்நிறம்; எண்: 7
அதிஷ்ட திகதிகள்: 31, 4.

### கடகம்:

மனதில் துணிவு காணப்படும். காதலர்களுக்கு மகிழ்ச்சியான நேரமாகும். பயண, அல்லது இடமாற்ற நிலை ஏற்படும், தொலைந்துபோன பொருள் திரும்பிவந்து சேரும். மகர ராசிக்காரர்களின் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 8.
அதிஷ்ட திகதிகள்: 4, 5.

### சிம்மம்:

பணவரவு அதிகரிக்கும். பயண முயற்சிகள் வெற்றி பெறும். பல் வேறுப்பட்ட கருமங்கள் வெற்றியடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். ஆலய தரிசனம் ஏற்படும். பூர, உத்திரக்காரருக்கு வசதியான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 3, 6.

### கன்னி:

ஜென்ம வீட்டில் சுக்கிரன் நீசமடைவதால் கிரக பாக்கிஸ்த்தான பலமடையும். பல நல்ல விடயங்கள் நடைபெறும். திருமணம் நடைபெறும். பொருள் வசதிகள் பெருகும். அத்த நட்சத்திர திருமணமாகாத பெண்களுக்கு சுபகருமம் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: மரூண் வர்ணம்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 5, 6.

### துலாம்:

மனதில் சந்தோஷம் ஏற்படும். வீட்டில் சுபநிகழ்வுகள் இடம்பெறும். இருப்பினும் எதோ ஓர் ஏக்கம் காணப்படும். அத்துடன் பணம், பொருள் வசதிகள் வந்து சேர்ந்தபடி காணப்படும். நோய் துன்பங்கள் ஏற்படும் நிலை உள்ளது. சுவாதி, குடும்ப பெண்களுக்கு சிக்கல்கள் தோன்றும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், சனி.
அதிஷ்ட நிறம்: றோஸ் வர்ணம்; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 1,5.

### விருட்சிகம்:

கோப குணங்கள் குறையும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். கடன் பிரச்சனைகள் தீரும். நோய்துன்பங்கள் அதிகரிக்கலாம். பயிர் வளர்ச்சியும், விவசாயமும் பெருகும். ஆலயதரிசனமும் ஏற்படும். கேட்டைக்காரர் வசதிகளைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 3, 6.

### தனுசு:

கல்வி உயர்வடையும் புதிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்படும். குடும்பத்தில் பலரின் உதவிகள் ஏற்படும். தூரப் பயணங்களை தவிர்த்துக்கொள்ள வேண்டும். உத்திராடக்காரருக்கு, பணவசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: நீலம்; எண்: 4.
அதிஷ்ட திகதிகள்: 4, 2.

### மகரம்:

பல சிக்கல்கள் தோன்றும். மனதில் தைரியம் தோன்றும். இடமாற்றம் ஏற்படும். எதிலும் திட்டமிட்டுச் செயல்படவும். அரசாங்கத்தால் பல பிரச்சனைகள் தோன்றக்கூடும். பண நிலையில் கவனம் தேவை. அவிட்ட, திருவோணக்காரர் பொறுமையாக இருப்பது நன்று.
அதிஷ்ட நாட்கள்: சனி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: சாம்பல்; எண்:7.
அதிஷ்ட திகதிகள்: 31, 4.

### கும்பம்:

நோய்துன்பங்கள் குறையும். பண வரவு அதிகரிக்கும். உறவினர் நண்பர்களது வரவு அதிகம் இருக்கும். புதிய திட்டங்கள் தீட்டப்படும். வெளியாட்களுடன் சிக்கல்களைத் தவிர்க்கவும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 1, 6.

### மீனம்:

புதிய கல்வி புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். பொருள் சொத்துக்கள் சேரும். மனதில் சந்தோஷ நிகழ்வுகள் இடம்பெறும். ரேவதி, உத்திரட்டாதிக்காரருக்கு வசந்தமான காலம்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 1, 5.

## நில் கவனி முன்னேறு

- ஆப்ரகாம் லிங்கன்: ஏழை விறகு வெட்டியின் மகன், அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார்.
- டாக்டர் சாமுவேல் ஜோன்சன்: வறுமையில் வாழ்ந்த ஒரு புத்தக வியாபாரியின் மகன். உலகம் போற்றும் இலக்கிய மேதையாகவும், ஆங்கில அகராதியின் ஆசிரியருமாக இருந்தார்.

## வறுமை தடை அல்ல...



- ஜோசப் ஸ்டாலின்: ஏழை செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகன், சோவியத் நாட்டின் தலைவராக இருந்தார்.
- ஹென்றி ஃபோர்ட்: உலகம் போற்றும் விஞ்ஞானியாக மாறிய பண்ணைத் தொழிலாளியின் மகன்.
- ஜோன் டிரொக்கஃபெல்லர்: சாதாரண எழுதுவினைஞரின் மகனாகப் பிறந்து ஒரு மாபெரும் பொருளாதார சாம்ராஜ்யத்தையே உருவாக்கியவர்.
- தோமஸ் ஆல்வா எடிசன்: வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த படகு செய்பவரின் மகன், விஞ்ஞானியாக வளர்ந்து அளப்பரிய சாதனைகளை புரிந்தவர்.
- சர்தார் வல்லபாய் பட்டேல்: ஏழை விவசாயியின் மகனாகப் பிறந்து வலிமை மிக்க மைய அமைச்சராக உயர்ந்து 'இரும்பு மனிதன்' எனப் பெயர் பெற்றவர்.
- இசைஞானி இளையராஜா: இந்திய சமுதாயத்தின் மிக ஒடுக்கப்பட்ட ஏழ்மை மிக்க வறிய குடும்பத்தில் பிறந்து, இன்று உலகையே மெய்சிலிர்க்க வைக்கும் இசை காவியங்களை படைத்து வருபவர்.
- டாக்டர் அம்பேத்கர்: தாழ்த்தப்பட்ட வகுப்பிலும் வறுமைக் கோட்டின் கீழும் வாழ்ந்த குடும்பத்தில் பிறந்து, இந்தியக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தை வரைந்த, சட்ட வல்லுனரும் மைய அரசின் அமைச்சராகவும் உயர்ந்தவர்.
- கரிபால்டி: இத்தாலியில் ஒரு மீனவரின் மகனாகப் பிறந்து, பெரும்புரட்சியை ஏற்படுத்தி, அந்த நாட்டை வழி நடத்தியவர்.
- சார்ள்ஸ் டிக்கின்ஸ்: ஒரு லிகிதரின் மகனாக பிறந்து, உலகம் போற்றும் நாவலாசிரியராக உயர்ந்தவர்.
- பெஞ்சமின் பிராங்க்லின்: உலகம் போற்றும் உன்னத விஞ்ஞானியாக மாறிய, ஒரு மெழுகுவர்த்தி வியாபாரியின் மகன் இவர்.
- வில்லியம் ஷேக்ஸ்பியர்: குதிரை லாய மேற்பார்வையாளரின் மகனாகப் பிறந்து, அமரகாவியங்களைப் படைத்த இங்கிலாந்தின் இணையற்ற நாடகாசிரியர்.
- எம்.ஜி.ஆர். சிவாஜி, ரஜினி போன்ற நடிகர்கள் வறுமையில் இருந்து வளமானவர்கள்.

வாழ்வில் உயர வறுமை ஒரு தடையல்ல என்பதற்கு இவர்கள்தான் உதாரணம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## காய்கறிகளைப் பயன்படுத்துவது எப்படி?

**நா**ம் உண்ணும் உணவில் முக்கிய இடம் வகிப்பது அரிசிச்சோறு. அது மட்டும் நம் உடல் வளர்ச்சிக்குப் போதாது. உடல் வளர்ச்சி பெற, இரத்த சுத்தம் பெற பலவகை ஊட்டச்சத்தும், கனிமங்களும் வேண்டும். இவைகள் பச்சைக் காய்கறிகளில் நிறைய உள்ளன.



இந்தக் காய்கறிகளைப் பச்சையாக, வேகவைக்காமல், பொரிக்காமல், வதக்காமல் சாப்பிடுவது நல்லதுதான். ஆனால் அவைகளை அப்படிச் சாப்பிடுவது கஷ்டம் என்பதால், பக்குவப்படுத்தி உணவோடு உட்கொள்கிறோம். இப்படிப் பக்குவப்படுத்தும் பொழுது காய்கறிகளில் உள்ள உயிர்ச்சத்துக்கள் போய்விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

காய்கறிகளை வேகவைக்க, முடிந்தவரை எவர்சில்வர் பாத்திரங்களையே உபயோகிக்க வேண்டும். வாணலியில் இரும்பு வாணலியையும் உபயோகப்படுத்தலாம்.

காய்கறிகளில் பலவிதமான விட்டமின்களும், தாதுப்பொருட்களும் உள்ளன. காய்கறிகளை வாங்கி வந்ததும் முழுவதையும் தண்ணீரில் கழுவி விட்டு, உடனே அரிந்து பதார்த்தங்கள் செய்துவிட வேண்டும். கீரையை அரிவதற்கு முன்பே தண்ணீரில் நன்றாகக் கழுவிவிட வேண்டும்.

அதுபோல் காய்கறிகளையும் தோல் நீக்குவதற்கு முன்பே கழுவிவிட வேண்டும். காய்கறிகளை மிகவும் சின்னஞ்சிறியதாக அரியக்கூடாது. அவ்வாறு அரிந்தால் காய்கறிகளில் உள்ள சத்துக்கள் விரைவாக வெளியேறிவிடும்.

கரட், முள்ளங்கி, வெங்காயம் ஆகியவற்றை இலைகளுடன் வாங்க வேண்டும். அவற்றின் இலைகளில் அந்தந்தக் காய்களில் உள்ளதைவிட சத்துக்கள் அதிகம்.

குழம்பு செய்வதானால் அதில் போடப்போகும் காய்கறிகளை முதலில் தண்ணீரில் வேக வைத்து, பிறகு அதில் புளியைக் கரைத்து விடுங்கள்.

காய்கறிகளை நிறைய தண்ணீர் வைத்து வேக வைக்கக்கூடாது. கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீரில் காய்கறிகளைப் போட்டு வேகவைப்பதே நல்லது.

காய்கறிகளை வேக வைக்கும்போது அப்பச்சோடா உபயோகிக்காதீர்கள். அதனால் ஊட்டச் சத்துக்கள் வீணாகி விடும். பிரஷர் குக்கரில் காய்கறிகளை வேக வைப்பது நல்லது. ஆவி வெளியேறாதபடி வேகும் காய்கறிகளில் சத்துக்கள் அப்படியே இருக்கும்.

ஒரு முறை வேகவைத்த காய்கறிகளை இன்னொரு முறை வேக வைக்கக்கூடாது.

## அழகுக்கு அழகு

**மு**கத்தைப் பராமரிக்கத் தீவிரம் காட்டுபவர்கள் காதுகளைப்பற்றி மட்டும் அக்கறை கொள்வதே இல்லை. எப்போதாவது காதுகளில் அழுக்குச் சேர்ந்து அரிப்பெடுத்தால் ஹேயார் பின், தீக்குச்சி, பென்சில் என்று கையில்கிடைத்த பொருட்களால் காதைக் குடைவதுடன் சரி.

இதனால் மென்மையான அவயவமான காது எப்படிப்பட்ட பாதிப்புக்கு ஆளாகும் என்று பலருக்கும் தெரிவதேயில்லை.

சிலரது காதுகளின் மடல்கள், பின்புற இடுக்குகளில் பலநாள் அழுக்குகள் சேர்ந்து கெட்டிப்பட்டிருக்கும். இது ஒரு வித துர்நாற்றத்தை ஏற்படுத்தும். குளிக்கும்போது காதுகளை சவர்க்காரம் போட்டு மென்மையாகத் தேய்த்து, தண்ணீர் விட்டு நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

குளித்தபிறகு மெல்லிய துணியால் துடைக்க வேண்டும். காது மடல்கள், காதுகளின் பின்புறத்தை நன்கு துடைக்க வேண்டும். காதுகளின் பின்புறத்தில் பன்னீர் தோய்த்த பஞ்சைக் கொண்டு துடைக்க வேண்டும்.

காதுகளுக்குள் அழுக்குகள் சேர்ந்து அரித்துக் கொண்டிருந்தால் பஞ்சு கொண்ட இயர்பட்களைக் கொண்டு மேலோட்டமாகத் துடைத்தெடுக்கலாமே தவிர, குடையக்கூடாது. டாக்டரிடம் காட்டி அழுக்கு நீக்குவதே நல்லது.

## அடுத்த குழந்தை எப்போது?

**இ**ரண்டாவது குழந்தை எப்போது தேவை? இதில் இரண்டு விதக் கருத்துக்கள் உள்ளன.

முதல் குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் இடையே அதிக இடைவெளி தேவை என்று பலர் கருதுகிறார்கள். அதன் மூலம் இரண்டாவது குழந்தை மீது அதிக கவனம் காட்ட முடியும் என்கிறார்கள். கூடவே முதல் குழந்தையும் இரண்டாவது குழந்தையை ஓரளவு கவனிக்கும் நிலை இருக்கும் என்றும் சொல்கிறார்கள்.



இன்னும் சிலர், 'இரண்டு அல்லது மூன்று வயது வித்தியாசம்தான் இரண்டு குழந்தைகளுக்கும் இடையே இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் இரண்டு குழந்தைகளின் மனநிலையிலும் அதிக வேறுபாடு இருக்காது. அவர்களுக்குள் நல்ல ஐக்கியம் இருக்கும்' என்று சொல்கிறார்கள்.

பொதுவாகவே முதல் இரண்டாவது குழந்தைகளுக்கு இடையே 2 முதல் 4 வயது வித்தியாசம் இருந்தாலே போதும்.

சிலர் முதல் தடவை கர்ப்பிணியாகும் போது அதிக எச்சரிக்கையுடன் சத்தான உணவுகள் உண்டு அடிக்கடி டாக்டரிடம் பரிசோதித்தபடி இருப்பார்கள். இரண்டாவது பிரசவத்திற்கு அந்த அளவுக்கு அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. இது தவறு.

இரண்டாவது குழந்தை பிறந்ததும் முதல் குழந்தை 'தன்மீது தாய்க்கு அவ்வளவு அக்கறை இல்லையே' என்று வருத்தப்படக்கூடும். இந்த வருத்தம் குழந்தைக்கு சிறிதளவுகூட வராத அளவுக்கு பெற்றோர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது குழந்தையை முதல் குழந்தை வெறுக்காத அளவுக்கு அவர்கள் நேசத்தை வளர்க்க வேண்டும்.

இரண்டு குழந்தைகள் பெற்ற பின்பு அவர்களை வளர்க்க தாய்க்கு சிரமம் ஏற்பட்டு விடுகிறது. வீட்டு வேலை, குழந்தைகளைக் கவனிப்பது என்று அவள் அல்லாட வேண்டியுள்ளது. வேலை அதிகம் இருந்தாலும் குழந்தைகளிடம் வெறுப்பைக் காட்டாமல் வளர்க்க வேண்டும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GQ

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-11-1999**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது புவனா

**14**

# மோனிக்கா என் மோனிக்கா

**வோ**ஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளைமாளிகையில் வேலை கிடைக்கப்போகிறது என்றதுமே மோனிக்கா மகிழ்ச்சியில் மிதந்தாள்.

வோஷிங்டன் வாழ்க்கை அவளுக்கு புதுமையாக இருந்தது. அவளது கதலரான பிளேய்லர் இடைக்கிடையே அவள் நினைவில் வந்து போனான்.

போட்லண்டைவிட்டு பிரியாவிடை பெற்றபோது மோனிக்கா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

சிநேகிதிகளும் அவளைக் கட்டித் தழுவிக் கொண்டு அழுதுதீர்த்தார்கள். மோனிக்கா அவர்களுக்கு அருமையான சிநேகிதியாக இருந்தாள். அவளைப் பிரிவது அவர்களுக்கும், அவர்களைப் பிரிவது மோனிக்காவும் பெரும் துயரைத் தந்தது.

பிளேய்லரிடம் விடைபெறும்போது மோனிக்கா தவித்துத்தான் போனாள். அவளால் துயரைத் தாங்க முடியவில்லை.

பிளேய்லரை இறுகத் தழுவிக் கொண்டு முத்தமிடப்போகும்போது, "இனிமேல் நாம் சந்திக்கும் வாய்ப்பே இருக்காது," என்று தழுதழுத்த குரலில் கூறினாள்.

அவ்வாறு கூறும்போது அவளுக்கு இதயம் நொருங்கி சுக்குநூறானது போன்று இருந்தது. பிளேய்லர் அவளை மேற்கொண்டு பேசவிடாது தன் உதடுகளால் அவள் உதடுகளை உள்வாங்கிக் கொண்டான்.

அதுவரை அவர்கள் பலமுறை முத்தங்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறார்கள். ஒன்று கலந்து உறவாடியிருக்கிறார்கள்.

ஆனாலும் அன்று முத்தமிட்டபோது இனிமேல் சந்திக்கப்போவதில்லை என்ற உணர்வு மேலோங்கியிருந்தது.

முதல் முத்தத்தைப் போலவே இறுதி முத்தத்தையும் மறக்க முடியாது என்பதை அன்றுதான் மோனிக்கா உணர்ந்துகொண்டாள்.

போட்லண்டைவிட்டு விமானத்தில்தான் மோனிக்கா ஊர் திரும்பினாள். விமான நிலையத்திலும் மோனிக்கா அழுதபடியே இருந்தாள்.

"உனது எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும்!" என்று பிளேய்லர் மோனிக்காவை வாழ்த்தினான்.

விமானப்படிக்கட்டில் ஏறுவதற்கு முன்னர் மோனிக்கா தன் அழுகையை அடக்கிக்கொண்டு பிளேய்லரிடம் கூறினாள்: "இனிமேல் உன்னை என்றுமே சந்திக்க மாட்டேன்!"

பிளேய்லருக்கும் கண்கள் கலங்கிவிட்டன. கண்களுக்கு திரையிட்ட கண்ணீருடன் கையசைத்து இருவரும் விடை பெற்றனர்.



இச் சந்தர்ப்பத்தைப் பற்றி மோனிக்கா பின்னர் இவ்வாறு நினைவுகூருகிறாள்: "விமானப் படிக்கட்டுக்களில் ஏறும்போது கண்களில் கண்ணீர் குளம்போல் நிரம்பி வழிந்தது. பிளேய்லரை விட்டுப் பிரிவதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!"

வோஷிங்டனில் வெள்ளைமாளிகைக்கு செல்லும்வரை மோனிக்காவின் மனதில் அடிக்கடி பிளேய்லர் தோன்றிக் கொண்டிருந்தான்.

வோஷிங்டன் வாழ்க்கையை புதுத் தெம்போடு ஏற்று வாழ வேண்டும் என்று கருதினாள், மோனிக்கா.

பின்னர் இதுபற்றி மோனிக்கா இவ்வாறு கூறினாள்:"எத்தனை தவறான கற்பனை அது!"

மோனிக்காவின் தாயாரும் தனது மகளுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையவேண்டும், அவள் தனக்கேற்ற தகுதியான துணையைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று விரும்பினாள்.

அந்த விருப்பம் பின்னாளில் சிதையப் போவதை அந்தத் தாய் எவ்வாறு அறிவாள்!

வெள்ளை மாளிகையில் இடைநிலைப் பயிற்சியாளராகச் சேர்வதற்கு தனியான பரீட்சை ஒன்று நடத்தப்படும்.

இடைநிலைப் பயிற்சியாளராக சந்தர்ப்பம் கிடைத்தால் சம்பளம் தரப்பட மாட்டாது. இதில் திறமையாக நடந்து கொண்டால் வெள்ளை மாளிகையில் நிரந்தரமாக வேலை கிடைக்கும். சிலவேளைகளில் வேலை கிடைக்காதும் போகலாம்.



ஆனாலும் வெள்ளை மாளிகையில் இடைநிலைப் பயிற்சி பெற்றவர்களுக்கு அமெரிக்காவில் எங்கும் நல்ல மதிப்புக் கிடைக்கும். அரச நிர்வாகத்துறையில் உயர் பதவி கிடைக்கும்.

வோல்டர் காயே இவற்றை மோனிக்காவிடம் கூறியபோது, மோனிக்கா தன் மனதுக்குள் தன்னம்பிக்கையுடன் கூறிக்கொண்டாள்: 'வெள்ளை மாளிகையிலேயே நிரந்தரமாக வேலை கிடைக்கத்தான் போகிறது. கிடைக்க வைப்பேன்!'

மோனிக்காவின் தன்னம்பிக்கை அசாத்தியமானது. அதற்கு பலனும் கிடைத்தது.

வோல்டர் காயே கூறியபடியே அந்தப் பரீட்சைக்கு மோனிக்கா விண்ணபித்தாள். பரீட்சையும் நடைபெற்றது.

'சமூகத்தில் மனிதப் பரிமாணத்தை நிர்ணயிப்பதற்கு அரசாங்க அமைப்புக்களில் உளவியல் நிபுணர்கள் சேர்க்கப்படுவது அவசியம்' என்ற தலைப்பில் மோனிக்கா கட்டுரை எழுதினாள்.

அந்தக் கட்டுரை வெகுவாகப் பாராட்டப்பட்டது. இடைநிலைப் பயிற்சியாளராக சேர்க்கப்பட்டாள்.

இந்தப் பணியும், பயிற்சியும் ஆக ஆறுவாரங்கள் மட்டும்தான். இடை நிலைப் பயிற்சியின்போது தனது திறமையால் முத்திரை பதித்து நிரந்தர என்றெல்லாம் மோனிக்கா அவரைப் பற்றி மனதில் எண்ணியிருந்தாள்.

கிலாரியுடனும், மகளுடனும் கிளின்ரன் புன்னகைத்தபடி காட்சிதரும் படங்களைப் பலமுறை பத்திரிகைகளில் பார்த்திருக்கிறாள். 'அளவான குடும்பம்' என்று வியந்திருக்கிறாள்.

மிகவும் உயரத்தில் வைத்து எண்ணிய ஒருவரைப்பற்றி தவறாக அறியும்போது நம்புவதற்கே கஷ்டமாக இருக்கும்.

மோனிக்காவுக்கும் தன் சக ஊழியர்களான பெண்களது வம்புப்பேச்சுக்களை நம்பமுடியாமல் இருந்தது.

கிளின்ரனைப் பற்றி மிக கிளுகிளுப்பான

## வெள்ளை மாளிகையில்

வேலையைப் பெற்றுக்கொள்ளும் உறுதியோடு மோனிக்கா பணியில் சேர்ந்தாள்.

### கிசு கிசு

வெள்ளை மாளிகைக்குள் புகுந்து சில நாட்களுக்குள் அதன் சூட்சுமங்களை மோனிக்கா புரிந்துகொண்டாள்.

அங்கு பணியாற்றும் பெண்கள் முதலில் மோனிக்காவுடன் நெருங்கிப் பழகவில்லை. அவர்கள் தமக்குள் ஏதோ இரகசியம் பேசிக் கொள்வார்கள். கலகலவென்று சிரிப்பார்கள். மோனிக்காவை ஏதோ வேற்று கிரகவாசியைப் பார்ப்பது போன்றே நோக்கினார்கள்.

மோனிக்கா இவற்றால் சோர்ந்து போய் விடவில்லை. ஒருவார காலத்திற்குள் மெல்ல மெல்ல அவர்களோடு நெருக்கமாகிக் கொண்டாள்.

இரண்டாவது வாரத்தில் அவர்கள் மோனிக்காவை தங்களில் ஒருத்தியாக ஏற்றுக் கொண்டனர்.

மோனிக்காவின் முன்பாகவே அவர்கள் கதைகளையெல்லாம் அவர்கள் பேசுவார்கள். கேட்பதற்கு சுவையாக இருக்கும். மோனிக்காவும் இரசிப்பாள். நம்பத்தான் முடியவில்லை.

"பெண்களைக் கண்டால் போதும், அதுவும் உதடுகள் நளினமான பெண்களாக இருந்தால் போதும் 'மிஸ்டர் கே' விழுந்துவிடுவார்" என்று கூறினார்கள். கிளின்ரனை 'மிஸ்டர் கே' என்றுதான் அழைத்துக்கொண்டார்கள்.

### காணும் ஆர்வம்

முதலில் நம்பமறுத்த மோனிக்காவுக்கு படிப்படியாக கிளின்ரன் சபலஸ்தர்தானோ என்ற சந்தேகம் வந்துவிட்டது.

வெள்ளை மாளிகையில் இடைநிலை பயிற்சியாளராகச் சேர்ந்து மூன்று வாரங்களாகிய பின்னரும் கிளின்ரனை மோனிக்கா நேரில் காணவில்லை.

நேரில் காணவேண்டும் என்ற ஆர்வம் அவளுக்குள் ஏற்பட்டிருந்தது.

கிளின்ரன் பற்றிய கிளிகிளுப்பான கதைகள் அவரைப் பார்க்கவேண்டும் என்ற உந்துதலை



வெள்ளை மாளிகையில்

இப்போது கிசுகிசுக்களையும், வதந்திகளையும் பேச ஆரம்பித்தனர்.

அவர்களது கிசு கிசுக்களின் கதாநாயகன் வேறு யாருமல்ல, பில் கிளின்ரன்தான்.

மோனிக்கா முதலில் திகிலடைந்தாள். அமெரிக்காவின் முதல் குடிமகனான அந்தப் பெரிய மனிதரை தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும்தான் மோனிக்கா பார்த்திருக்கிறாள்.

மிகப் பெரிய மனிதர். அழகான மனைவி, அன்பான மகள் ஆகியோருடன் வாழும் அற்புதமான தலைவர் ஏற்படுத்தியது.

கிளின்ரனின் படம் ஒன்று அவள் பணியாற்றும் பிரிவில், அவளுக்கு நேர் எதிரே சுவரில் தொங்கியது.

அப்படத்தில் இருக்கும் கிளின்ரன் தன்னையே பார்ப்பதுபோன்றும், தன்னை நோக்கி புன்னகைப்பது போன்றும் மோனிக்காவுக்கு தோன்றியது.

கிளின்ரனை இப்போது புதுக் கோணத்தில், தான் அறிந்த கிசு கிசுக் கதைகளோடு பார்த்தபோது, கிளின்ரனின் கண்களிலும், புன்னகையிலும் பெண்களைக் கவரும் காந்த சக்தி இருப்பதாகத் தோன்றியது.

மோனிக்கா உளவியல் படிப்பில் பட்டம் பெற்றவள் அல்லவா? அவள் மனதில் கிளின்ரனது படத்தை பார்த்ததும் தோன்றியது, "இவரை வளைப்பது சுலபம்!" அதற்கான நாளுக்காக காத்திருப்பதா? தானாக முயற்சிப்பதா என்பதைத் தான் அவளால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

(வருவாள்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### களுவாஞ்சிக்குடி வாசகிக்கு அதிஷ்டம்!


| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | எம். கிரிஜா, பழம் தோட்டம், களுவாஞ்சிக்குடி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





சக்தி தனக்கே கருவி யாக்கு-உயர்
சாத்திரங்கள் யாவும் நன்கு தெரியும்-
மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-நல்ல
சத்திய விளக்கு நித்தம் எரியும்!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# தனக்கு வந்தால் தெரியும்

தீபன் மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவன். ஒருநாள் அவன் கிளி ஒன்றைப் பிடித்து வந்தான். அதைக் கூட்டில் அடைத்து வளர்க்கலானான்.

இதைக் கண்ட தீபனின் தாய், "மகனே! கிளியைக் கூண்டில் அடைத்து வளர்க்கக்கூடாது. அது பாவம்!" என்று சொன்னாள்.

ஆனால் தீபன் அதைக் கேட்கவில்லை. இதைக் கண்டு வருந்திய தீபனின் தாய்,

"பாவம் இந்தக்கிளி. இது தன் பெற்றோரைப் பிரிந்து வருந்தும். பேசாமல் கூட்டைத் திறந்து கிளியை விட்டுவிடு!" என்று சொன்னாள்.

அதற்குத் தீபன், "அம்மா! கிளிக்கு இங்கே என்ன குறைச்சல்? சாப்பிடுவதற்கு நல்ல பழம், குடிப்பதற்கு நீர், இளைப்பாறுவதற்கு நல்ல ஊஞ்சல் இந்தக் கூண்டில் உள்ளது. துணைக்கு நான் இருக்கிறேன். இது போதாதா?" என்று சொன்னான்.

தீபனின் தாய் அதற்கு ஒன்றும் சொல்லாமல், பேசாமல் சென்று விட்டாள்.

சில நாட்கள் கடந்தன. அன்று ஞாயிற்றுக்கிழமை. தீபன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனது தூக்கத்தைக் குழப்பாமல் ஒரு தட்டில் காலைச் சாப்பாடு, பால் எல்லாவற்றையும் வைத்து விட்டு சந்தைக்குச் சென்று விட்டாள் அவன் தாய்.

ஒரு மணி நேரம் கழித்து, சந்தையில் இருந்து தீபனின் தாய் திரும்பி வந்தாள். அப்போது தீபன் அழுது கொண்டிருந்தான்.

தீபனின் தாய் ஓடி வந்து, கதவைத் திறந்ததும், தாயைக் கட்டிப்பிடித்து அழுதான்.

"ஏனம்மா என்னைத் தனியாக விட்டு, வீட்டைப் பூட்டி விட்டுப் போனீர்கள்?" என்று கேவியபடி கேட்டான் தீபன்.

அதற்கு அவனது தாய், "அதனால் என்ன? உனக்குத்தான் காலைச் சாப்பாடு, பால் எல்லாம் வைத்து விட்டுப் போனேன். விளையாட விளையாட்டுச் சாமான்கள் எல்லாம் இருக்கிறது. துணைக்கு உன் கிளிகூட இருக்கிறது. இது போதாதா?" என்று கேட்டாள்.

"இவ்வளவு இருந்தும் என்னுடன் நீங்கள் இல்லாமல் இந்த வீட்டிற்குள் அடைந்து கிடக்க என்னால் முடியாது அம்மா!" என்றான் தீபன்.

"பார்த்தாயா மகனே! உன்னைப் போலத்தானே இந்தக் கிளியும், அதனுடைய பெற்றோர் இல்லாமல், கூண்டில் அடைபட்டுக் கிடக்க எவ்வளவு வேதனையாக இருக்கும்," என்று சொன்னாள் தீபனின் தாய்.

தீபனுக்கு அப்போதுதான் தான் செய்த தவறு புரிந்தது. கிளிக்கூண்டை வெளியே தூக்கிக் கொண்டு போய்க் கூண்டைத் திறந்தான். கிளி சந்தோஷமாக சிறகடித்துப் பறந்து சென்றது.

தீபனின் தாய் அவனை வாரி அணைத்து முத்தமிட்டாள்.



## அதிசயம் - ஆனால் உண்மை!



சீன நாட்டைச் சேர்ந்த 13 ஜோடிகள் எவரெஸ்ட் சிகரத்தின்மீது 5 ஆயிரத்து 200 மீட்டர் உயரத்தில் ஏறி நின்று கொண்டு, அந்த இடத்தில் திருமணம் செய்து கொண்டனர். உலகிலேயே எவரெஸ்ட் சிகரத்தின்மீது திருமணம் செய்த முதல் ஜோடிகள் இவர்கள்தான்.

லக்ஸம்பேர்க்கைச் சேர்ந்த ஜோர்ஜ் கிறிஸ்டியனின் பற்கள் மிகப் பலம் வாய்ந்தவை. 1998ம் ஆண்டு சிங்கப்பூரில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றின் நடுவே, மேசை மீது ஒரு பெண்ணை உட்கார வைத்துப் பற்களால் கடித்து மேசையைத் தூக்கி சாதனை படைத்தார்.





அந்தமான் தீவுகளில் வசிக்கும் பழங்குடியினர் சூரியன் உதிக்கும்போதும், நிலவு தோன்றும் போதும் மௌனமாக இருப்பார்கள். சூரியன், நிலவு தோன்றும் போது பேசினால் ஏதாவது தீங்கும் ஏற்படும் என்ற பயத்தினாலேயே மௌனமாக இருக்கிறார்கள்.

## பெரிய தேவாலயம்



உலகிலேயே மிகப்பெரிய தேவாலயம் எது தெரியுமா?

வத்திக்கான் நாட்டில் உள்ள புனித பீட்டர் தேவாலயம்தான் உலகிலேயே மிகப் பெரிய தேவாலயம் ஆகும். இத்தேவாலயம் 1506ம் ஆண்டு கட்டத் தொடங்கி 1614ல் கட்டி முடிக்கப்பட்டது. இது கட்டப்பட்டு பல வருடங்களானாலும் இன்னும் மங்காப் பொலிவுடன் காணப்பட்டு வருகின்றது.

இத்தேவாலயத்தின் நீளம் 218 மீட்டர். இது அமைந்திருக்கும் நிலத்தின் மொத்தப் பரப்பளவு 23 ஆயிரம் சதுரமீட்டர்கள் ஆகும்.

## ரோட்டரி சங்கத்தை உருவாக்கியவர்



சமுதாயப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு இயங்கிவரும் அமைப்புக்களின் ஒன்றுதான் 'ரோட்டரி சங்கம்' (ROTARY CLUB). 159 நாடுகளில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது இச்சங்கம்.

இந்த அமைப்பை உருவாக்கியவர் யார் என்று தெரியுமா? அமெரிக்காவைச் சேர்ந்த போல் ஹாரிஸ் என்ற வழக்கறிஞர்தான் இதை உருவாக்கினார். 1905ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ம் திகதி இவரால் சிக்காக்கோ நகரத்தில் தொடக்கப்பட்டது.

அன்னை தெரேசா, தோமஸ் அல்வா எடிசன், வோல்ட் டிஸ்னி, எட்மண்ட் ஹிலாரி, வின்ஸ்டன் சேர்ச்சில் போன்ற பிரபலங்கள் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.11.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **320**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 318

**பரிசுக்குரியவர்:**
என்.எம். பாத்திமா நுஸ்ஹா,
மட்/ அறபா வித்தியாலம், ஏறாவூர்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். ரேகா, கல்வியற் கல்லூரி, வவுனியா. | ஷி:ப்னா முஸம்மில், அமீனா பெண்கள் தேசிய பாடசாலை, மாத்தளை. |
| அகீலா எஸ். ஜுஹார், புனித ஜோசப் மகளிர் மகா வித்தியாலயம், கிரேண்பாஸ். | சந்திரமோகன் கிஷாந், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| ஆறுமுகம் கீர்த்தனா, தமிழ் வித்தியாலயம், தலவாக்கலை. | பாத்திமா ரி:ப்கா இப்றாஹீம், சேர் ரஸிக் பரீட் மகா வித்தியாலயம், பண்டாரவளை. |
| எம். இர்சாத், நாவின்ன கனிஷ்ட வித்தியாலயம், உலுவிடிகே, காலி. | எம். ஜனார்த்தன், இந்துக் கல்லூரி, வாழைச்சேனை. |
| எனோஸ் பிரவீன் ரெஜினோல்ட், சென் அந்தனிஸ் மகா வித்தியாலயம், கொச்சிக்கடை. | எஸ். நிக்ஷன், மன்/ முருங்கன் ம.ம.வி. மன்னார். |

## பெயர்கள்

பெயர்கள் பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள் வருமாறு:

- ஆங்கிலம் பேசும் நாடுகளில் அதிகம் சூட்டப்படும் பெயர்
  ஸ்மித்.
- உலகில் 10 கோடி பேர்களுக்கு மேல் வைக்கப்பட்டுள்ள ஒரே பெயர்
  சாங் (CHANG).
- சாங் (CHANG) என்ற பெயரை அடுத்து அதிகமானோருக்கு வைக்கப்பட்டுள்ள ஒரே பெயர்
  முஹமட்
- தென்னமெரிக்க பழங்குடி மக்கள் இறந்தவர்களது பெயர்களை தங்கள் குழந்தைகளுக்கு வைப்பதில்லை.
- மேற்கு கோளார்த்தில் வாழும் மக்கள் வைத்துக் கொள்ளும் பெயர்கள்
  ஓ(O), ஈ(E), யு(U).
- வடக்கு பிரேஸிலில் வாழும் 'சணமாக்கள்' இனத்தவர் தமது முதல் குழந்தைக்கு 'பூமாபி' என்று பெயர் வைக்கின்றனர். இந்தப் பெயரை வைத்தால் கெட்ட ஆவிகள் தாக்காது என்பது அவர்கள் நம்பிக்கை.
- உலக அளவில் அதிக அளவில் வைக்கப்படும் ஆண்களின் பெயர்கள்
  ஜேம்ஸ், எட்வேர்ட், தோமஸ், வில்லியம், அலெக்ஸாண்டர்.
- உலகில் அதிக அளவில் வைக்கப்படும் பெண்களின் பெயர்கள்
  மேரி, எலிசபெத், அலிஸ், லூஸி, சார்லோட்.
- இங்கிலாந்தில் பெரும்பாலானவர்களுக்கு வைக்கப்பட்டுள்ள முதல் 5 பெயர்கள்,
  ஸ்மித், ஜோன்ஸ், வில்லியம்ஸ், பிரவுண், டெய்லர்.
- அமெரிக்காவில் அதிகம் பேர்களுக்கு வைக்கப்பட்டுள்ள முதல் 5 பெயர்கள்.
  ஜோன்சன், ஸ்மித், ஜோன்ஸ், வில்லியம்ஸ், பிரவுண்.
- கிறிஸ்தவர்களில் பெண்களுக்கு அதிகம் வைக்கப்பட்டுள்ள பெயர்கள்
  அலிஸ், சார்லோட், ஸோபி, எம்மா, எமிலி.
- கிறிஸ்தவர்களில் ஆண்களுக்கு அதிகம் வைக்கப்பட்டுள்ள பெயர்
  எட்வேர்ட், வில்லியம், தோமஸ், ஜேம்ஸ்.

## வயதானாலும் பற்கள்



மனிதர்கள் எல்லோருக்குமே குழந்தையாய் இருக்கும்போது பற்கள் முளைக்கின்றன. பின் சிறுவர்களாக வளரும்போது பற்கள் விழுந்து மறுபடி முளைக்கின்றன.

ஒரு முறை விழுந்து மறுபடி முளைத்த பின் மீண்டும் விழுந்தால் பற்கள் முளைக்காது. செயற்கைப் பற்கள்தான் கட்டிக் கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்கு மட்டுமன்றி அநேக விலங்குகளுக்கும் இப்படித்தான். ஆனால் முதலைகளுக்கு மட்டும் இந்தப் பிரச்சனை இல்லை. இவற்றுக்கு எத்தனை தடவைகள் பற்கள் விழுந்தாலும் மறுபடி முளைத்து விடும். முதலைகள் வயதானாலும் பற்களுடன்தான் இருக்கும்.

## எப்படித் தெரியுமா?



புயல் அபாயம் வரப்போகிறது என்பதை முன்கூட்டியே வானொலி, தொலைக் காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம் வானிலையாளர்கள் கூறிவிடுவார்கள்.

புயல் அபாயம் வருவதை முன்கூட்டியே சொல்வது எப்படி என்று தெரியுமா?

காற்றின் வேகத்தை அளக்கும் கருவியான 'அனிமா மீட்டர்' என்ற கருவி மூலம் தான் கண்டுபிடித்துச் சொல்கிறார்கள்.

'அனிமா மீட்டர்' சுற்றும் வேகத்திற்கு ஏற்ப இலேசான மின்சாரம் உற்பத்தியாகிறது மின்சாரத்தின் அளவைக் கணித்து புயல் அபாயம் வரப்போவதைச் சொல்லி விடுவார்கள்.

## ஏன் தெரியுமா?



இலக்கத்தை ஆங்கிலத்தில் Number (நம்பர்) என்று சொல்கிறோம். ஆனால் நம்பர் என்பதை சுருக்கமாக எழுதும்போது 'No' என்றுதான் எழுதுகிறார்கள்.

Number என்ற ஆங்கில வார்த்தையை 'Nu' என்றல்லவா சுருக்கி எழுத வேண்டும் என்று நினைப்பீர்கள். 'Nu' என்று எழுதாமல் 'No' என்று எழுதுவது ஏன் என்று தெரியுமா?

காரணம் இதுதான்- Numero (நியூமெரோ) என்ற சொல்லில் இருந்துதான் Number என்ற சொல் வந்தது. Numero என்ற சொல்லில் உள்ள முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் இணைத்து 'No' என்று சுருக்கி எழுதப்படுகிறது.

## திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 02

கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா, ஏர்போர்ட் ஆபீஸர் ருத்ராவோடும், பொலிஸ் கமிஷனர் லட்சுமி பதியோடும் விமான நிலையத்தில் இருந்த ஓர் இரகசிய அறையில் உட்கார்ந்து, ஆலோசனை என்கிற பெயரில் உஷ்ண மான விநாடிகளில் இருந்தார்.

"ப்ரஸ் மீட்டில் இப்போது எத்தனை நிருபர்கள் இருக்கிறார்கள்...?"

"மொத்தம் இருபத்தி மூன்று பேர்."

"இதில் பெண்கள் எத்தனை பேர்...?"

"பதினொரு பேர்..."

"அந்தப் பதினொரு பேரில் ஒருத்தி தான் மனிதவெடிகுண்டாய் மாறி நிருபர் என்கிற போர்வையில் உள்ளே நுழைந் திருக்கிறாள்."

"ஆமாம்..."

"அவள் எந்த விநாடியும், ரிமோட் கண்ட்ரோலை இயக்கலாம். அவள் எந்த விநாடிக்காகக் காத்துக் கொண்டி ருக்கிறாள் என்பதும் நமக்குத் தெரியாது. ப்ரஸ்மீட் நடந்து கொண்டிருக்கும் அறையில், இப்போது நுழைந்து பொலிஸ் நடவடிக் கையை மேற்கொள்வதும் உசிதம் இல்லை..."

கமிஷனர் லட்சுமிபதி குறுக்கிட்டார்.

"மிஸ்டர் ஆச்சார்யா! எனக்கு ஒரு யோசனை."

"சொல்லுங்க..."

"கமாண்டோ விங் என்று சொல் லப்படும் அதிரடிப்படையைச் சேர்ந்த பதினொரு பேர் கொண்ட ஒரு க்ரூப்பை, ப்ரஸ்மீட் நடந்துகொண்டிருக்கும் அறைக் குள் அனுப்பி வைத்து அந்தப் பெண் நிருபர்களை அசைய விடாமல் திடீ ரென்று மடக்கினால் என்ன?"

ஏர்போர்ட் ஆபீஸர் ருத்ரா அந்த யோசனைக்கு மறுப்புத் தெரிவிக்கும் பாணியில் தலையைத் தீர்க்கமாய் ஆட்டினார்.

"நோ...ஸார்... இந்த யோசனை ரிஸ்கியான ஒன்று. மனித வெடிகுண்டாய் மாறி ப்ரஸ் மீட்டில் உட்கார்ந்திருக்கும் பெண், பொலிஸ் நடவடிக்கைகளை ஒவ் வொரு விநாடியும் உன்னிப்பாய்க் கவ



னித்துக் கொண்டிருப்பாள். இந்தப் பிரச் சனையை வேகத்தோடு அணுகக்கூடாது. விவேகத்தோடுதான் கையாள வேண்டும்."

"சரி என்ன செய்யலாம் என்று நீங்கள் சொல்லுங்கள்..."

அவர் யோசிக்க ஆரம்பித்தார்.

வெளியே அரும்பிக்கொண்டிருக் கும் பரபரப்புத் தெரியாமல் ப்ரஸ்மீட் உற்சாகமாய் நடந்துகொண்டிருந்தது. மூத்த பத்திரிகையாளர் ஒருவர் பங்கஜ், நரேஷிடம் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"அடுத்த மாதம் நம் இந்திய மண் ணில் நடைபெறவுள்ள உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு எப்படியுள்ளது?"

"மிகவும் பிரகாசமாக உள்ளது!"

"கோப்பையை வெல்வீர்களா?"

"நிச்சயமாய்!"

"பங்குபெறும் நாடுகளில் தென் ஆபிரிக்காவும் பாகிஸ்தானும் நம் இந்திய அணிக்கு சிம்ம சொப்பனங்களாக இருக் கும் என்று ஒரு ஆங்கில நாளேடு சொல்லியுள்ளதே...?"

நரேஷ் சிரித்தான்.

"அதெல்லாம் பத்திரிகைக்காரர்கள் உருவாக்கும் மாயை. இந்தப் பூச்சாண்டி காட்டும் வேலை, இந்திய அணியிடம் பலிக்காது. எந்த ஒரு அணியையும் பார்த்து இந்திய அணி மிரளாது. அதே நேரத்தில் எதிராளியின் பலத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிடாது. பாகிஸ்தான் அணிக்கோ, தென் ஆபிரிக்க அணிக்கோ நம் இந்திய அணி சோடை போகாது.."

ஒருபெண் நிருபர் இடைமறித்துக் கேட் டாள்.

"நீங்கள் இப்படிச் சொன்னாலும் பாகிஸ்தான் அணிக்கு எதிராக லாகூரில் நடந்த டெஸ்ட் மேட்ச்சில் உங்கள் பேட்டிங் கும், பங்கஜ்ஜின் சுழற்பந்து வீச்சும் எடு படாமல் போனதுக்கு என்ன காரணம்?" நீங்கள் வெறும் ஆறு ரன்னுக்கு அவுட்டாகி விட்டீர்கள். பங்கஜ் ஐம்பது ஓவர் வீசி ஒரு விக்கெட்கூட எடுக்காமல் பாகிஸ்தான் அணிக்கு இருநூறு ரன்கள் வாரிக் கொடுத் தார். இதற்கு உங்கள் பதில் என்ன...?

நரேஷ் அண்ணாந்து சிரித்துவிட்டுத் தொடர்ந்தான்.

"முதலில் நீங்கள் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். கிரிக்கெட் என் பது ஒரு லக்கி கேம். பௌலிங் செய்யப்பட்ட ஒரு பந்து, பேட்ஸ் மேனால் ஓங்கியடிக்கப்படும் போது, அந்தப் பந்து சிக்ஸர்க் குப் போகுமா? கேட்ச்சுக்குப் போகுமா? என்பது தெரியாது. ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர்களும் அடிக்கப்படலாம். ஆறு விக்கெட்டுக்களும் விழலாம். பந்தை பவுண்டரிக்கு அனுப்பிவிட லாம் என்று தான் பேட்ஸ்மேன் அடிக்கிறார். இந்தக் கிரிக்கெட் ஆட்டத்தில் சில துரதிர்ஷ்ட விநாடிகளை எந்த ஒரு கிரிக்கெட் அணியும் தவிர்க்க முடியாது. இந்த விளையாட்டின் பலமும் அதுதான்; பலவீனமும் அதுதான்."

நரேஷ் சொல்லிக்கொண்டிருக்கும் போதே பங்கஜ் குறுக்கிட்டுச் சொன்னான்:

"இப்படியொரு நிச்சயமற்ற தன்மை தான் இந்த விளையாட்டுக்குக் கோடிக்கணக் கான ரசிகர்களைப் பெற்றுக் கொடுத்திருக் கிறது. கிரிக்கெட் விளையாட்டின் வெற்றி தோல்விகளை சமமாய் ஜீரணிக்கிற பக்குவம் விளையாட்டு வீரர்க்கு மட்டுமல்ல... விளை யாட்டைப் பார்க்கின்ற ரசிகர்களுக்கும் வர வேண்டும்."

அந்தப் பெண் நிருபர் மறுபடியும் கேட்டாள்.

"மிஸ்டர் நரேஷ்...! கிரிக்கெட்டில் அரசியல் நுழைந்து விட்டதாக முன்னாள் கிரிக்கெட் காப்டன் ஒருவர் சொல்லியுள்ளார். இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன...?"

"அவருடைய கருத்தோடு எனக்கு உடன்பாடு கிடையாது. நம் நாட்டில் கிரிக் கெட் இன்னமும் கிரிக்கெட்டாகவேதான் இருக்கிறது..."

"இப்போது ஒரு முக்கியமான கேள்வி"

"கேளுங்கள்.."

"இந்த உலகக்கோப்பை கிரிக்கெட் போட் டியில் பங்கெடுப்பதற்காக பத்தாண்டுகள் கழித்து பாஸ்வேனியா அணி இந்தியாவுக்கு வர உள்ளதே... அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா...?"

"இதில் கருத்துச் சொல்ல என்ன இருக்கிறது? பாஸ்வேனியா நாடு ஒரு காலத் தில் நம் நாட்டோடு பகையுணர்வு கொண்டி ருந்தது. ஐ.நா.சபை மூலமாக நமக்கு வேண் டாத தொல்லைகளைக் கொடுத்து வந்தது. இப்போது இரு நாடுகளுக்கு இடையே உறவு சீர்பெற்று வருகிறது.

இந்த நிலையில் பாஸ்வேனியா நாட்டு கிரிக்கெட் அணி, நம் இந்தியாவில் விளையாட வருவது சந்தோஷத்தைக் கொடுக்கிறது. இருநாடுகளும் பகை நீங்கி உறவை வளர்த் துக்கொள்ள இந்தக் கிரிக்கெட் போட்டியை உபயோகித்துக்கொள்ள வேண்டும்."

"பாஸ்வேனியா நாட்டு கிரிக்கெட் அணியை இந்திய மண்ணில் விளையாட அனுமதிக்கமாட்டோம்னு சில எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்துள்ளதே..?"

நரேஷ் சிரித்தான்.

"அந்தக் குரல்கள் அடங்கிவிடும்...!"

"அவர்களுடைய அறிக்கைகளைப் பார்த் தால் அடங்கிப் போகிற மாதிரித் தெரிய வில்லையே..? பாஸ்வேனியா நாட்டு அணி, இந்திய மண்ணில் கால் வைத்தால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று முன்னாள் மந்திரி ஒருவர் பேசியிருக்காரே?"

"போட்டி நாள் பக்கத்தில் வர வர இது மாதிரியான சலசலப்புக்கள் எல்லாம் காணா மல் போய் விடும் என்பது என் நம்பிக்கை!"

அதுவரைக்கும் எந்தக் கேள்வியும் கேட்காமல் ஓரமாய் ஒதுங்கி உட்கார்ந்திருந்த அந்த ஒடிசலான பெண் நிருபர் தயக்கமாய் எழுந்து நின்று கேட்டாள்.

"ஒரு பர்ஸனல் கேள்வி...கேட்கலாமா?"

அங்கிருந்த நிருபர்கள் எல்லோருமே அவளையே பார்த்துக் கொண்டிருக்க, அவள் மெல்லிய குரலில் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

நெற்றியில் மின்னும் வியர்வையோடு ஏர்போர்ட் ஆபீஸர் ருத்ரா, பொலிஸ் கமிஷனர் லட்சுமிபதியையும் கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவையும் மாறி மாறிப் பார்த்தபடி சொன்னார்.

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"சொல்லுங்க.."

"பிரஸ்மீட்டில் இருக்கிற எல்லார்க்கும் குளிர்பானம் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அந்தக் குளிர்பானத்தில் கொஞ்சம் அதிகப்படியான மயக்க மருந்தைக் கலந்து கொடுத்துவிட்டால் போதும். அதைச் சாப்பிட்ட ஐந்து நிமிட நேரத்திற்குள் தன் னிலை இழந்து சாய்ந்து விடுவார்கள். எல் லோரும் சுயநினைவு இழந்ததும் பெண் பொலிஸார் மூலமாக பெண் நிருபர்களை வேறு ஒரு அறைக்குக் கொண்டு வரச்செய்து சோதனை செய்து பார்த்தால் மனித வெடி குண்டு யார் என்பதைக் கண்டுபிடித்து விட லாம்.."

சேர்மன் ஆச்சார்யா தயக்கமாய் லட்சுமி பதியைப் பார்த்தார்.

"மிஸ்டர் ருத்ரா சொல்வது சாத்தியமா?"

"சாத்தியம்தான்... ஆனால் குளிர்பானங் களை முதலில் பெண் நிருபர்களுக்குக் கொடுத்து அவர்கள் குடிக்க ஆரம்பித்த பின்னால்தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இந்தத் திட்டத்தில் இது முதல்படி. இரண்டாவது படியாக குளிர்பானத்தில் மயக்க மருந்து கலக்கப்பட்ட விஷயம் அந்தக் குளிர்பானங்களை சப்ளை செய்யும் ஊழியர் களுக்குக் கூடத் தெரியக்கூடாது. இந்த இரண்டு விஷயங்களை நாம் துல்லியமாகக் கடைப்பிடித்தால் இந்தத் திட்டத்தில் நமக்கு வெற்றி கிடைக்கும்..."

"குளிர்பானங்கள் எந்த அறையில் இருக் கிறது?"

"வாருங்கள்..."

ருத்ரா கூட்டிக்கொண்டு போனார். வி.ஐ.பி. அறைக்குப் பக்கத்திலேயே ரிஃப்ரெஷ் மெண்ட் அறை தெரிய, உள்ளே நுழைந் தார்கள்.

குளிர்பான பாட்டில்களை ப்ளாஸ்டிக் பெட்டிகளில் சிரத்தையாய் அடுக்கி வைத்துக் கொண்டிருந்த இரண்டு பேர் அவர்களைப் பார்த்ததும் பவ்யமாய் எழுந்து நின்றார்கள்.

ருத்ரா அந்த சிப்பந்தியிடம் கேட்டார்.

"ப்ரஸ் மீட்ல இருக்கிறவங்களுக்கு ட்ரிங்க்ஸ் இன்னும் தரலையே..?"

"இல்லை ஸார்..." என்று ஒருவன் தலையாட்ட, மற்றவன் சொன்னான்: "நீங்க வந்து சொல்றதுக்காகத்தான் காத்துட்டிருக் கோம் ஸார்..."

"சரி..! நீங்க ரெண்டு பேரும் கஃபேடேரி யாவுக்குப் போய் அங்கே இருக்கிற வேலைகளைப் பாருங்க. இந்த கூல்ட்ரிங்க்ஸ் வேலையை மாணிக்கம் பார்த்துக்கட்டும்."

"எஸ்...ஸார்..."

"மாணிக்கம் எங்கே...?"

"இப்பத்தான் ஸ்டோர்ஸுக்குப் போனான் ஸார்..."

"அவனை வரச் சொல்லு"

அவர்கள் தலையசைத்துவிட்டு வெளி யேற, ருத்ரா பரபரவென்று செயல்பட்டார்.

தன்னிடம் இருந்த சாவிக்கொத்தை எடுத்து சுவரோரமாய் நிறுத்தி வைத்திருந்த கோத்ரேஜ் பீரோ ஒன்றைத் திறந்தார்.

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

மேலும் இரண்டு சாவிகள் மூலம் உள்ளறை யைத் திறந்து ஒரு பால்யூத்தின் டப்பாவை எடுத்துத் திறந்தார்.

உள்ளே-


மைதாவைப் போல் வெண்மையாய் தூள் தெரிய, லட்சுமிபதிக்கும், ஆச்சார்யா வுக்கும் காட்டினார் ருத்ரா.

"இது இனிப்புச் சுவை ஏற்பட்ட மெதினால் பௌடர். குளிர்பானத்தில் ஒரு சிட்டிகை கலந்தால் போதும். பாதி பாட்டில் காலியால் இருக்கும்போதே குடித்த நபர்க்கு தலை சாய்ந்து விடும்..."

ஆச்சார்யாவும், லட்சுமிபதியும் அந்தப் பௌடரை வியப்பாய் தொட்டுப் பார்த் தார்கள். (தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர்.சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**



# தர்ம யுத்தம் 12

**தர்மயுத்தம் பிறந்த கதை**

"அத கரெக்டா கொடுக்க வேண்டியது என்னோட கடமை. அவர் வேலைக்கு வர்றாரா, இல்லையான்னு கவலைப்பட வேண்டியது நீங்கதான்!" என்றார்.


இந்தக் காலத்தில் அந்த மாதிரி ஒரு தயாரிப்பாளரைப் பார்ப்பது அரிது. அவரைக் 'கஞ்சன்' என்பார்கள். என்னைப் பொருத்த வரையில் அவர் சிக்கனமானவர், ஆனால் நேர்மையானவர்.

நான் அந்தப் படத்தை இயக்க ஒப்புக் கொண்டேன்.

"கதாநாயகி ஸ்ரீதேவி, ஹீரோ யார்?" என்று கேட்டேன். "ரஜினி காந்த்" என்றார்.

ரஜினி அப்போது மிகவும் பரபரப்பாக, வேகமாக வளர்ந்து கொண்டிருந்த நேரம். "கதை முடிவு செய்துவிட்டீர்களா?" என்று கேட்டேன். "நீங்கள்லாம் இருந்துதான் முடிவு செய்யணும். ரஜினி சார்கிட்ட நான் சொல்லிட் டேன், 'நீங்க தான் டைரக்டர்'ன்னு 'உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்'னு சொன்னாரு."

நான் உடனே, "அவர் எங்க இருக் கிறார்?" என்று கேட் டேன்.



ஏ.வி.எம். ஸ்டு டியோவில் ஷூட்டிங் என்றார். அன்று முரு காலயா ஸ்டுடியோ வில் வேறு ஒரு படத்திற்கு ஷூட்டிங் இருந்தது. எனவே, "என் படப்பிடிப்பின் இடைவேளையில் நான் ஏவி.எம்.ஸ்டு டியோவில் வந்து ரஜினியைப் பார்க்கி றேன்" என்று சொன் னேன். "சரி" என்று அவரும் போய்விட் டார்.

### வந்தார் ரஜினி

அன்று மத்தியானம், நான் முருகாலயா ஸ்டுடியோவில் ஷூட்டிங்கில் இருந்தபோது, திடீரென்று ஜாக்பாட் சீனிவாசன் வந்தார். "என்ன விஷயம் சார்?" என்று கேட்டேன். "இல்ல, நீங்க சாயந்திரம் ரஜினி சாரை பார்க்க வர்றதா சொன்னேன். அதற்கு அவர், 'டைரக்டர் சார் இங்க வரவேண்டாம். முரு காலயாவில்தானே இருக்கிறார், நானே வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டார். இடை வேளையில் அவர் முருகாலயாவிற்கு வருவார். அதனால நீங்க ஏவி.எம்.மிற்கு வரவேண்டாம்" என்றார்.

அவர் சொல்லியபடியே கொஞ்ச நேரம் கழித்து ரஜினி, அவருக்கே உரிய அந்த வேக மும், ஸ்டைலும் கூட வர, பரபரப்பாக உள்ளே நுழைந்தார்.

நான் உடனே படப்பிடிப்பை சற்று நிறுத்தி விட்டு, பக்கத்தில் இருந்த மேக்கப் ரூமிற்கு அவரை அழைத்துக் கொண்டு சென்றேன். அந்த கொஞ்சநேர சந்திப்பிலேயே அவருக்கு இருந்த தொழில் ஈடுபாட்டையும், கதை விஷயத்தில் அவர் காட்டிய அக்கறையையும் புரிந்துகொண்டேன். கதை தேர்வாகாத நிலை யில், விரைவிலேயே ஒரு நல்ல கதையைத் தேர்ந்தெடுத்து, அவரிடம் சொல்வதாகக் கூறி னேன். பிறகு கதாசிரியர் பீட்டர் செல்வகுமார் சொன்ன ஒரு கதையை நானும், என்னுடைய உதவியாளர்கள் ஜாவுதீன், சத்தியமூர்த்தி, கணேசன், பாஸ்கர், அந்தப் படத்தின் செய்தித் தொடர்பாளராக அன்று இருந்து, இன்று தமிழ்த் திரையுலகின் நல்லதொரு தயாரிப்பாள ராக விளங்கும் திரு. சித்ரா ராமு போன்றவர் களும் உட்கார்ந்து பேசி, கதைக்கு ஒரு உருவம் கொடுத்தோம். எல்லோருக்கும் பிடித்திருந்தது.

ஆனால் தலைப்பு என்ன? அதைச் சீக்கிரம் முடிவு செய்ய முடியவில்லை. எவ்வளவோ தலைப்புகள் எழுதிப் பார்த்தோம்; பேசிப் பார்த் தோம்; திருப்தியாக இல்லை.

### பரிசு

"நல்ல டைட்டில் சொல்றவங்களுக்கு 101 ரூபாய் பரிசு" என்று ஜாக்பாட் சீனிவாசன் சொன்னார். அதற்குப் பிறகு ஆர்வம் அதிக மானதே தவிர, தலைப்பு கிடைத்தபாடில்லை.

ஒருநாள் எங்கோ வெளியே சென்று விட்டு சோர்வுடன் ஆபீஸுக்குள் நுழைந் தேன். அங்கே கதாசிரியர் பீட்டர் செல்வ குமார், சித்ரா ராமு மற்றும் பலர் தலைப் புக்காக தலையைப் பிய்த்துக் கொண்டிருந் தார்கள்.

நானும் அவர்களுடன் கலந்து கொண்டு, இரண்டொரு தலைப்பு சொல் லிப் பார்த்தேன். கடைசியில் "தர்ம யுத்தம்" என்றேன். எல்லோருக்கும் பிடித்துப் போய் விட்டது. "இதுதான் படத்திற்கு தலைப்பு" என்றார்கள்.

ஜாக்பாட் சினிவாசனிடம் "படத்திற்கு டைட்டில் கிடைத்துவிட்டது. 101 ரூபாய் கொடுங்க" என்றார்கள். "என்ன தலைப்பு?" என்றார். "தர்ம யுத்தம்" என்றதும், "ம், நல்லாத்தான் இருக்கு. எதுக்கும் நாளைக்கு ரஜினி சார்கிட்ட சொல்லிட்டு, அவரும் ஓ.கே. சொல்லிட்டா, உங்களுக்கு 101 தந்துடறேன்" என்றார்.

தயாரிப்பாளர் என்ற முறையில் அவர் நல்லதொரு பாலிசி வைத்திருந்தார். எந்தப் படமாக இருந்தாலும், அந்தப் படத்தின் கதாநாயகன், இயக்குநர் இந்த இரண்டு பேருடைய முடிவுக்குத்தான் அவர் கட்டுப்படுவார். எனவே இயக்குநரான நான் ஓ.கே. சொல்லிவிட, ஹீரோ ரஜினியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட விரும்பினார்.

மறுநாள், ஏவி.எம். ஸ்டுடியோவில் ரஜினியை சந்தித்து, "படத்திற்கு டைட்டில் கிடைத்துவிட்டது" என்று சொல்லி, "தர்ம யுத்தம்" என்றோம். அடுத்து அவர் சொன்ன வார்த்தை, "ஃபன்டாஸ்டிக். டைட்டில் 'தண்டரிங்'கா இருக்கு" என்று பாராட்டினார்.

அங்கிருந்து வந்த பிறகு தான்- ரஜினியின் ஒப்புதல் கிடைத்தபிறகுதான், அந்த 101 ரூபாய் எங்களுக்குக் கிடைத்தது.

முதல்நாள் படப்பிடிப்பு, சென்டாஃப் ரோட்டில் உள்ள ஒரு வீட்டில் நடந்தது.

அங்கு ஸ்ரீதேவியையும், என்னுடைய உதவியாளர்களையும் தவிர, யூனிட்டி லிருந்த மற்றவர்கள் எனக்கு புதுப்பழக்கம். குறிப்பாக, ஒளிப்பதிவாளர் திரு. என்.பால கிருஷ்ணன் என்னோடு இணைந்த முதல் படம்.

### முதல்காட்சி

சற்று நெர்வஸாக இருந்தது எனக்கு. முதல் முதலாக படமாக்கப்பட்ட காட்சி, வில்லன் தேங்காய் சீனிவாசன், ஸ்ரீதே வியை நிர்ப்பந்தப்படுத்தி எப்படியாவது தந்திரமாக ரஜினியை ஒரு டான்ஸ் கிளப் பிற்கு அழைத்துவர ஏற்பாடு செய்வது.

ரஜினிகாந்த் அந்த வீட்டில் இருந்த ஒரு பியானோ அருகில் நின்று, வில்லன் தேங்காய் சீனிவாசனை பழி வாங்குவது பற்றி தனக்குத்தானே பேசிக் கொண்டிருக் கும்போது, ஸ்ரீதேவி அவரிடம் வந்து பேச்சு கொடுப்பது.

முதல் ஷாட்டிலேயே எல்லோருக்கும் மனநிறைவோடு படப்பிடிப்பு முடிந்தது. உணவு இடைவேளைக்குள் யூனிட்டில் இருந்த அனைவரோடும் சுமுகமான உறவு ஏற்பட்டுவிட்டது.

உணவு விஷயத்தில் நான் சைவம் என்பதால், அந்த யூனிட்டில் இருந்த ஒரே சைவ நண்பரான ஒளிப்பதிவாளர் என்.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு என் னோடு நல்ல சிநேகம் ஏற்பட்டுவிட்டது.

மாலையில் அந்த வீட்டில் படப்பிடிப்பை முடித்துவிட்டு, போட்கிளப்பில் படப்பிடிப் பைத் தொடர்ந்தோம். எல்லோரும் அங்கு சென்றுவிட்டோம்.

ஒரு திறந்தவெளி அரங்கத்தில் ரஜினி யும், ஸ்ரீதேவியும் திரைப்படம் பார்ப்பது போன்ற காட்சி படமாக்கப்படவேண்டும். "அதற்கு கொஞ்சம் இருட்டினால் தேவலை" என்று ஒளிப்பதிவாளர் பாலகிருஷ்ணன் சொன்னார். வந்தது பிரச்சனை.

(அனுபவங்கள் தொடரும்)

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
-750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
-1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
-இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்-
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன்

09

அவ்வளவையும் சுமந்து கொண்டு அவர்கள் மற்ற அங்கத்தினர்கள் வருவதற்கு முன்னதாகவே கூட்டத்திற்கும் வந்துவிட்டனர்!

1918ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அயர்லாந்தில் பொதுத் தேர்தல் நடந்தது. அதில் ஸின்பீன் இயக்கத்திற்கும் ஐரிஷ் தொண்டர் படைக்கும் மகத்தான வெற்றி ஏற்பட்டது. மேலும் தேர்தலின் மூலம் அயர்லாந்தின் உள்ளக் கருத்து உலகிற்குத் தெளிவாக அறிவிக்கப்பட்டது.

அயர்லாந்துக்கென்று தனியான சட்ட சபையோ, பாராளுமன்றமோ கிடையாது. பிரிட்டிஷ் பாராளுமன்றம்தான் அதற்கும் சட்டசபை, பாராளுமன்றத்தில் அயர்லாந்துக்கு 103 ஸ்தானங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகள் தேர்தெடுக்கப் பொதுத் தேர்தல் நடக்கும் பொழுது, அயர்லாந்திலும் அத்தேர்தல் நடைபெறும்.

அதில் இடம் பெற்ற நூற்றுக்கு மேற்பட்ட ஐரிஷ் பிரதிநிதிகள் தங்கள் தாய் நாட்டுக்காக விசேஷ நன்மை செய்ய முடியும் என்று சிலர் எண்ணியிருக்கலாம். இது தவறான எண்ணம்.

ஏனெனில் பாராளுமன்றத்திலுள்ள 700 அங்கத்தினரில் ஐரிஷ் பிரதிநிதிகள் ஏழில் ஒரு பாகத்தினரே. "இராவணனுக்குப் பத்துத் தலை, இங்கிலாந்தின் பாராளுமன்றத்துக்கு எழுநூறு தலை!" என்று ஐரிஷ் மேதையான அன்னி பெஸன்ட் அம்மையார் கூறுவது வழக்கம்.

இந்த 700 தலைகள் அயர்லாந்துக்கு விரோதமாக நிற்கும் பொழுது, ஐரிஷ் பிரநிதிகள் என்ன செய்ய முடியும்? அவர்கள் கெஞ்சிப் பார்த்தார்கள்;பரஸ்பர ஒத்துழையாமையைக் கையாண்டு பார்த்தார்கள். ஒன்றும் பயன்படவில்லை.

யுத்த காலத்திலும்-அதற்கு முன்னும் மொத்தம் ஏழு வருட காலம் அயர்லாந்தில் பொதுத் தேர்தலே நடக்கவில்லை. 1918ஆம் ஆண்டுதான் புதிதாய்த் தேர்தல் ஆரம்பமாயிற்று. இடையில் மக்களுடைய மனோபாவத்தில் விசேஷ மாறுதல் ஏற்பட்டிருந்தது.

அவர்கள் இங்கிலாந்திடம் கொஞ்சமும் நம்பிக்கை வைக்கவில்லை; தங்களுடைய பிரதிநிதிகளைச் சீமைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புவதில் எவ்வித பயனுமில்லை என்பதை உணர்ந்திருந்தார்கள்.

அயர்லாந்துக்குச் சுயாட்சி கொடுக்கும் விஷயமாக இங்கிலாந்து செய்த நம்பிக்கை மோசமும், அது தயவு தாட்சண்யமின்றி இயற்றிய கட்டாய இராணுவச் சட்டமும் மக்களுடைய மனதில் பசுமரத் தாணி போல் பதிந்திருந்தன.

1916ஆம் ஆண்டு நடந்த சுதந்திரக் கலகம் அவர்களிடையே ஒரு பெரும் எழுச்சியை உண்டாக்கிவிட்டது.

அதனால் அவர்களுக்குப் புத்துயிரும் புதிய தைரியமும் உண்டாயின.

தங்குதடையற்ற பரிபூரணமான சுதந்திரத்தையே அவர்கள் வேண்டினார்கள். முன்னால் நடந்த உபதேர்தல்களிலேயே இக் கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏனென்றால் அவர்கள் தேர்ந்தெடுத்த இரு பிரதிநிதிகளும் குடியரசுக் கொள்கையுடையவர்கள். இப்பொழுது பொதுத்தேர்தலின் மூலம் மக்கள் குடியரசையே ஆதரித்து நின்றார்கள் என்பதை அறிவிக்க ஓர் அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஐரோப்பிய யுத்தம் முடிந்தது. அதற்கு ஒரு வாரத்திற்குப் பின்னால் டிசம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது.

அந்தத் தேர்தலில் முதன் முதலாக வயது வந்த சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. ஆதலால் ஸின்பீன் இயக்கத்துக்கு மக்கள் எவ்வளவு ஆதரவு காட்டினார்கள் என்பதைப் பரீட்சித்துப் பார்க்க அதுவே தக்க சந்தர்ப்பமாயிற்று.

மக்களிடையே மிகுந்த பிரசாரம் செய்ய



வேணடியிருநதது. ஸின்பீன் இயககததைப் பற்றி அவர்களிடையே பல தவறான அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருந்தன.

அவர்கள் அரசியல் கட்சியான ஸின்பீனையும், பட்டாளப் பயிற்சிபெற்ற ஐரிஷ் தொண்டர் படையையும் நன்றாய்ப் பாகுபாடு செய்து தெரிந்துகொள்ளவில்லை.

1916ஆம் ஆண்டு நடந்த கலகம் ஸின்பீன் கலகம் என்றழைக்கப்பட்டது.

தொண்டர்கள் ஸின்பீன் தொண்டர்கள் என்று கருதப்பட்டனர். இவ்வாறு ஸின்பீனுக்கும் தொண்டர் படைக்குமுள்ள வித்தியாசத்தை மக்கள் தெரிந்துகொள்ளாது இருந்ததால், பெருத்த நஷ்டமொன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

ஏனென்றால் நாளடைவில் ஸின்பீன் கட்சியார் குடியரசுக் கொள்கையை ஒப்புக்கொண்டு வந்தனர். தேர்தல் காலத்தில் எல்லாக் கிராமங்களிலும் நகரங்களிலும் ஸின்பீன் சங்கங்கள் தோன்றின.

ஒரு சங்கத்தினுடைய தலைவரோ காரிய தரிசியோ உள்ளூர்த் தொண்டர் படையின் தளகர்த்தராகவும் இருப்பது சகஜம்.

ஸின்பீன் கட்சியிலிருந்த பெரும்பாலான வாலிபர்கள் தொண்டர் படையிலும் ஊழியர்களாய்ப் பதிவு செய்து கொண்டிருந்தார்கள்.

தேர்தலில் மக்களுக்கு 'ஸின்பீன் வெறி' பிடித்துவிட்டதென்றே சொல்லலாம். பாதிரிமார்களில் பலர் அதில் சேர்ந்து கொண்டனர்.

ஸின்பீன் கொள்கைகள் காட்டுத்தீபோல் நாடெங்கும் பரவின. நாட்டிலும் நகரத்திலும் எங்கு பார்த்தாலும் திறமையுள்ள சொற்பொழிவாளர்கள் மேடைகளில் ஏறி தங்களுடைய கடமையைப் பற்றிப் பல்லாயிரம் பிரசங்கங்கள் செய்து வந்தார்கள்.

எங்கும் உற்சாகத்திற்கும் உழைப்பிற்கும் குறைவேயில்லை, தேர்தலில் ஏற்பட்ட உற்சாகத்தினால் ஐரிஷ் தொண்டர் படையின் தொகை குறைய ஆரம்பித்தது. பலர் அதிலிருந்து பிரிந்துவிட்டனர். ஆனால் எஞ்சி நின்றவர்கள், தேர்தலுக்குப் பின்னால் படையை மீண்டும் திறம்பட அமைத்துக் கொள்ளலாம் என்று கருதித் தேர்தலில் தீவிரமாக இறங்கி உழைத்தார்கள்.

எல்லோரும் குடியரசு அபேட்சகர்களுக்காகப் பிரசாரம் செய்தனர். நாட்டில் ஒரு வீடு, சுவர், மரம் பாக்கியில்லாது விளம்பரங்கள் ஒட்டப்பட்டன. அறிக்கைகள் எழுதப்பட்டன. எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும், 'குடியரசுக்கே வாக்களியுங்கள்!' 'ஸின்பீனையே ஆதரியுங்கள்!' '1916 ஆம் வருடத்திய வீரரை மறவாதீர்!' என்ற விளம்பரங்களே காணப்பட்டன.

குடியரசை ஆதரிப்பவர்கள் வெற்றி பெற்றால், பாராளுமன்றம் சென்று பதவி ஏற்பதில்லை என்றும், அயர்லாந்திலேயே தங்கித் தனிக் குடியரசை அமைத்து உழைப்பர் என்றும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மக்களும் அத்திட்டத்தில் மோகங் கொண்டு விட்டனர்.

பொதுத் தேர்தலில் உழைத்த பல வாலிப வீரர்கள் வேறு பல காரணங்களுக்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தூக்கிலிடப்பட்டும் உள்நாட்டுக் கலகத்தில் சுடப்பட்டும் இறந்து போயினர்.

அவர்களுடைய சுயநலமற்ற உழைப்பினாலேயே அயர்லாந்து முன்னேறிச் செல்ல முடிந்தது.

தேர்தலில் குடியரசுக்காக நின்ற ஸின்பீனர்களுக்குப் பெரியதோர் வெற்றி கிடைத்தது. 'பிரிட்டிஷ் ஆட்சி வேண்டாம், ஐரிஷ் குடியரசையே ஆதரிப்போம்!' என்று கூறியவர்களுக்கே வெற்றி கிடைத்தது.

மொத்தம் நூற்றைந்து ஸ்தானங்களில் எழுபத்திமூன்றுக்குக் குடியரசுக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தப் பிரநிதிகள் 1919ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி டப்ளின் நகரில்கூடி அயர்லாந்து குடியரசாகிவிட்டது. என்று உலகறியப் பிரகடனப்படுத்தினார்கள்.

அத்துடன் புதிய தேசிய அரசாங்கத்தையும் அமைத்துக் கொண்டார்கள். இவ்வாறு கூடிய எழுபத்திமுவர் கூட்டமே டெயில் ஐரின் என்ற ஐரிஷ் பாராளுமன்றம். இதற்கும் ஆங்கில அரசாங்கத்திற்கும் சம்பந்தமில்லை.

டெயில் ஐரின் அயர்லாந்தை ஆள்வதற்குத் தனக்கே உரிமை உண்டென்று கூறிவிட்டது.

**தமிழில் ப.ராமஸ்வாமி**

இந்த நேரத்தில் தான் பிரீனும் தோழர்களும் தங்கள் நகருக்கு அருகில் இருநத ஸோலோ ஹெட்பக் என்னுமிடத்தில் தங்களுக்குத் தெரிந்த முறையில் ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அது ஆங்கில அதிகாரத்தைக் கிள்ளி எறிந்துவிடத் தக்கதாயிருந்தது.

நாட்டில் வாலிபர்கள் தயாராயிருக்கும் போது அவர்களுக்கு ஒரு வழியைக் காட்டிவிட்டால் பின் காரியங்களை அவர்களே கவனித்துக் கொள்வார்கள் என்று அவர்கள் எண்ணினார்கள்.

கட்டாய இராணுவச் சட்டம் அமுலுக்கு வராததால் பல தொண்டர்கள் முதலிலேயே பிரிந்துவிட்டனர்.

தேர்தலுக்குப் பின்னால் மற்றும் பலர் படையில் இருந்து விலகி வெறும் அரசியல் வாதிகளாகப் போய்விட்டனர்.

இந்நிலையில் தீவிரமான சில காரியங்களைச் செய்து தேசத்தை எழுப்பிவிட வேண்டுமென்று தான் பிரீன் கூட்டத்தார் எண்ணினார்கள். அதனால் தான் ஸோலோ ஹெட்பக்கில் தங்கள் முதற் போரைத் தொடங்கினார்கள்.

அரசர்களுக்கு வரிப்பணம் எவ்வளவு அவசியமோ புரட்சிக்காரருக்கு அவ்வளவு அவசியமான பொருள் வெடி மருந்து.

தான் பிரீன் முதலானவர்கள் அதைத் தேடுவதில் முதலில் கருத்தைச் செலுத்தினர்.

1919 ஜனவரி ஆரம்பத்திலேயே ஸோலோ ஹெட்பக் கல்லுடைக்கும் பாசறைகளுக்குப் பக்கம் வெடிமருந்து கொண்டுவரப்படும் என்ற செய்தி அவர்களுக்கு எட்டியது.

ஆனால் வெடி மருந்து வண்டியுடன் அதன் பாதுகாப்புக்காக ஆயுதந் தாங்கிய பொலிஸ்காரர்களும் வருவார்கள்.

வெடிமருந்து வேண்டுமானால் அவர்களிடமிருந்து அதைப் பறிக்கத் தான் வேண்டியிருந்தது.

தான் பிரீனும் ஸீனும் இதைப் பற்றி அடிக்கடி கலந்து பேசினார்கள்.

அவர்களிடம் ஆட்கள் அதிகமில்லை. ஆனால் இருந்த சிலரோ மிகுந்த தைரியசாலிகள். அச்சிலரை வைத்துக்கொண்டு விரைவாக மருந்துக் காரியத்தை முடிக்காவிட்டால் வெளியிலுள்ள மற்றத் தொண்டர்களும் உற்சாகங் குன்றிக்கிடப்பார்கள்.

எதிரிகளோடு நேராக நின்று இடைவிடாது போராடாமல் மறைந்து நின்ற சமயம் வாய்த்தபோதெல்லாம் எதிரிகளைத் தாக்கிவிட்டு மீண்டும் மறைந்து கொள்வது கெரில்லாச் சண்டை என்று சொல்லப்படும்.

"கெரில்லா" என்பது மனிதக் குரங்கு. அது இப்படித்தான் சண்டை செய்வது வழக்கம்.

அடிமை நாட்டில் அந்நியர் வலியராகி நிற்கும் பொழுது மக்கள் இத்தகைய கெரில்லாச் சண்டையே செய்ய முடியும்.

பல கெரில்லாச் சண்டைகளுக்குப் பின்னால் பெரும் புரட்சி ஏற்படும்.

கெரில்லாச் சண்டைக்கு ஆட்களின் தொகையைப் பார்க்கிலும் அவர்களின் தீரமும் திறமையுமே முக்கியம்.

தான் பிரீன் இதையறிந்து தன்னிடமிருந்த நண்பர்கள் சிலரைத் தயார்செய்து வைத்துக்கொண்டான்.

வெடிமருந்துடன் வரும் பொலிஸாரைச் சுடுவதா அல்லது ஆயுதங்களை மட்டும் பறித்துக் கொண்டு அவர்களை விட்டு விடுவதா என்ற பிரச்சனையைப் பற்றி அவன் நண்பர்களுடன் யோசனை செய்தான்.

ஸீன் அநாவசியமாய் அவர்களைக் கொல்ல வேண்டாம் என்றும் ஆயுதங்களே தங்களுக்குக் குறி என்றும் எடுத்துக் கூறினார். அவர்கள் தயாரானார்கள்.

(பயணம் ...தொடரும்)

---

சடுகுடு'வில் புகழ்பெற்றதும், விவஸ்தையற்றதுமான இந்திய ஜனநாயகத்தில்,இந்தத் தேதியில் எந்தக் கட்சியில் எவன் இருக்கிறான் என்பதை நிர்ணயித்துச் சொல்வது கடினம். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் அதற்கு விதிவிலக்கல்ல.

பலப் பரீட்சைக்குக் களம் தயாராகி விட்டது என்றவுடனே உதிரிப் பூக்களெல்லாம் மாலையாகத் தொடுக்கப்பட்டன.

ஒவ்வொன்றும், தனித் தனியாகத் தலையை நீட்டிக் கொண்டிருந்தாலும், 'மாலை' என்ற பெயரிலேயே அவை தங்களை அழைத்துக்கொண்டன.

இலட்சக்கணக்கான எறும்புகள் ஒரு சிங்கத்தைக் கொன்றுவிட முடியும் என்பது உண்மையே. ஆனால் அது நடக்கக்கூடியது, சிங்கம் தூங்கி விட்டால் மட்டுமே.

இந்தியாவின் சக்தி வாய்ந்த சிங்கம் தூங்கவில்லை; ஆனால் சுற்றுச் சார்புகளால் தள்ளாடிக் கொண்டிருந்தது. அதனால் கூட்டமான எறும்புகள் வலிமை பெற்றுவிட்டன. அவற்றின் வலிமையைக் கண்டு சிங்கமும் கூட்டு சேர வேண்டி வந்தது.

அந்தக் கூட்டுக்குத் தென்னாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சந்திரசூரியன்.

மிகப் பெரியவர்களே அவரைத் தேடி வருகிறார்கள் என்றதும், அவரது மரியாதை இன்னும் உயரத் தொடங்கிற்று.

அவர் போட்ட பிச்சையிலே உயிர் வாழ வேண்டியவர்களாக, அகில இந்தியப் பிரமுகர்களே மாறினார்கள்.

அதிலே அவரது தன்னம்பிக்கையும் வளர்ந்தது.

அந்தத் தேர்தலுக்கு அவர் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கும்போதுதான் பம்பாயிலே தொழிலதிபர் நாராயணசாமியும், அவருடைய மனைவி கற்பகமும், தம்பி

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**34**

குமாரசாமியும், லலிதாவும், விஜயா வேதாசலமும் பத்து நாட்களாகத் தங்கி இருந்தார்கள்.

அன்று.... குமாரசாமியைப் பார்த்து நாராயணசாமி திகைத்தாலும் அந்தக் குடும்பத்தை அங்கீகரித்துவிட்டார்.

எல்லோரும் ஒன்றாகவே 'கீ சேஞ்'சுக்குப் போனார்கள். கற்பகத்தைத் தவிர அனைவருமே அதிலே கலந்து கொண்டார்கள்.

மார்வாரிப் பெண் ராஜியின் வீட்டுக்குச் சகோதரர்கள் ஒருவருக்கொருவர் தெரியாமலேயே போய் வந்து கொண்டிருந்தார்கள்.

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

-கண்ணதாசன்-

அலுத்துப்போன நிலையில் சென்னைக்குப் புறப்பட முடிவு கட்டியபோதுதான் தேர்தல் அறிவிப்பு வந்தது.

அந்த அறிவிப்பைப் பார்த்துக் கமலுக்கு டெலி:போன் செய்தபோதுதான் அவரது பதவி போனது தெரிந்தது. அப்போது கற்பகம் விடுதலைப் பெருமூச்சு விட்டதை நாராயணசாமி கவனிக்கவில்லை. பம்பாயிலிருந்து பிறகு சந்திரசூரியனுக்கு டெலி:போன் செய்தார் நாராயணசாமி.

நாராயணசாமியைத் தன் கட்சி அபேட்சகராகப் போடச் சந்திரசூரியன் விருப்பம் தெரிவித்தார்.



# அரங்கம் அந்தரங்கம்

"ஒரு தொழில் நிபுணரை 'சப்போர்ட்' பண்ணப் போகிறேன்; ஒரு தொழிலதிபரைக் கட்சி வேட்பாளராகப் போட விரும்புகிறேன்." என்றார் அவர்.

நாராயணசாமிக்குப் பரம சந்தோஷம்.

அடிக்கடி யாராவது ஒரு உறுப்பினரைப் பிடித்து கொண்டு, டெல்லிக்குப் புறப்படுவதைவிடத் தானே உறுப்பினராகிவிட்டால் வசதியாக இருக்கும் என்று மகிழ்ந்தார்.

கற்பகத்திடம் இந்தச் செய்தியை சொன்னபோது ஏதோ ஒரு உற்சாகம் அவளுக்கு ஏற்பட்டது.

விஜயா வேதாசலம் அங்கிருந்து பலமுறை முயன்று, தன்னையும் ஒரு வேட்பாளராகப் போடும்படி கொஞ்சினாள்.

"என்ன உன் தகுதி? எது உன் தொகுதி?" என்று கோபித்துக் கொண்டார் சந்திரசூரியன்.

ஆசை தாங்காமல் விஜயாவேதாசலம். நாராயணசாமி தம்பதிகளோடு சென்னைக்குப் பறந்தாள்.

**கவியரசு கண்ணதாசன்**

குமாரசாமியும் லலிதாவும் மட்டும் பம்பாயில் தங்கி விட்டார்கள்.

இப்போது சந்திரசூரியனுக்குச் சிபாரிசுக்கு மேல் சிபாரிசுக்கள் வரத் தொடங்கின.

சினிமாத் துறையிலுள்ள ஒவ்வொரு காதலியும் தங்களது போஷகர்களுக்குச் சிபாரிசு செய்ய ஆரம்பித்தார்கள்.

ஆனால், சந்திரசூரியன் கெட்டிக்காரர், இந்த இந்தக் காரியங்களுக்குத்தான் இவரவர் லாய்க்கு என்பது அவருக்குத் தெரியும். அவர்களை எப்படிச் சமாதானப் படுத்த வேண்டுமோ அப்படிச் சமாதானப் படுத்தினார்.

நாராயணசாமிக்கு ஒரு தொகுதி கிடைத்துவிட்டது.

சந்திரசூரியன் கட்சியின் சின்னம் மூன்று தாமரை.

"மூன்று தாமரை- இது முளைத்த தாமரை" என்று பாட்டுப் போட்டு அது ரெக்கார்டும் ஆகிவிட்டது.

சந்திரசூரியனின் முதல் காதலியான பாமா தன் நாட்டியத்திலேயே கொடியைப் பிடித்துக் கொண்டு பாட்டுப் பாட ஆரம்பித்தாள்.

சந்திரசூரியனோடு ஒப்பந்தம் செய்து கொண்ட அகில இந்தியப் பிரமுகர்களின் தமிழ்நாட்டு வாரிசுகள் விளக்கெண்ணெயில் பிறந்து வெண்டைக்காயில் வளர்ந்தவர்கள்.

சந்திரசூரியனோடு சேர்ந்ததால் அவர்களது வெற்றியும் உறுதியாயிற்று.

தேர்தல் முடிவுகள் வெளிவந்தன.

போட்ட இடங்கள் எல்லாம் சந்திரசூரியன் அண்டு கம்பெனி வெற்றி பெற்றது; ஆனால் இந்தியச் சிங்கம் படுத்துவிட்டது.

(அந்தரங்கம் வரும்)

# அஸ்தமனத்தில் ஓர் உதயம்



**சுரேன் ஆர். பரமேஸ்வரன்**

யாழ்ப்பாணத்து மண்ணில் வளர்க்கப்படாத கோப்பி அம்மாவினால் பானமாக தயாரிக்கப்படும்போது 'இவ்வளவு அற்புதமான சுவை எங்கிருந்து வந்திருக்கும்' என்ற எனது சந்தேகத்துக்கு விடை தென்னிலங்கையில் தொழில் செய்த போதும் வெளிநாட்டுக்குப் புலம் பெயர்ந்த பிறகும் எனக்குக் கிடைத்ததில்லை. படையினரின் இராணுவ நடவடிக்கையால் வன்னிக்கு இடம் பெயர்ந்ததால் ஏற்பட்ட கஷ்டங்களை அம்மா விலாவாரியாக ஒப்புவித்துக் கொண்டிருந்தாள்.

ஏறத்தாழ பன்னிரெண்டு வருடங்களின் பின் அந்நியமான வெளிநாட்டு மண்ணிலிருந்து தாயகம் திரும்பியிருந்தேன். ஃபிரான்சின் தலைநகரம் பாரிஸ் என சமூகக்கல்விப் பாடத்தில் படித்தபோது எனது எதிர்கால வாழ்க்கையின் அமைவிடமாகப் போகும் நகரம் என சத்தியமாகக் கனவு கூடக் கண்டதில்லை.

பூமியின் இந்திரலோகம் என வர்ணிக்கப்படும் நகரத்தில் வாழ்ந்தாலும் நினைவு கனவு எல்லாம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் இந்தக் குக்கிராமமொன்றை சுற்றிச்சுற்றி வருவதை எண்ணி நான் வியந்ததுண்டு. புலம் பெயர்ந்த தமிழர்கள் எல்லோரினதும் நிலை இதுதான். பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் பிரிந்து வாழ்வது காலத்தின் கட்டாயமாகிவிட்டபோதும் இதிலுள்ள தர்க்க ரீதியான நியாயம் என்ன? என்பது என் மனதை சதா குடையும் விடை தெரியாத கேள்வி.

"அம்மா! பொன்னம்மா பெரியம்மாவையும், பெரியப்பாவையும் ஒருக்காப் போய்ப் பார்க்க வேணும். சோதியக்கா கொஞ்சம் காசு கொடுத்து விட்டவ."

"தம்பி, பெரியம்மாவைப் பத்தி தெரியும் தானே? கவனமாக் கதைச்சு வை!"

பெரியம்மாவின் வீடு ஊரின் இன்னுமொரு கோடியிலிருந்தது. 'மண்வாசனை' என்பது ஒரு கற்பனையான சொல் என்பதில் எனக்கு கொஞ்சம்கூட உடன்பாடு கிடையாது. எங்கள் ஊரின் செம்பாட்டு மண் தோட்டங்கள் கொத்திப் புரட்டப்பட்டு நீர் விசிறப்படும் போது எழும் அந்த வாசனை எனது மூச்சில் கலந்துபோன விடயம். 'புகையிலை' தான் எங்கள் ஊர் கமக்காரர்களுக்கு நல்ல வருமானத்தைத் தரும் பயிர். புகையிலை வளர்ந்தபின் பச்சைப் பயிரின் வாசனையும் மண் வாசனையும் கலந்து வரும் இன்னுமொரு வாசனை, புகையிலை குடிலில் வாட்டப்படும் பொழுது வரும் வாசனை- இவையெல்லாம் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் ஆத்மார்த்தமாக தொடர்ந்து வரும் என நினைக்கிறேன்.

தோட்டங்களினூடே ஊடுருவிச் செல்லும் மண் பாதையினூடாக மெதுவாக நடை போடத் தொடங்கினேன். தோட்டங்களில் ஆங்காங்கே பயிர்ச்செய்கை தொடங்கியிருந்தார்கள். பாழாகிப்போய்க் கிடக்கும் மற்றத் தோட்டங்களைப் பார்க்கும்போது நெஞ்சை ஏதோ நெருடியது.

கிழக்குப்புற தோட்டங்களின் இடது கோடியில் கருணாகரப் பிள்ளையார் கோயில் கோபுரம் நெடிதோங்கித் தெரிந்தது. ஊர் மக்களின் இன்ப துன்பங்களில் பங்குகொள்ளும் அற்புதமான இறைவன். விடிய விடிய மேளச்சமா நடக்கும். சிவராத்திரி இரவில் கள்ளமாக காளிங்கன் தியேட்டருக்கு சிவாஜியின் 'பாபு' திரைப்படம் 'செக்கன்ட் ஷோ' பார்க்கப்போனது. வரும்பொழுது பொலிசிடம் அகப்பட்டு அவர்களினால் காற்று திறந்துவிடப்பட்ட சைக்கிளை உருட்டிக் கொண்டே நண்பன் சிவாவுடன் பொடி நடையாகத் திரும்பியது- இளமைக்கால இனிய அனுபவங்கள் அவை.

பொன்னம்மா பெரியம்மாவின் வீடு கோடியில் தெரிந்தது. பெரியப்பா ஒரு காலத்தில் ஓகோவென்று வாழ்ந்தவர். சுருட்டுக் கொட்டில் ஒன்று வைத்து நடத்தி தென்னிலங்கைக்கு சுருட்டுக்களை அனுப்பி பெரியளவில் வியாபாரம் செய்தவர். திடீரென கடுமையான நோயாளியாகிப் படுக்கையில் விழுந்துவிட, வியாபாரமும் சேர்ந்து படுத்தது.

ஐந்து பொம்பிளைப் பிள்ளைகள் இரண்டு மகன்மார். குடும்பம் கஷ்டத்திலிருந்தபோது ஒருவன் காணாமல் போனான். இயக்கத்தில் சேர்ந்து விட்டான் எனக் கதைத்தார்கள். மற்றொருவன் விரும்பியவளைக் கட்டிப் பிரிந்து போய்விட்டான். பொன்னம்மாப் பெரியம்மா ரொம்பவும் பெருமை பிடித்த பேர்வழி. ஓகோவென்று இருந்தபோது சொந்தத் தங்கையான எனது அம்மாவையும் எங்கள் குடும்பத்தையும் சதத்துக்கும் கணக்கெடுக்கமாட்டார்.

குடும்பம் கஷ்ட நிலைக்கு வந்தபிறகும் பெரியம்மாவின் பெருமை மட்டும் விடுபட்டுப் போகவில்லை. மூத்த மகளுக்கு டொக்டர், என்ஜினியர் என்றுதான் மாப்பிள்ளை பார்த்தார். சோதியக்காவுக்கு வயது ஏறிக் கொண்டே போனது. முப்பத்தேழு வயதில் இளமையின் கொடுமை பொறுக்க முடியாமல் சாதிகுறைந்த தவலிங்கத்துடன் ஓடிப் போனார். பெரியம்மா ருத்ர தாண்டவம் ஆடினார். மகள் இறந்து போய்விட்டதாகக் கைகழுவினார்.

சோதியக்காவையும் கணவனையும் பாரிஸில் சந்திக்க வேண்டிவரும் என நான் கொஞ்சம்கூட நினைக்கவில்லை. நான் போன புதிதில் புதிய ஊரில் இடம், வலம் தெரியாமல் நின்றபோது தவலிங்கம் அத்தான் ரொம்பவுமே உதவினார். என்னுடன் ரொம்பவும் நெருங்கிப்போனார். புலம் பெயர்தல் யாழ்ப்பாணத்து சமூக அமைப்பின் சாதிப்பிரச்சனையை ஓரளவுக்கு (?) குறைத்திருக்கிறது என்பது எனது கருத்து.

எனது திருமணத்தின்போது ஓடியாடி கடுமையாக உழைத்தவர்கள் சோதியக்காவும் அத்தானும்தான். உறவுகளைப் பிரிந்து வாழும் ஊரில் சொந்தம் எனச் சொல்லிக் கொள்ள சோதியக்காவும் அத்தானும் இருந்தது எனக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

என்னுடைய திருமணத்தை வீட்டில் வீடியோவில் பார்த்தபோது திடீரெனப் பொன்னம்மா பெரியம்மா வீட்டுக்கு வந்து வீடியோவைப் பார்த்துவிட்டு, தாம் தூம் எனக் குதித்திருக்கிறார். "நானே என்ட மகளுக்கு கருமாதி செய்து போட்டன், உன்ட மகன் என்ன சொந்தம் கொண்டாடுறான்!" என்று அம்மாவை எல்லோருக்கும் முன்னிலையில் ஏசியிருக்கிறார். அம்மா ரொம்பவும் மனவருத்தப்பட்டு கடிதம் போட்டிருந்தார்.

பெரியம்மாவின் வீட்டுப் பொருளாதார நிலைமையின் சரிவைப் பத்தி அம்மா அடிக்கடி கடிதத்தில் எழுதுவார். நானும் சோதியக்காவுக்கு சொல்லுவன். சோதியக்காவும் அடிக்கடி வீட்டுக்கு காசு அனுப்புவார். ஆனால் பதிலே வருவதில்லை என்றும் சொல்லி மனவருத்தப்படுவார்.

பெரியம்மாவின் வீட்டுக் கேட்டைத் திறந்து கொண்டு நுழைந்தேன். வரவேற்பு எப்படியிருக்குமோ என மனம் சற்றுக் குழம்பியது. "தம்பி ராசன் எப்ப வெளிநாட்டாலை வந்தனி?" பெரியம்மாவின் சந்தோசமான குரல் ஒலித்தது. திண்ணையில் ஈஸிசேரில் படுத்திருந்த பெரியப்பாவின் கண்கள் பிரகாசித்தன.

"தம்பி சோதி எப்படியிருக்கிறா? பேரன்மார் இரண்டு பேரும் நல்லா இருக்கிறான்களா?" நான் திகைத்துப் போனேன்.

"என்ன தம்பி பேயறைஞ்சமாதிரி யோசிக்கிறாய்? சோதி இல்லாட்டி நாங்கள் எப்பவோ மண்ணுக்குள்ளே போயிருப்பம். அவள் காசு அனுப்பினதாலைதான் இரண்டு மகள்மாரை கரையேத்த முடிஞ்சது. மற்றப் பிள்ளையளும் நல்லாப் படிக்கிறாளவை. உன்ரை பெரியம்மாதான் வரட்டுக் கௌரவத்திலை சோதிக்கு ஒரு கடிதம் கூடப் போடேல்லை!" என்றார் பெரியப்பா.

புலம்பெயர்தலின் விளைவாக இழந்தவைகளை நினைத்துப் புலம்பும் என் மனதின் ஒருமூலையில் சந்தோசமான ஆறுதல் ஒன்று படர்ந்தது. ✹

# 'நீங்க தானா அது?'

**கிண்ணியா அமீரலி**



மூன்று மாதங்களுக்கு முன்பு... 'மூவாயிரம் ரூபாய்' கடன் வாங்கி இருந்தேன். 'எட்டாம் மாதம் எப்படியும் திருப்பித் தந்து விடுவேன்' என்று, 'பலாமரத்தடிச் சந்திக் கடை' நஜீம் முதலாளியிடம்.

'ஆருக்குக் காணும் இந்த
அறுநூறு சம்பளந்தான்...' என்ற கவிஞர். ஏ.எம்.எம். அலியின் கவிதையை இன்றும் கூட ஞாபகத்துக்குக் கொண்டு வரும்... சாதாரண சம்பளக்காரன் நான்!

'இருபதாம் தேதி என்றால்
இதயமே சுக்கு நூறு
வருவதோ பத்து நூறு...
வரவல்ல செலவு
பாரு...' என்று அழும் அரசாங்கக் 'கூலிக்காரன்' நான்!

அர்ஹம், ராஸிக், வஸீர், மெய்யன், அல்ஜ், உவைஸ், றியாட்... உதவுகிறார்! என்னதான் பண்ணுவது...? 'கடனிலா வாழ்க்கை வேண்டும்?' என்றுதான் எண்ணுவது... கடனும் வாங்காமல் எப்படி உண்ணுவது?

'நவம்பருக்குள் எப்படியாவது நஜீம் முதலாளியிடம் வாங்கிய கடனை அடைத்து விட வேண்டும்' என்ற முடிவோடு கிடைத்த 'சீற்'றில் அமர... 152 'பலாமரத்தடி'யில் நின்றது.

இந்தக் கவிஞன்மார் எல்லோருமே 'கடன்காரப் பயல்கள்'தான் போல...! இல்லாவிட்டால்-'கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று பாடுவானா கம்பன்? இமைக் கதவோரம் 'நாகேஷ்' நெளிந்தார்.

'சேர்ந்தே இருப்பது?'
'வறுமையும் புலமையும்...'
இருபது ரூபா யோடு இல்லறம்
-ஆரம் பித்தேன்!
வருவது வரட்டும் என்று... வாழ்க்கையை
-நடத்துகின்றேன்...!
என்னுடைய சாராம்சம் இதுதான்: பேச்சுப்
-பல்லக்கு தம்பி கால் நடை!

'சின்னச் சின்னக் கடன்கள் சேர்ந்து எங்கள் சம்பளமாகிறது..' என்று கவிதையில் விம்முவார் நண்பர் வெலிப்பண்ணை முபாரக்.

சின்னச் சம்பளக்காரர்கள் சிரிப்பது எக்காலம்? நின்ற பஸ் நகர்வதாய் இல்லை...

அன்று- நாலைந்து நாளாய் அலைந்து... எப்போது திறப்பார் கடை என்று ஏங்கிய நான் இன்று.. நஜீம் நானா திறந்திருக்கக் கூடாது கடை' என்று மனசுக்குள் பிரார்த்தித்து' முதுகுப் பக்கத்தை மட்டும் காட்டிக் கொண்டிருந்தேன் கடைக்கு. முகம்தான் இல்லையே... அடைக்கும் வரை கடனை!

'வேதனை குறைய வேண்டுமானால்
வேதனம் கூட வேண்டும்'
கண்டக்டருக்குத் தேங்க்ஸ்.

'லெயார்ட்ஸ் புரோட்வே' யால்... 'லொட லொட'த்தது 152. நல்லவேளை.... நஜீம் நானா கடையில் யாருமே என்னைக் காணவில்லை.... என்ற சந்தோஷத்தில் இருந்த என் தோளில்... திடீரென விழுந்தது ஒரு கை... சிநேகிதமாய்.

திரும்பினேன்.

"இன்று நாங்கள் கடையைத் திறக்கவில்லைத் தம்பி..." என்று சிரித்தார் முதலாளி நஜீம் நானா, என் பக்கத்து 'சீற்'றில் அமர்ந்தபடி.

# உறவு



**திருமலை வி.என். சந்திரகாந்தி**

'விதியின் படி நடக்கும்' என்பது ஒரு நியதியாக இருந்து விட்டுப் போகட்டும். அதனால் அது எனக்கு மட்டும் உரிய கூற்றாக இருப்பதுதான் என்னால் புரிந்து கொள்ள முடியாத விடயமாக இருக்கிறது.

ஆனாலும் தங்கச்சி பாவம். ஆஸ்பத்திரியிலை சேர்த்து எத்தனை நாளாய்ப் போய்ச்சுது!

இண்டைக்கு 'சேர்ஜன்' பார்ப்பார். அவளுக்கு ஒரு விடிவு வந்துவிடும். காளித்தாய் ஒரு வழியைக் காட்டாமல் விடமாட்டாள்.

அத்தானுக்கும் ஆறுதலாய் இருக்கும். கலியாணம் முடிச்சுக்கொண்டு வீட்டைவிட்டு தனிக்குடித்தனம் போய்விடுவார்.

என்ரை மனதுக்கும் ஒரு ஓய்வு வந்து விடும் போலை...!

"லாவண்யா... என்னம்மா செய்து கொண்டிருக்கிறாய்...? இடியப்பத்தை தட்டிலை பிழிந்து வைத்திருக்கிறன். மெல்லிதாக சீரகச் சம்பல் ஒன்று செய்தெடுத்தால் சுகன்யாவின் வாய்க்கு இதமாக இருக்கும். வந்து என்னெண்டு பாரன்!"

அம்மாவுக்கு தங்கையிலை அப்படி ஒரு கரிசனை!

'சேர்ஜன்' பத்து மணிக்கெல்லாம் வந்து விடுவார். தங்கையின் சிறுநீரகத்திலுள்ள கோளாறை இனம் கண்டுவிட்டால் பிறகு எப்படியும் பரிகாரம் செய்து விடலாம். மாதா மாதம் இரத்தம் சுத்திகரிப்பதற்காக அலைய தேவையில்லை.

அதன்பின் அவள் அதிர்ஷ்டக்காரியாகி விடுவாள்!

அத்தானிலை எவ்வளவு அன்பும் எதிர்பார்ப்பும் நான் வைத்திருந்தனான். அப்பா சாகும்போது சொன்ன வார்த்தைகள் எப்பவும் என் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டு இருக்குது.

'என்னுடைய இரண்டு பிள்ளைகளிலை ஒருத்தி என் தங்கையின் மகனைத்தான் செய்யவேண்டும்!'

அப்படியே மாமிக்கும் கூறியிருப்பார் போலை!

அத்தான் பெண் கேட்டு வரும் வரைக்கும் என்னுடைய 'விவாக நினைப்பு' என்ற சிம்மாசனத்தில் அத்தான்தான் வீற்றிருந்தார்!

தங்கை எனக்கு மிக இளையவள். அவள் அப்போ 'கண்டுபிடி, கண்டுபிடி' விளையாடிக் கொண்டிருந்தாள்.

அத்தான் வந்து போனார்...

அம்மா இலாவகமாக எனக்கு எடுத்துரைத்தாள்... "பிள்ளை... உன்ரை தங்கச்சி தானே... விட்டுக்கொடு. காளி ஆச்சி உனக்காக கண் திறக்காமல் இருக்கப் போறாளே..?"

என்னுடைய முதலாவது விட்டுக் கொடுப்பு.

'கோலிங்பெல்' சத்தம் கேட்கவும் அம்மாவின் குரல் 'வோசிங்' ரூமிலிருந்து கேட்டது.

"பிள்ளை, சாப்பாடு பார்சலையும் எடுத்து வைத்து கூடையை கொத்தானிட்டை குடு. நான் பத்து நிமிடத்திலை ஆஸ்பத்திரிக்கு வந்து விடுவன் எண்டு சொல்லு."

அத்தானிடம் கூடையை கொடுத்தபோது மின்னல்போல ஒரு நினைப்பு என்னைத் தாக்கியது...

"தங்கச்சிக்கு ஏதாவது நடந்தால் அத்தான் என்னைத்தான் முடிக்கக் கேட்பார். இது என்ன அநியாயம்? மனம் சில வேளைகளிலை நாங்கள் கருதாததுகளையும் தானல்லோ நினைக்குது? தங்கச்சி பாவம். அவள் வாழ வேண்டும்.

அத்தானை அனுப்பிவிட்டு வீட்டைக் கூட்டிப் பெருக்கினேன்.

அத்தானுக்கு தங்கச்சியிலையும் ஆசை! வீட்டிலையும் ஆசை!

அம்மாதான் கேட்டவா... "பிள்ளை, உன்ரை- தங்கச்சிதானே...? யாரோவா...? வீட்டை தங்கச்சிக்கு கொடுப்பம்...!"

என்னுடைய இரண்டாவது விட்டுக் கொடுப்பு!

அம்மா ஆஸ்பத்திரியால் திரும்பி வர இரண்டு மணியாய்ப் போய்விட்டது. வழக்கத்துக்கு மாறாய் அத்தானும் அம்மாவுடன் கூட எங்கள் வீட்டுக்கே வந்திருந்தார்.

இருவரின் முகத்திலும் ஈயாடவில்லை. அத்தான் முன் மண்டபத்தில் அமர அம்மா ஓடிப்போய் கட்டிலில் விழ...நானும் பின்னால் போனேன்.

அம்மா அழுகையின் மத்தியில்.... "பிள்ளை... கொத்தான் உன்னோடை கதைக்க வேணுமாம். போய்க் கதை."

எனக்கு ஆயிரம் நினைப்புகள் உள்ளத்தில் தோன்றி நர்த்தனம் புரிந்தன!

தங்கச்சிக்கு கடுமையோ...நான் கருதாமலோ என்னவோ எனது மனம் நினைத்தது போல அத்தான் எனக்கே கிடைத்து விடுவாரோ...சே...அப்படியெல்லாம் நடக்கக் கூடாது.

முகத்தை மூடியிருந்த இரண்டு கரங்களையும் விலக்கிவிட்டு.... அத்தான் கூறினார்.

"லாவண்யா.... சுகன்யாவுக்கு மற்ற சிறுநீரகத்திலும் தொற்று ஏற்பட்டுவிட்டது. அவள் தப்புவது கஷ்டம்..."

என்னுடைய நெஞ்சு 'பட பட'என அடித்தது. அப்படியும் நடந்து விடுமோ...?

சிறிய நேர இடைவெளியில் அத்தான் கேட்டேவிட்டார். என்னால் எப்படி மறுக்க முடியும்? ஏற்றுக்கொண்டேன்.

ஆம் என் மூன்றாவது விட்டுக் கொடுப்பு!

எனது இரண்டு சிறுநீரகத்தில் ஒன்றை எனது தங்கைக்கு கொடுப்பதற்கு நான் ஏன் தயங்கவேண்டும்...?

நீரை உகுத்தன... என் விழிகள் இரண்டும். இதயத்தை மட்டும் இறைவன் ஏன் ஒற்றையாகப் படைத்தான்?

# நன்மைக்கு இது காலம் இல்லை!



**செ. குணரத்தினம்**

பரமேஸ்வரத்தாருக்கு எப்போதுமே யுத்தம், சண்டை என்றால் அலாதிப்பிரியம். சண்டைக் காட்சிகள் நிறைந்த படங்களைத் தான் அவர் அடிக்கடி விரும்பிப் பார்ப்பார். சேவல் சண்டை, நாய்ச்சண்டையென்றால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பார்த்து இரசித்துக் கொண்டேயிருப்பார். ஆனால் மனிதர் சரியான பயந்தாங்கொள்ளி.

ஊருக்குள் வெடிச்சத்தம் கேட்டால் பதறிப்போவார். யார் யாருக்கோவெல்லாம் திட்டுவார். ஊருக்குவெளியே வெடி வெடித்து மக்கள் சிதறிப்போனால் அந்தச் செய்திகளை, படங்களைப் பார்த்து இரசிப்பதற்கு பரக்கப் பரக்க ஓடித்திரிவார். மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் இவரது போக்கு இன்னும்தான் புரியாத புதிராகவே இருந்து வருகிறது.

மோட்டார் சைக்கிளில் யாராவது வேகமாகச் செல்வதைப் பார்த்துவிட்டால், "ஏனப்பா இந்த மனிதன் இவ்வளவு வேகமாக ஓடுகிறான்? தற்செயலாக யாராவது குறுக்கறுத்தால் தலை சிதறிப்போகுமே!" என்பார். ரோந்துவரும் ஆமிக்காரர்கள் கொக்குச்சுட்டால் ஓடிச்சென்று மனைவிக்குப் பக்கத்தில் குந்திக்கொண்டு "கடவுளே! இதென்னப்பா கொடுமை! வானத்துக்குக் கீழே வீட்டைக் கட்டிக்கொண்டு நாம் எங்கோடி ஒளிப்பது?" என்று சிறுபிள்ளைத்தனமாக அழுவார்.

எடுத்ததற்கெல்லாம் வீணாக கற்பனை பண்ணி பயத்தை நெஞ்சு நிறையக் குவித்துக்கொள்ளும் இவரைப் பார்த்து, இவருடைய மனைவி, மக்கள் சில வேளைகளில் ஆத்திரப்படுவதுமுண்டு. அனுதாபப்படுவதுமுண்டு.

ஒருநாள் ஊரில் ஒரு றவுண்டப் நடைபெற்றது. பயத்தில் இளவட்டங்களெல்லாம் ஓடி ஒளிந்து கொண்டார்கள். ஆனாலும் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை. வந்தவர்களெல்லாம் கலைந்து போனபின் ஊர் வழமைக்குத் திரும்பியது.

பரமேஸ்வரத்தாருக்கு மனம் பொறுக்க முடியவில்லை. மெதுவாக நடந்து முன்னாலுள்ள மெயின் வீதிக்கு வந்தார். அங்கே ஓரமாக ஒரு பஸ்தரிப்பு நிலையம் இருந்தது. அதற்குள் இரண்டு இளைஞர்கள் எதையோ பேசிச் சிரித்தபடியிருந்தார்கள். மெல்ல அவர்கள் பக்கமாக பரமேஸ்வரத்தார் போனார். "தம்பிமாரே! இன்றைய ஊர் நிலவரம் நல்லாத் தெரியும்தானே! ஏன் சும்மா இதற்குள் இருக்கிறீர்கள்? பிடிபட்டால் தோலை உரித்துவிடுவார்கள். பேசாமல் எழுந்து போய்விடுங்கள்!" என்றார்.

அந்த இருவரும் சிவில் உடையிலிருந்த பொலிஸ்காரர்கள் என்ற விபரம் இவருக்குத் தெரியாது. அவர்கள் இருவருக்கும் கொஞ்சம் கொஞ்சம் தமிழும் தெரியும்.

பரமேஸ்வரத்தார் நன்றாக மாட்டுப் பட்டுக் கொண்டார்.

மரை வேட்டைக்குப்போய் மரை கிடைக்காமல் உக்குளானைச் சுட்டுக்கொண்டு வந்த வேட்டைக்காரர்களைப் போல பொலிஸ்காரர்களுக்கு பரமேஸ்வரத்தார்தான் கிடைத்தார்.

கேள்விக்குமேல் கேள்வி கேட்டு, உருட்டிப்பிரட்டி அவரது உயிரையே எடுத்துவிடுவார்கள் போலிருந்தது.

பரமேஸ்வரத்தாருக்கு 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற நிலை. அவர்களிடமிருந்து தப்பித்து வீட்டுக்கு வந்துசேர போதும் போதுமென்றாகிவிட்டது. இப்போதெல்லாம் பரமேஸ்வரத்தார் எவரோடும் எதுவும் பேசுவதில்லை. தானும் தன்பாடும் என்று சீவிப்பதாகக் கேள்வி.

# தேடல்

இலக்கிய நயம்

ரசிகன் தருவது

மன்னன் மீது
அவளுக்கு மையல்!

மன்னன் இளைஞன்
மயக்கும் அழகன்!

வண்ண முகத்தினன்
கன்னப் பரப்பினில்
சின்னக் குழியினன்!

முத்துப் பல்லினன்
மோக நகையினன்!

காந்த விழியினன்
கவரும் எழிலினன்

அழகு உதட்டினன்
பழகு மொழியினன்!

கரும்பு போல் நீண்ட
இரும்புக் கையினன்!

விம்மிய தோள்கள்
வீங்கிய மார்பு!

மன்னனின் உருவம்
மனக் கண்ணில் வந்தது!

தன்மான நாட்டினை
கண்போலக் காப்பவன்!

பகையினை வென்று
நகையினைப் பொழிபவன்!

இளைஞனே ஆயினும்
அறிவில் முதியவன்!

வாளினை வேலினை
சுழற்றும் சூரன்
தாள்பணியாத மக்களின்
தானைத் தலைவன்!

மன்னன் உலா
மக்களுக்கு இன்பம்!

மாடத்தில் நின்று
நோக்குகின்ற
மங்கையர்க்கு
இரு மடங்கு இன்பம்!

'இவரை மணப்பவள்
எவளோ?' என்று
கன்னி மாடங்களில்
கனல் மூச்சுக் கிளம்பும்!

பெண்களை ஆண்கள்
இரசிப்பது போன்றே
ஆண்களைப் பெண்களும்
இரசிப்பதும் வழக்கம்!

அங்கம் அங்கமாய்
எண்ணி மகிழ்வதும்,
மனதுக்குள் தழுவி
மகிழ்ச்சி கொள்வதும்
ஆண்களுக்கு மட்டும்
ஒதுக்கிய விதியா?

பெண்களும் மனதில்
கனவுகள் வளர்ப்பர்

புரவியில் ஏறி
மன்னன் வருகையில்
அவன் மார்பினை



நோக்கி
விழியம்புகள் பாயும்!

முதுகின்மீதும்
மோக விழிகள்
துரத்தித் துளைக்கும்!

அப்படித்தான் அவளும்
உலாவந்த மன்னனை
கண்களால் களவெடுத்தாள்!

அருகில் நின்ற தோழிகளும்
உருகித்தான் நின்றார்கள்!

"பால் போன்ற முகமடி
வாள் போன்ற மீசையால்
பாழ்பட்டுப் போச்சடி"
என்றாள் ஒருத்தி.

இவளுக்கோ அவள்மீது
பொல்லாத எரிச்சல்!

"போடி பைத்தியம்,
வாள் மீசைதானடி
கொஞ்சும்போது
குறுகுறுப்பு ஊட்டும்!"
என்றாள் ஒருத்தி குறும்பாக.

இவளுக்கு அவள்மீது
பொறாமை வந்தது!

"கட்டியணைக்க
கைகள் போதுமோ?
கட்டழகர் நெஞ்சு
கைக்குள் அடங்காதே!"
என்றாள் இன்னொரு
வாயாடி.

இவளுக்குள் அவளை
எட்டி உதைக்கும் கோபம்!

"உதடுகளைப் பார்த்தாயா
உயிர்வரை
உறிஞ்சியே
குடித்துவிடுவாரடி!"
என்றாள் ஒருத்தி
ஏக்கத்தோடு!

அவர்கள் பேச்சு
உள்ளூர இன்பமாயும்
இருந்தது.
ஓர் ஓரத்தில்
பொறாமையும்
உதித்தது!

"போதுமடி உங்கள்
வர்ணனை!" என்றாள்.

"உனக்கேன் உறுத்தல்
உனக்குள் மன்னனோ?"
சந்தேகமாய் துருவினாள்
ஒருத்தி!

"சே... போடி
ஆண் மகன் ஒருவரை
இப்படியா பேசுவது?"

"ஆண்கள் மட்டும் நம்மை
உச்சி முதல் உள்ளங்கால்வரை
ஒன்றுவிடாமல் வர்ணிக்கலாமாக்கும்!"
இடக்காக கூறிச் சிரித்தனர்
இளம் பருவச் சிட்டுக்கள்.

தன் கள்ளத்தை அவர்கள்
கண்டு கொள்வரோ என்று
அவளுக்குள் குறுகுறுப்பு!

காட்டிக் கொடுக்கும் புத்தி
காதலுக்கு உண்டு!

இதயத்தின் ஆழத்தில்
ஒளித்து வைத்தாலும்
உதயத்து சூரியனாய்
உலகுக்குத் தெரிந்துவிடும்!

எங்கே தன் காதலும்
பரகசியமாகிவிடுமோ என்று
பாவை அவள்
பள்ளியறைக்கு ஓடிவிட்டாள்!

பள்ளியறையின் தனிமையில்
தோழிகள் பேச்சை
கள்ளியவள் மீட்டாள்!

"என்ன யோசனை
கண்ணே பேசடி!
கனியிதழ் காட்டடி
சுவையினைக் கூட்டடி!"

மன்னன் அவளது
மார்பினில் தவழ்ந்தான்!
மங்கை அவனது
முதுகினை அளந்தாள்!

விம்மிய தோள்களை
இதழ்களால் ஒற்றினாள்.

விரிந்த மார்பினை
விரல்களால் அளந்தாள்!

"வித்தைகள் என்னை
சொக்க வைக்கின்றன!
தேன் இதழ் மருத்துவம்
தேகத்தை புரட்டிப் போடுகிறது!"
மன்னன் விழிகள் செருக
வார்த்தைகள் இறக்கினான்!

அவளுக்கோ அவன்
வார்த்தைகள்
நகைப்பைத் தந்தன!

முத்துக்கள் கொட்டியது போல
அவள் சிரிப்போசை
எழுந்தது.

பதிலுக்கு யாரோ
சிரிப்பது போல் கேட்டது.

கைகளை நீட்டி
படுக்கையில் தேடினாள்.
'யாருமே இல்லையே
யான் கண்டது கனவா?'
வெட்கித்து விழி திறந்தாள்.

எதிரே தோழிதான்
சிரித்தபடி நின்றாள்!

"என்னடி நினைப்பு?
ஏனிந்த நகைப்பு?
யாரை நீ தேடினாய்?
யாருக்காய் ஏங்கினாய்?"
என்றவள் கேட்டாள்.

"இரவினில் வருவேன்
என்றவன் எனது
கனவில்தான் வந்தானடி!
வந்தவன் என்னை
வாரியணைப்பதாய்
பொய்க் கனவு தோன்றி
மெய்யினை மறைத்ததடி!

மயக்கத்தில் விழித்தவள்
மையலில் அவனை
பக்கத்தில் தேடினேன்
காலியாய்க் கிடந்தது
படுக்கையடி!"

காதல் கொண்ட பெண்ணின்
இந்த தவிப்பைத்தான்
குறுந்தொகைப் பாடல்
கூறுகிறது:

**"கேட்டிசின் வாழி தோழி அல்கல்
பொய்வ லாளன் மெய்யுறன் மரீ இய
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட
-ஏற்றெழுந்து
அமளி தைவந் தனளே"**

குறும்தொகை-30.

# சிந்தியா பதில்கள்

★ **புலிகளோடு பேசினால்தான் நிரந்தர சமாதானம் ஏற்படும் என்று கூறியுள்ளாரே ஜனாதிபதி? சில நாட்களுக்கு முன்னர் பேச்சே கிடையாது என்று கூறியது எந்த ஜனாதிபதி?**

மா.வீரசிங்கம், கொழும்பு-09.

பேச்சே கிடையாது என்று கூறியதற்கு உலக இராஜதந்திரிகளிடம் ஏற்பட்ட அதிருப்தியைச் சமாளிக்கத்தான் பின்னைய பேச்சு! ஆனால் முன்னர் கூறியதுபோல, "பேச்சில்லை போர் வீச்சு" என்பதுதான் உண்மையான நிலைப்பாடு!

●●

★ **பாகிஸ்தான் இந்திய எல்லையில் இருந்து படைகளை விலக்குமாறு அமெரிக்கா கூறியுள்ளதன் நோக்கம் என்னவோ?**

கே.இன்பராஜ், திருமலை.

அட்டகாசமான நாடகம்! படைகளை விலக்கப் போவதாக பாகிஸ்தான் தளபதியே கூறியபின்னர் அமெரிக்காவும் அதையே கூறி நாடகமாடியிருக்கிறது! இராணுவ ஆட்சி தொடர்ந்தால் பாகிஸ்தான் தன் கட்டுப்பாட்டுக்குள் நிற்காதோ என்று அமெரிக்காவுக்கு யோசனை. அதனால்தான் 'நீ கட்டுப்படாவிட்டால் இந்தியா பக்கம் சாய்வோம்' என்று பாகிஸ்தானை மிரட்டுவதற்கான தந்திரமும் இதில் இருக்கிறது. இந்திய மக்களது நண்பனாக நாடகமாடி தென்னாசியாவில் எதிர்ப்பின்றி காலூன்றும் கபடமும் இதில் இருக்கிறது.

●●

★ **தமிழகத் தேர்தல் முடிவுகள்படி அடுத்த முதல்வராகும் வாய்ப்பு யாருக்கு? கருணாநிதியே தொடர்வாரா சிந்தியா?**

சி.ரகுநாதன், கொழும்பு-11.

ஜெயலலிதா இரும்புப் பெண்மணி. தலைச்சிறந்த தந்திரி. தலைக்கனம் மட்டும் இல்லையானால் இந்த வீழ்ச்சியும் நேர்ந்திருக்காது! தற்போது மூப்பனாரை வீடு தேடிப் போய் பார்த்திருக்கிறார் ஜெயா. தமிழ்நாட்டில் இரண்டு காங்கிரசும் கைகோர்த்து நின்று, ஜெயாவுடன் கூட்டணி வைத்தால், சட்ட சபைத் தேர்தலில் ஜெயம் ஜெயா பக்கம்தான்!

●●

★ **இன்றைய அரசியல்வாதிகளை யாருக்கு ஒப்பிடலாம்?**

அ.புருஷோத்தமன், கண்டி.

கவியரசு கண்ணதாசன் கூறிய கதை ஒன்று:

கரிகாலன் கல்லணையைக் கட்டினான். கட்டி முடித்த நாளன்று பெரிய விழாக் கொண்டாடினான். பிரதானி, ஜோதிடர் போன்ற பலர் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

"கல்லணை உறுதியாக இருக்கிறது. ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வெளிவர முடியாது!" என்று கரிகாலன் சொல்லிக் கொண்டிருந்தபோது, இரண்டு வரால் மீன்கள் உட்புகுந்து வெளிவந்து விழுந்தன.

கரிகாலன் திகைத்துப்போய், "தண்ணீர் வெளிவரமுடியாத அணைக்கட்டில் மீன்கள் எப்படிப் புகுந்து வந்து விழுந்தன?" என்று கேட்டான்.

அதற்கு ஒரு ஜோதிடன் சொன்னான்:

"இது எதிர்காலத்தைப் பற்றியகெட்ட அறிகுறி பிரபு! எதிலும் புகுந்து வெளிவரக் கூடிய அரசியல்வாதிகள் எதிர்காலத்தில் ஜனிப்பார்கள் என்பதற்கு அறிகுறி!"

●●

★ **ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று தமிழ் மக்கள் தீர்மானிக்கட்டும் என்று கூறியுள்ளதே கூத்தணி?**

எஸ்.செல்வக்குமார், மட்டக்களப்பு.

மக்களே தீர்மானிக்கட்டும் என்றால் இவர்கள் ஏன்? இவர்களது கட்சிகள்தான் ஏன்? அம்மையாரை ஆதரித்தால் தம்பிமாரின் கோபத்துக்கு இரையாக நேரும் என்பதாலும், அம்மையாரை எதிர்க்கவும் முடியாமலும் எடுத்த நழுவல் முடிவு இது! அன்று சிறிமாவோ அம்மையாரை எதிர்த்த கூட்டணி, இன்று சந்திரிக்கா அம்மையாரை எதிர்க்கப் பின் நிற்பது ஏன்? அம்மையாருடன் உள்ள அபிமானம்தான் காரணம்!

●●

★ **குத்தலாகப் பேசுவது என்றால் என்ன?**

எம்.ரிபாயா, புத்தளம்.

ஹொலிவூட் நடிகைகளான எலிஸபெத் டெய்லர், லோலா பிரிஜிடா இருவரும் கீரியும், பாம்பும் போல, ஒருவரை ஒருவர் வாரிவிட்டுக் கொண்டே இருப்பார்கள். இருவரும் பல முறை திருமணம் செய்துகொண்டவர்கள்.

லோலா பிரிஜிடா நான்காவது தடவையாக சற்று வயதான ஒரு கோடீஸ்வரரை மணந்து கொண்டார்.

சில நாட்கள் கழித்து எலிஸபெத் டெய்லரும், லோலா பிரிஜிடாவும் ஒரு விருந்தில் சந்தித்து உரையாடினார்கள். அப்போது லோலா பிரிஜிடா, "நான் நிறைய பழங்காலப் பொருட்களைச் சேகரித்து வைத்திருக்கிறேன்!" என்று பெருமையாகக் கூறினார்.

உடனே எலிஸபெத் டெய்லர் குத்தலாகக் கூறினார்:"

"ஆமாம் பார்த்தேன் உங்களுடைய கணவரை!"

●●

★ **வடக்கு-கிழக்கில் இம்முறை யாருக்கு வாக்குகள் விழும்?**

பா.ஜெயதேவன், வவுனியா.

நல்ல வாக்குகளைக் கேட்கிறீர்களா?
கள்ள வாக்குகளைக் கேட்கிறீர்களா?!

●●

★ **சிந்தியா! ஜனாதிபதித் தேர்தலில் வடமேல் மாகாணசபைத் தேர்தலை ஓரம்கட்டுமளவுக்கு வன்முறைகள் தலைதூக்கும் என்கிறார்களே?**

எம்.இ.ப்திகார், பேருவளை.

சொல்பவர்கள் தீர்க்கதரிசிகள்!

●●

★ **'முதல்வன்' தீபாவளிக்கு வருவது உறுதியா? 'ஹேராம்'?**

அ.தனேந்திரன், ஹெந்தளை.

'ஹேராம்', 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' இரண்டும் தாமதமாகும் போல் தெரிகிறது. 'முதல்வன்' தயாராகிறான்!

●●

★ **சார்ஜாவில் இலங்கை அணியின் தோல்வியை பார்த்ததும் உமது கரிநாக்குத்தான் ஞாபகம் வந்தது. இலங்கை அணி இலங்கையில் வென்றாலும் வெளிநாடுகளில் வெல்வது தற்போது சாத்தியமில்லை என்பதாக நீர் தானே கூறினீர்! சிந்தியாவே இனிமேல் இப்படிக் கூறாதீர்! உமது வாக்குப் பலித்துவிடுகிறது?**

ஏ.சுந்தரலிங்கம், கண்டி.

நாக்கும் இல்லை, வாக்கும் இல்லை. அணியின் திறன் அறிந்து நான் கூறிய பதில் அது! எனினும் இலங்கை அணி மறுபடி தேறிவருகிறது! வட்மோர் தட்டி நிமிர்த்தி விடுவார் போலத்தான் தெரிகிறது.

●●

★ **'பூப்பறிக்க வருகிறோம்' படத்தில் புதுமுகம் அஜய் நன்றாக நடித்துள்ளார் என்கிறேன். நீர் என்ன கூறுகிறீர்?**

எஸ்.புவன், கொழும்பு-15.

'ஆம்' என்கிறேன். புதுமுகம் என்று நம்பமுடியாதளவுக்கு, கமராக் கூச்சமே இல்லாமல், நடிப்புலக இமயத்தின் முன்னால் பயமே இல்லாமல் நடித்துள்ளார். இளம் கன்று பயமறியாதுதானே!

●●

★ **சிந்தியா! உமக்குப் பிடித்த படித்த கதை ஒன்று கூறுங்கள் எனக்காக?**

வி.செல்வநிதி, மாத்தளை.

தளபதி ஒருவன் சேனையின் தலைமைப் பொறுப்பை ஏற்றான்.

சேனைகள் எல்லாம் கைதட்டி அவனை உற்சாகத்தோடு வரவேற்றன. திடீரென்று இன்னொரு தளபதி தோன்றி அவனைத் தூக்கில் போட்டுவிட்டு தளபதி ஆனான்.

சேனைகள் முன்பைவிடப் பலமாகக் கைதட்டி மகிழ்ச்சி கொண்டாடின.

மூன்றாவதாக ஒருவன் அவனையும் கொன்றுவிட்டுத் தலைவனாகினான்.

சேனைகள் கைதட்ட விரும்பிக் கைகளைத் தூக்கின. தடுத்து நிறுத்திய தளபதி அமைதியாகக் கேட்டான்:

"நீங்கள் கை தட்டுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் எதற்காகக் கை தட்டுகிறீர்கள்? அவன் கொல்லப்பட்டதற்காகவா? நான் தலைவனானதற்காகவா?"



'முதல்வன்' படத்தில் அர்ஜுன்-மனிஷா

சேனைகள் உற்சாகமாகக் கூறின:

"அவன் கொல்லப்பட்டதற்காக!"

"நான் தலைவனாகியதற்கு உங்கள் பரிசு என்ன?" என்று கேட்டான் தளபதி.

சேனைகள் தங்கள் இருதயத்தை மூடிக் கொண்டன.

இருதயத்தை மூடமுடியாத ஒருவன், தூரத்திலிருந்து கூச்சலிட்டான்:

"இந்தச் சனியன் எப்போது ஒழியுமோ!"

●●

★ **சிந்தியா! ஜனாதிபதித் தேர்தலை நடத்த முன்வந்தது இனப்பிரச்சனை தீர்வுக்கு ஆணை கேட்பதற்கு என்கிறாரே அம்மையார்?**

சி.சுகுணா, திருமலை.

அப்படியானால் பாராளுமன்ற தேர்தலை அல்லவோ நடத்தியிருக்க வேண்டும்? ஜனாதிபதித்தேர்தலில் சென்றமுறைகிடைத்த பெரும்பான்மை போல இனிமேல் எந்த யுகத்திலும் கிடையாது. தவிர ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதால் அரசியலமைப்பை மாற்ற முடியாது. பாராளுமன்றத்தில்தான் அதனைச் செய்யலாம். அதற்கு தற்போதுள்ள பெரும்பான்மை போதாது.

ஆகவே அதற்கு தேர்தலை நடத்தி, பெரும்பான்மை பெற்று அரசியலமைப்பை மாற்றியிருக்கலாமே!

●●

★ **ஜனாதிபதித் தேர்தலை இத்தனை அவசரமாக அறிவிக்க யாது காரணம்?**

க.அருந்தவராஜா, கல்கிசை.

மேலும் தாமதித்தால், இப்போதுள்ள வாய்ப்புக்களும் இல்லாமல் போய்விடும் என்பது தவிர வேறு காரணம் யாதும் இல்லை!

●●

ஸ்போர்ட்ஸ்

## சபீருக்குப் பதிலாக யூனூஸ்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலிய அணியுடன் 3 டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ளது. இந்தப் போட்டிகளில் பங்குகொள்ளும் பாகிஸ்தான் அணி வீரர்களது விவரம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

ஆனால் கடைசி நேரத்தில் இந்த அணியில் இடம்பெற்றிருந்த இளம் வேகப்பந்து வீச்சாளர் சபீர் அஹமட் நீக்கப்பட்டுள்ளார். இவர் 'பந்தை எறிவதா'கக் குற்றம் சாட்டப்பட்டதால் சர்வதேசக் கிரிக்கெட் சபை இவரை அணியில் சேர்க்க வேண்டாம் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கூறியது. அதற்கிணங்க சபீர் அஹமட் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சபீல் அஹமட்டிற்குப் பதிலாக அனுபவம் மிக்க வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனூஸ் சேர்க்கப்பட்டுள்ளார். சிறந்த வேகப்பந்து வீச்சாளரான வக்கார் யூனூஸ் அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியில் இடம் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா வெற்றி

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையே கான்பூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று 1-0 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 256 ஓட்டங்களைப் பெற்றது. கிறிஸ் கெய்ன்ஸ் 53 ஓட்டங்களை எடுத்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 330 ஓட்டங்களை எடுத்தது. ரமேஷ் 83 ஓட்டங்களையும், தேவங்காந்தி 88 ஓட்டங்களையும் எடுத்தனர். டானியல் வெட்டோரி 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நியூஸிலாந்து இரண்டாவது இன்னிங்ஸில் 155 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஃபிளெமிங் (31), பாரரே (48), மக்மில்லன் (31) ஆகிய மூவர் மட்டுமே இரட்டை இலக்க ஓட்டத்தைத் தொட்டனர். கும்ப்ளே சிறப்பாகப் பந்துவீசி 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் 74 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இந்தியா வெற்றி இலக்கைத் தொட 82 ஓட்டங்களை எடுப்பதற்காக இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது. மடமடவென 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்த இந்தியா அதன்பின் விக்கெட்டுக்களை இழக்காது 83 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. 4 நாட்களுடன் முடிந்த இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் டெண்டுல்கர் 41 ஓட்டங்களுடனும், தேவங்காந்தி 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தப்போட்டியில் மொத்தம் 10 விக்கெட்டுக்களை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளே ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி ஒக்டோபர் 29 முதல் நவம்பர் 2 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியும், இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெறவிருக்கும் 5 ஒருநாள் போட்டிகளும் இலங்கையில் ஈ.டி.வி. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படவுள்ளன.

## கேர்ஸ்டன் இடம்பெறவில்லை

ஸிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் செய்த அவுஸ்திரேலியா அங்கு ஸிம்பாப்வேயுடன் நடந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் வெற்றிபெற்று நாடு திரும்பியுள்ளது.

இதைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா ஒக்டோபர் 29ம் திகதி ஸிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் செய்கிறது. அங்கு ஸிம்பாப்வேயுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தச் சுற்றுப்பயணத்தில் தென்னாபிரிக்க தொடக்க ஆட்டக்காரர் கேரி கேர்ஸ்டன் இடம்பெறவில்லை.

பயிற்சியின்போது கேர்ஸ்டனுக்கு கையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவரை நீக்கியிருப்பதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

## இவர்தான் அவர்



சுவலட்சுமி

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 24

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரானை எவ்வகையிலாவது தீர்த்துக் கட்டிவிட வேண்டுமெனக் கருதி அதற்கான திட்டங்களைத் தீட்டிய தலைமைக் குருக்களும் பரிசேயரும், யூதாசுக் காரியோத்தைப் பயன்படுத்த முடிவெடுத்தனர். எனவே இயேசு பிரானைக் கைது செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

தன்னை ஒழித்துக் கட்டுவதற்கு இவர்கள் போட்டுள்ள திட்டங்களை தேவகிருபையால் இயேசுபிரான் அறிந்து கொண்டார். மண்ணில் தன் கடமை முடிந்து, தான் பரலோகத்தில் தன் பிதாவிடம் போகவேண்டியதற்கான காலம் நெருங்கி வந்துவிட்டது என்பதனையும் அறிந்து கொண்டார். எனவேதான் அவர் தமது சீடர்களை அழைத்து இராப்போசன விருந்தையும் அளித்தார்.

*இந்த வேளையில் இயேசுபிரானின் இறுதிக் காலத்தில் நடந்த சில சம்பவங்களையும் தொகுத்துத்தரலாம் என்று கருதுகிறோம்.*

*இயேசு பெருமானுடன், அவருடைய இறுதிநாள்வரை மிக நெருக்கமாகவிருந்த யோவானின் நற்செய்தியிலிருந்து இவை தொகுக்கப்பட்டுள்ளன.*

இயேசுபிரான் சிலகாலம் கலிலேயாவில் சுற்றித்திரிந்தார். யூதாயேவில் கூடாரவிழா நடைபெற்றபோது அங்கு வருமாறு இயேசு பிரானை அழைத்தனர். ஆனால் "அதற்குரிய காலம் வரும்போது நான் அங்கு வருவேன்!" என்றார்.

### ஏன் அஞ்ச வேண்டும்?

தலைமைக் குருக்களாலும் யூதர்களாலும் பிடிக்கப்பட்டுவிடுவார். அதனால், அவர்களுக்குப் பயந்தே இயேசுபிரான் மறைந்து திரிகிறார்' என்று பலர் கருதினார்கள். அதேபோல் இயேசு பிரானிடமும் கேட்டார்கள். "பொது வாழ்வில் ஈடுபடவிரும்பும் எவரும் மறைவாகச் செயல் புரிவதில்லை. நீர் இவற்றை யெல்லாம் செய்வதால், உலகுக்கு உம்மை வெளிப்படுத்தலாமே?" என்று சொன்னார்கள். இதே போன்று இயேசுவைப்பற்றி பலவிதமான தகவல்கள் அப்போது பரவத் தொடங்கியிருந்தன. 'பரலோகத்திலுள்ள ஆண்டவரின் புதல்வன் என்றும் ஆண்டவரின் ஆணைப் படியே மக்களுக்கு நற்போதனைகளை வழங்க வந்தவர் என்றும் கூறிக்கொள்ளும் இவர் தனது எதிரிகளை ஆண்டவரின் பேரருளாலேயே சாய்த்துவிடலாம் தானே? 'அத்தகைய சக்தி படைத்தவர், சாதாரண மனிதர்களைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்?' என்றும் சிலர் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு வந்தனர்.

'இயேசுபிரான் தான் மேசியா' என்று பலரும், 'உண்மையான மேசியாவாக இவர் இருக்க முடியாது' என்று சிலரும் விவாதங்களில் ஈடுபட்டு வந்தனர். இதற்குப் பதிலளிக்குமுகமாக இயேசுபிரான் இவ்வாறு கூறினார்:

"எனக்கு ஏற்ற நேரம் இன்னும் வரவில்லை; உங்களுக்கு எந்த நேரமும் ஏற்ற நேரம்தான். உலகு உங்களை வெறுக்க இயலாது; ஆனால் என்னை வெறுக்கிறது. ஏனெனில் உலகின் செயல்கள் தீயவை என்பதை நான் எடுத்துக் காட்டி வருகிறேன். நீங்கள் திருவிழாவுக்குப் போங்கள்; நான் வரவில்லை. ஏனெனில், எனக்கு ஏற்ற நேரம் இன்னும் வரவில்லை," என்றார்.

இவ்வாறு இயேசுபிரான் கூறினாலும், சில நாட்களில் அவர் வெளிப்படையாக அல்லாமல் மறைவாகவே யூதேயாவுக்குச் சென்றார். கூடாரத் திருவிழாவுக்கு இயேசுபிரான் எப்படியும் வருவார், அவ்வேளையில் அவரைப் பிடித்துவிடலாம் என்றும் அவருடைய எதிரிகள் கருதியிருந்தனர்.

ஆலயத்தில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், இயேசுபிரான் மக்களில் பலரைச் சேர்த்து அருளுரை வழங்கலானார். அவ்வாலயத்தில் இயேசுவைப் பற்றித் தெரிந்திருந்த யூதர்களும் கூடியிருந்தனர். அவருடைய திருவாயிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு வார்த்தையும் மிகவும் அர்த்தம் பொதிந்ததாகவும் அரிய கருத்துக்களைக் கொண்டதாகவும் இருந்தன. அன்றுதான் இயேசுபிரானுடைய அறிவுரைகளைக் கேட்கும் வாய்ப்புப் பெற்ற யூதர்களில் சிலர், "இவர் படிப்பு வாசனையற்றவர் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் இவர் ஆழ்ந்த கருத்துக்கள் செறிந்த வார்த்தைகளை மிகச் சதாரணமாகக் கூறுகின்றாரே!" என்று வியப்படைந்தனர். இவ்வாறு ஆச்சரியப்பட்டவர்களுக்காக இயேசுபிரான் இவ்வாறு கூறினார்:

"நான் கொடுக்கும் போதனை என்னுடையது அல்ல; அது என்னை அனுப்பியவருடையது. அவருடைய திருவுளத்தின்படி நடக்க விரும்புவோர் இப்போதனை கடவுளிடமிருந்து வருகிறதா? அல்லது அதனை நானாகக் கொடுக்கிறேனா என்பதை அறிந்து கொள்வர். தாமாகப் பேசுபவர் தமக்கே பெருமை தேடிக்கொள்கிறார். தம்மை அனுப்பியவருடைய பெருமையைத் தேடுபவர் உண்மையுள்ளவர்; அவரிடத்தில் பொய்மை இல்லை.

மோசே உங்களுக்குத் திருச்சட்டத்தைக் கொடுத்தார் அல்லவா? எனினும் உங்களுள் யாரும் அச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில்லை. இப்போது என்னையும் கொல்லபார்க்கிறீர்களே!"

### பேய் பிடித்திருக்கிறது

இவ்வாறு இயேசுபிரான் கூறி முடித்ததும் சிலர் "உமக்குப் பேய் பிடித்திருக்கிறது. அதனால் தான் உம்மைக் கொல்லப் பார்க்கிறார்கள் என்கிறீர். அவ்வாறு உம்மைக் கொல்ல நினைப்பவர்கள் யார்?" என்று பதில் கேள்வியைக் கேட்டனர். இதற்கு இயேசுபிரான்,

"ஒய்வுநாளில் நான் செய்த ஒரே ஒரு செயலைப் பற்றி நீங்கள் அனைவரும் வியப்புறுகிறீர்கள். மோசே கொடுத்த விருத்தசேதனச் சட்டப்படி, நீங்களே ஒய்வு நாளில் விருத்தசேதனம் செய்கிறீர்கள்!- உண்மையில் விருத்தசேதனம் மோசேயிடமிருந்து வந்தது அல்ல; அது நம் மூதாதையர் காலத்திலிருந்தே உள்ளது- ஒருவர் ஒய்வு நாளில் விருத்தசேதனம் செய்தாலும் ஒய்வு நாள் சட்டம் மீறப்படுவதில்லையானால், அதே ஒய்வுநாளில் நான் முழு மனிதனையும் நலமாக்கியதற்காக நீங்கள் சினம் கொள்வதேன்? வெளித்தோற்றத்தின்படி தீர்ப்பளியாதீர்கள். நீதியோடு தீர்ப்பளியுங்கள்!

நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன் என்பவை உங்களுக்குத் தெரியும். ஆயினும் நானாக வரவில்லை. என்னை அனுப்பியவர் உண்மையானவர். அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்கு அவரைத் தெரியும். நான் அவரிடமிருந்து வருகிறேன். என்னை அனுப்பியவரும் அவரே" என்றார்.

"யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்; என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும். மறைநூல் கூறுவதுபோல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஒடும்!" என்றார்.

ஆலயத்தில் இயேசுபிரான் பேசிக் கொண்டிருக்கிறார் என்ற தகவல் தலைமைக் குருக்களுக்கும் பரிசேயருக்கும் எட்டியது. அவர்கள் இயேசுபிரானைப் பிடித்துக் கொண்டு வருமாறு ஆட்களை அனுப்பினார்கள். அவ்வாறு ஏவப்பட்டவர்கள் இயேசுபிரானுடைய வார்த்தைகளைக் கேட்டனர். 'இத்தகைய நல்ல கருத்துக்களை உதிர்க்கும் ஒரு பெருந்தகையை இவர்கள் ஏன் கைது செய்து தண்டனை வழங்கத் துடிக்கிறார்கள்?' என்று கருதிய அவர்கள், இயேசுபிரானைக் கைது செய்யத் தங்களால் முடியவில்லை என்று சொன்னார்கள். "இயேசுபிரான் எவருக்கும் தீங்கு பயக்காத வார்த்தைகளையே கூறுகிறார். அவரை ஏன் கைது செய்ய வேண்டும்?" என்று தலைமைக் குருக்களையே வினவினார்கள்.

அன்றையத் திருவிழா முடிவுற்றதும் தமது சீடர்களை அழைத்துக் கொண்டு ஒலிவ மலைக்குச் சென்றார். அங்கு ஒய்வெடுத்த பின்னர், அடுத்த நாட்காலையில் ஆலயத்துக்கு வந்தார். மக்கள் அவரைச் சூழ்ந்தனர். இயேசு பிரானும் அருளுரை வழங்கத் தொடங்கினார்.

## பாபம் செய்யாதவர்கள் கல் எறியட்டும்



### விபசாரிக்குத் தீர்ப்பு

பரிசேயரும் மறைநூல் அறிஞர்சிலரும் ஓர் இளம் பெண்ணின் கைகளைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்தனர். இயேசு பிரானிடம் நீதி கேட்க வந்தவர்கள் போல் அவர்கள் தங்களைப் பாவனை செய்து கொண்டனர். தங்களுடன் அழைத்துவந்த அந்த இளம் பெண்ணைக் காட்டி, "போதகரே! இப்பெண் ஒரு விபசாரி. இவள் விபசாரத்திலீடுபட்டிருக்கும்போது எம்மிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டாள். இவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும், என்பதுதான் மோசே எமக்களித்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்?" என்று கேட்டனர். இவர்கள் கூறிய எதையும் கேளாதவர்போன்று இயேசுபிரான் தரையில் எதையோ எழுதிக் கொண்டிருந்தார்.

திருச்சட்டநூல் அறிஞர்கள் விடாமல் இயேசுபிரானை நச்சரித்தார்கள் பலதடவைகள் கேட்டதன் பின்னர், இயேசுபிரான் அவர்களை நிமிர்ந்து பார்த்து, தனது வலக்கரத்தின் ஆட்காட்டி விரலால் அவர்களைச் சுட்டி, "உங்களில் எந்தப் பாபமும் செய்யாதவர் இப்பெண்மீது முதல் கல்லை எறியட்டும்!" என்றார்.

இயேசுபிரானின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அப்பெண்ணை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு முறைத்துக் கொண்டு ஒவ்வொருவராக அவ்விடத்தைவிட்டு வெளியேறினர்.

இயேசுபிரான் தொடர்ந்து தரையில் எழுதிக் கொண்டிருந்துவிட்டு தலை நிமிர்ந்து பார்த்தார். அந்த அபலைப் பெண்ணைத் தவிர வேறு எவரும் அங்கே காணப்படவில்லை.

அப்பெண்ணைப் பார்த்த இயேசுபிரான், "அம்மா! அவர்கள் எங்கே? நீர்குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா?" என்று பரிவோடு கேட்டார். அதற்கு அப்பெண், "இல்லை ஐயா!" என்றார். "நானும் தீர்ப்பளிக்கவில்லை, நீர் போகலாம்! இனிமேல் பாபம் செய்யாதீர்!" என்றார்.

(தொடர்ந்து வரும்)

**இராஜகுமாரன்**

---

**திருமறை [பு.ஆ] 21 விடை:** ☛ இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவர்

**பரிசு பெறுவோர்:**

1. **இ. ஜெனிபர்,** 37, கறவ் கெத்யவத்த, பலாங்கொட.
2. **எச். எம். றிபாஜி,** 85, புதிய சோனகத்தெரு, திருகோணமலை.
3. **அ. சலோமி,** 20, மத்தியாஸ் வீதி, மட்டக்களப்பு.
4. **கே. அரசேஸ்வரன்,** கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
5. **செல்வி ஷிரீன் காலித்,** எம்.சி.எஸ். கட்டிடம், தில்லையடி, புத்தளம்.

**திருமறை [பு.ஆ] 24** வினா :- விபசாரத்துக்கு திருச்சட்ட நூலில் என்ன தண்டனை என்று கூறப்பட்டுள்ளது?

நவம்பர் 06 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை – பு.ஆ.24 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

# கந்தசாமியும் முத்துத் தம்பியும்

**க: வாருங்கோ முத்துத் தம்பியர்! மத்தியஸ்தம் வேண்டாம், அனுசரணை போதும் என்று அம்மையார் கூறியிருக்கிறார். காதில் விழுந்ததோ?**

மு: காதில் விழவில்லை. கண்ணில்தான் விழுந்தது. அதாவது பத்திரிகைகளில் படிச்சனான். மருத்துவமனையில் அட்மிட் பண்ண உதவியாக ஒரு ஆள் இருந்தால் போதும், வைத்தியர் தேவை இல்லை என்கிறார். நோயைக் கண்டறிந்து வைத்தியத்தை வரையறுக்க வேண்டாம், நோயாளி படுக்கையிலேயே கிடந்தால் போதும் என்கிறார் அம்மையார்.



**க: நோய்க்கு நிரந்தர வைத்தியம் செய்தால், நிறைய செலவு செய்து போட்டாராக்கும் என்று வீரவிதானக் காரர் அம்மையாரை வசைபாடுவினம்தானே! அதுதான் அரை குறை வைத்தியம் போதும் என்று நினைக்கிறாராக்கும்!**

மு: சரியாகச் சொன்னீர் சத்தான கருத்தை! மணியாகச் சொன்னீர் முத்தான கருத்தை!

**க: ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டி நடத்தும் மர்மம் என்னவோ?**

மு: இது எதிர்பார்த்ததுதானே. நமது 'முரசு' முன்கூட்டியே சொன்னதுதானே நடந்திருக்குது!

**க: ஓமோம், ராஜதந்திரியாரின் வாய்க்கு சர்க்கரை போடலாம். ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கும் என்று அடித்தல்லோ கூறினவர்! அவர் என்ன ஜோசியரோ?**

மு: ஹி.ஹி. இதுக்கு ஜோசியம் தேவையில்லை. ஜோசியங்கள் பலிப்பதுமில்லை. அம்மையாருக்கு தன் அதிகாரம்தான் முக்கியம் என்பதை நன்கு விளங்கிக் கொண்டதால் அப்படியொரு முடிவைக் கூறியிருந்தவர்.

**க: சமாதானத்தை ஏற்படுத்தத்தான் முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படுகிறதாம்?**

மு: சமாதானம் என்ற வார்த்தை எதற்கெல்லாம் பயன்படுகுது பார்த்தியளோ? கடந்த முறை கலக்கல் வெற்றி பெற்றுக் கூட செய்யமுடியாததை, இந்த முறை எப்படிச் செய்யப் போகிறார்? இந்த முறை வெற்றி பெற்றால்கூட அரும் பொட்டில்தானே வெல்ல முடியும்.

**க: சமாதானத்தை எப்படி ஏற்படுத்துவாராம். மறுபடி யுத்தம் மூலம் சமாதானமோ?**

மு: அதே, அதே! பிறகு பாராளுமன்றத் தேர்தல் இருக்குதுதானே. அதுக்காக ஒரு யுத்தம்! அதற்குப் பிறகு உள்ளூராட்சித் தேர்தல். அதுக்கொரு யுத்தம்...

**க: மொத்தத்தில் பொதுஜன முன்னணி யுத்தத்தில் முன்னணியில் நின்றுதான் ருசி கண்டிருக்கிறது.**

மு: அதுக்காக பச்சை ரணில் லேசுப் பட்டவர் அல்ல. சும்மா கிடந்த ஸியாம் பொக்ஸ் கடித விளையாட்டை கூறியல்லோ நம் காதில் பூ வைக்கப்பார்க்கிறார்.

**க: புலிகளோடு பேசலாம் என்று சொல்கிறார்தானே?**

மு: சண்டை பிடித்துக் கொண்டு பேசலாம் எண்டுதானே சொல்லுகிறார். படைக்கு தலையையும், புலிகளுக்கு வாலையும், சனத்தின் காதுக்கு பூவையும் நீட்டுகிறார்.

**க: அம்மையார் ஒரு கடிதம் ரணிலுக்கு எழுத, ரணில் ஒரு கடிதம் அம்மையாருக்கு எழுத கடிதப்போர் ஜோராக நடக்குதல்லோ?**

மு: ஜனாதிபதி தேர்தலுக்காக நடக்கும் காகிதப் போரில் ஒரு கட்டம்பாரும் இது. இனப்பிரச்சனை தீராமல் இருப்பதற்கு ஒருவர் ஒருவரை குற்றம் சாட்டுவது கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து தந்திரம்தானே.

**க: காணி சுவீகரிப்பு நடக்காதாம். அம்மையார் சொல்லியுள்ளாராமே?**

மு: அதனை கைத்தடிகள் வந்து நம்காதில் செல்வானேன்? கோணகலயில் சில ஆயிரம் மக்களுக்காக சுடச்சுட அறிக்கை கொடுத்த அம்மையார், வலிகாமத்தில் பல இலட்சம் மக்கள் தொடர்புடைய பிரச்சனைக்கு நேரடியாக உத்தரவாதம் கூறுவதற்கு மட்டும் ஏன் தயங்க வேண்டும்? வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய ஒரு 24 மணிநேரம் போதுமே? ஏன் செய்யவில்லை? இதெல்லாம் என்னைக் குடைகிற கேள்விகள்.

**க: சந்திப்புக்களுக்கு போய்வந்து, சிந்திப்பில்லாமல் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுக்கும் ஆட்களுக்கு உப்பிடிக் கேள்விகள் குடையுறதில்லையோ?**

மு: சந்திப்பை கொடையாக நினைப்பவைக்கு சிந்திப்பு இருந்தால்தானே குடையுறதுக்கு! ஹாஹாஹா.

### ஜனாதிபதி தேர்தலுக்காக தமிழ்க் கட்சிகள் பாடிய பாடல்

ஆதரித்தாலும் குற்றமடா
ஆதரிக்காவிட்டாலும் துக்கமடா
ஒரு முடிவில்லாமல்
ஆடுகிறோம் இரு பக்கமடா!
வாடுகிறோம் படு வெட்கமடா!

அம்மாவை ஆதரித்தால்
அண்ணனுக்கு கோபம் வரும்.
அண்ணனை ஆதரித்தால்
அம்மாவுக்கு கோபம் வரும்
யாரைத்தான் ஆதரித்தாலும்
தம்பிக்கு கோபம் வரும்!

ஆதரித்தாலும் குற்றமடா
ஆதரிக்காவிட்டாலும் துக்கமடா!

(தேம்பும் ஒசை)




**காதிலை பூ கந்தசாமி**

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# அளவு



← மட்டே பெண்டர் இடமிருந்து 4 வதாக காணப்படுபவர் உலகிலேயே மிகக் குள்ளமான பெண் என்று கின்னஸில் பதிவுபெற்றுள்ளது.

இவர் தென் ஆபிரிக்கா ஜோஹான்ஸ்பேர்க் நகரைச் சேர்ந்தவர். இவருடைய உயரம் ஆக 65 சென்டிமீட்டர் (2 அடி 1 1/2 அங்குலம்)

ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

# தசை மலை



எடை 30 கிலோகிராம் (66 இறாத்தல்).

அண்மையில் நைவால் தலைநகரான நைரோபியில் அந்நாட்டைச் சேர்ந்த குள்ளர்களுடன் சேர்ந்து செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோது பிடிக்கப்பட்ட படம் இது.

சாதாரணமான உயரம் பருமனுடைய பெற்றோருக்கு குள்ளமான அல்லது அதி உயரமான பிள்ளைகள் பிறப்பது எலும்புத் தொகுதிகளில் ஏற்படும் ஒரு வகைக் குறைபாடாகும். 'ஒஸ்டியோ ஜெனெசிஸ்' என்று இந்நோயைக் குறிப்பிடுகிறார்கள். இந்நோயினால் பிடிக்கப்படும் குழந்தைகளின் எலும்புகள் வளர்ச்சியடையாமல் போய்விடுகின்றன.

← தசையா இது தசைமாமிச மலைபோல் அல்லவோ இருக்கிறது. இவர் என்ன சாதாரணமானவரா? இவர் யார் தெரியுமா? அமெரிக்காவைச் சேர்ந்த மொடல் அழகி இவர் என்றால் நம்புகிறீர்களா? உண்மையில் இவர் ஒரு மொடல் அழகிதான். விளையாட்டு சஞ்சிகைப் படங்கள், வாழ்த்து மடல்கள், கலண்டர்கள் போன்றவற்றுக்கு தனது உடலழகை 'போஸ்' கொடுத்து ஏராளமாகச் சம்பாதிக்கிறார். இவர் பெயர் ரெய்மின். இவரது எடை 1025 இறாத்தல் (538.14 கிலோ)

ஆனால் பாவம்- இவர் தனது உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காகத் தனது எடையில் 81.65 கிலோகிராமைக் குறைத்துவிட்டாராம்.

உலகிலேயே எடை கூடிய மொடல் அழகி என்ற உலக சாதனையை பல வருடங்களாகத் தக்கவைத்திருக்கிறார். முன்பும் இவரைப் பற்றிய தகவல் ஒன்று முரசில் வெளியாகியிருந்தது.

↓ டைம்லர் பென்ஸ் என்ற இந்த மோட்டார்கார் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் கார்களில் மிகவும் சிறியதும் வசதிகள் கூடியதுமாகும்.

இதனுடைய வெளிப்புற அளவு 2.5 மீட்டர் (8 அடி 4 அங்குலம்) இரு இருக்கைகளைக் கொண்ட இக்காரின் மேல்பாகத்தை கலப்பாகக் கழற்றி விரும்பிய வர்ணத்துக்கேற்றவாறு மாற்றிக் கொள்ளலாம்.

# தொங்கும் மனிதன்



# சூப்பர் குட்டி



↗ இதற்காகவே தேர்மோ பிளாஸ்டிக்கினால் பாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னதாகத் தயாரிக்கப்பட்டதாகக் கருதப்படும் 'ரோவர் மினி' என்ற காரைவிட 55 சென்டிமீட்டர் (1 அடி 8 அங்குலம்) நீளத்தில் குறைந்தது இந்தக்கார்.

அதனால் உலகிலேயே மிகச் சிறிய காராக உலக சாதனை படைத்திருக்கிறது.

# பூ



→ இது என்ன வண்ண வண்ணப் பூச்சியா? என்றுதானே நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை. இது ஒருவகையான கள்ளிச்செடி.

இதில் ஊசிபோன்று காணப்படுபவை உடலில் பட்டால் போதும். பயங்கரமான வலி ஏற்படும்.

இத்தாவரத்தை காயவைத்துத் தயாரிக்கப்படும் களிம்புக்கு கடும் கிராக்கி. சொறி சிரங்கு போன்ற வியாதிகளுக்கு அரு மருந்தாகப் பயன்படுகிறது!

மலரே!
மருந்தாகும்!
அழகில்
ஆபத்தும் இருக்கும்
என்பர். இந்த
அழகில் மருந்து இருக்கிறது!

↗ இங்கிலாந்திலுள்ள எடின்பரோவில் ஆண்டுதோறும் கலைவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுநலவாய நாடுகளிலிருந்து கலைக் குழுவினர் எடின்பரோ சென்று தங்கள் கலைநிகழ்ச்சிகளை நடத்துவார்கள்.

இக்கலைவிழாவில் 1947ம் ஆண்டு முதல் பலதரப்பட்ட கோமாளித்தனமானதும், தத்தமது அங்கங்களைக் கூறிய முனைகளால் குத்தியும் வெட்டியும் இன்னும் வேறு பல முறைகளைக்கொண்டு கோலப் படுத்தியும் ஆடும் ஆட்டங்களுக்கும் இடம் தரப்பட்டது.

1993ம் ஆண்டு ஆகஸ்ட் 15முதல் செப்டம்பர் 4ம் திகதி வரை 582 குழுக்களால் 1643 காட்சிகளில் 14 ஆயிரத்தி 108 விதமான கலை நிகழ்ச்சிகளில் பறவைக் காவடி நிகழ்ச்சி இப்பொழுது சேர்க்கப்படுகிறது. எடின்பரோ கலை விழாவில் 1993ம் ஆண்டு இடம்பெற்ற பறவைக் காவடி நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இதற்கு 'கமிகேஸ் ஃபீறீக் ஷோ' என்று பெயரிட்டுள்ளார்கள். உடம்பெல்லாம் கொக்கிகளைக் கொழுவிக் கொண்டு அந்தரத்தில் தொங்கி பார்வையாளர்களை இவர் பிரமிக்க வைத்தார். பார்க்கவே தலைசுற்றுகிறதல்லவா.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன் நிஷான் (22.10.1999)

நல்லூர் கல்வியங்காட்டைச் சேர்ந்த சிறி- நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் **நிஷான்** தனது முதலாவது பிறந்தநாளை 22.10.99 அன்று நோர்வே ஒஸ்லோவில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். நிஷானை அப்பா, அம்மா, நோர்வேயிலுள்ள பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அண்ணா றெஷான், அக்காமார் மயூரா, நசிகா மற்றும் இலங்கையிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பா, மாமி, மாமா, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர், நண்பர்கள், இவரை நல்லூர் கந்தன் அருளால் சகல சௌபாக்கியங்களுடனும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: க.கணேசலிங்கம்.